விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 04 ஞாயிற்றுக்கிழமை (16.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 059

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

## நாவற்குழியில் பல தமிழர்களை

# மூவாயிரம் இராணுவத்தினர் சுற்றி வளைத்து கைது செய்தனர்



### ஜனாதிபதி ஆணைக்குழுவில் அதிர்ச்சியூட்டும் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி இராணுவ முகாமின் கொமாண்டர் ஆர். டிபிள்யூ. துமிந்த தலைமையில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் திடீர் சுற்றிவளைப்பில் ஈடுபட்டு அப்பகுதியில் உள்ள பல தமிழர்களை கைது செய்துகொண்டு சென்றனர். அதில் பலர் இன்றுவரை எங்கு சென்றார்கள் என்பதே தெரியவில்லை என சாவகச்சேரியில் இடம்பெற்ற ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையில் அதிர்ச்சியூட்டும் வகையில் பலர் சாட்சியமளித்திருந்தனர்.

(23ஆம் பக்கம் பார்க்க...)

## இராணுவத்துக்கு எதிராக குவியும் சாட்சியங்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணையில் இராணுவத்துக்கு எதிராக சாட்சியங்கள் குவிந்து வருகின்றன.

கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல்களுடன் இராணுவத்தினர் நேரடியாக தொடர்புபட்டிருப்பதாகவும் இராணுவத்தினர் கொண்டு சென்ற தமது உறவினர்களை மீட்டுத்தருமாறும் ஆணைக்குழுவிடம் உறவுகள் கண்ணீருடன் வேண்டுகோள் விடுத்தும்

23 ஆம் பக்கம் பார்க்க..

## சனல் 4இல் விரைவில் நெஞ்சைப் பதற வைக்கும் காட்சி

### வைகோ தகவல்

தமிழினப் படுகொலைக்கு புதிய தோர் ஆதாரத்தை சனல் 4 விரைவில் வெளியாகக்கூடும் என்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

2009- ல் போரின் உச்ச கட்டத்தின் போது, சிங்கள இராணுவத்தினர் ஈழத் தமிழ்ப் பெண்களை வதைத்துக் கொன்ற காட்சி புதிய ஆதாரமாகக் கிடைத்துள்ளது.

அந்தக் கொடுமையை எழுத்தில் பதிய என் மனம் மறுக்கிறது.

ஐயோ! இப்படியும் ஒரு கொடுமையா? என்று புலம்பி தவிக்கிறது.

தமிழ்ப் பெண்கள் 15 பேரை சிங்கள இராணுவம் கதறக் கதறக் பாலியல் பலாத்காரம் செய்து பின்னர் படுகொலை செய்து, சிதைந்து போன அப்பெண்களின் உடல்களை உணவின்றியும், மருந்தின்றியும், குண்டு வீச்சுகளுக்கு மத்தியில் பதறித் துடித்துக் கொண்டிருந்த தமிழ் மக்கள் முன்னால் மண்ணில் வீசுகிறது.

அத்துடன் முடியவில்லை

23 ஆம் பக்கம் பார்க்க..

## கடும் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்த பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டத்தரணிகளால் விபரங்கள் பெறப்படுவதற்கு காணாமல் போனோரின் உறவுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரியில் நேற்றைய

23 ஆம் பக்கம் பார்க்க..

## எங்கள் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்யாதே!

### யாழில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் யுத்தகாலத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பான தகவல்களைப் பகிரங்கப்படுத்துமாறும், இடம்பெயர்ந்த யாழ். வலிகாமம் வடக்கு மக்கள் உட்பட சகல மக்களையும் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றுமாறு வலியுறுத்தியும் யாழ்ப்பாணத்தில் நேற்று மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மீனவர்கள் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை 10.30 மணியளவில் யாழ்.முனியப்பர் கோவிலுக்கு முன்பாக ஆரம்பமான இந்த கவனயீர்ப்புப் போராட்டம் நண்பகல் 12 மணிவரை இடம்பெற்றது.

நூற்றுக்கணக்கான மக்கள் இப்போராட்டத்தில் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

எமது வளங்களை பறிக்காதே! விலைவாசியை ஏற்றாதே!அந்நிய மீனவர்களை வெளியேற்று! எங்கள் மீனவரை வாழ விடு!, வலி.வடக்கில மீள்குடியேற்று! எங்கள் சொந்த

24 ஆம் பக்கம் பார்க்க..

## 13ஐ முழுமையாக அமுலாக்க ஜனாதிபதி தயாரில்லை!

அமைச்சர் வாசு ஊடகங்களிடம் தெரிவிப்பு



இலங்கையில் மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் 13-ம் அரசியலமைப்பின் முழுமையான அமுலாக்கலுக்கு அரசாங்கம், குறிப்பாக ஜனாதிபதி, தயாராக இல்லை என்று சமூக நல்லிணக்க அமைச்சர் வாசு

23 ஆம் பக்கம் பார்க்க..


## இராணுவம் மிரட்டல்

(யாழ்ப்பாணம்)

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்திற்கு செல்லவேண்டாம் என்று நலன்புரி நிலைய மக்களை இராணுவம் மற்றும் புலனாய்வாளர்களும் மிரட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை மன்னாரிலிருந்து இரண்டு பேருந்துகளில் இந்தப்போராட்டத்தில் பங்கு கொள்ள வருகைதந்தவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும்

23 ஆம் பக்கம் பார்க்க..



SISIL WOLRD

உங்கள் பொன்னான நேரத்தை மீதப்படுத்த

SISIL, SAMSUNG, WHIRL POOL, HITACHI, BEKO

சலவை இயந்திரங்கள் இப்போது எம்மிடம் இருந்து

கடன் அட்டைகளுக்கு விசேட விலை கழிவு மற்றும் வட்டி இல்லாத கொடுப்பனவு முறை

No106, K.K.S Road Jaffna. No125, K.K.S Road, Chunnakam. No17/3, Kandy Road, Kilinochchi.
021-2219291 021-2242335 021-2283755

(C-6503)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வேலைவாய்ப்பு

சம்பளம் 18000/=, 38000/= (தொழில் அடிப்படையில்) ஜேம்/கோடியல்/ பிஸ்கட்/ரயர்/ நூடில்ஸ்/ தண்ணீர் போத்தல்/சோயா/காமெண்ட் மற்றும் பல தொழிற்சாலைக்கு 18-50 வயது ஆண்-பெண் தேவை. (உற்பத்தி/லேபல்/பொதியிடல்/களஞ்சியப்பிரிவு) உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில். நண்பர்கள்+குழுக்களாக ஒரே தொழிற்சாலைகளில் (வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களுக்கு விசேடம்) வருகை அன்றே தொழிலுக்கு சேரலாம்.

**0778430179** (சி-6516)

## வேலைவாய்ப்பு

எமது கம்பனியில் சம்பாதிக்க ஆர்வமுள்ள விற்பனை பிரதிநிதிகள் தேவை. ஆர்வமும், துடிப்பும்,தன்னம்பிக்கையும் கொண்டவர்கள் எம்முடன் இணைந்து கொள்ளலாம்.

- பயிற்சி வழங்கப்படும்
- அனுபவம் அவசியமற்றது
- தங்குமிடம்&உணவு வசதிகள் இலவசம்
- வயதெல்லை 18- 35
- வெளிநாடு செல்லும் வாய்ப்புண்டு
- இருபாலாரும் இணைந்து கொள்ளலாம்
- அடிப்படை சம்பளம் 15,000 - 18,000

தொடர்புகளுக்கு: (5602)

**0775566226, 0771363797**

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும். (C-6504)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

தற்போது புதிய இடத்தில் வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



தற்போது எமது கிளை புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது இல. 30 கனகபுரம் வீதி, கிளிநொச்சிக்கு மாற்றப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், அன்பளிப்புப் பொருட்கள் உணவுப் பண்டங்கள் என்பவற்றை மிகவிரைவாக அனுப்பிட. 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான மிகக் குறைந்த கட்டணம்.

11Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1Kg க்கான மிகக் குறைந்த கட்டணம்

- லண்டன் - 650/=
- சுவிஸ்- 850/=
- பிரான்ஸ் - 750/=
- நெதர்லான்ட் - 850/=
- கனடா - 900/=
- நோர்வே - 900/=
- டென்மார்க் - 800/=
- இத்தாலி - 875/=
- அவுஸ்திரேலியா - 750/=
- ஜேர்மனி - 700/=



உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளை அனுப்பிட தொடர்பு கொள்ளவும்
0770569642



திருமுருகன் கொம் நெற்
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)
பிரதான வீதி, சங்கானை. 021 222 7835
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. (HNP வங்கிக்கு அருகாமையில்)
இல. 30,கனகபுரம் வீதி, கிளிநொச்சி
TCN EXPRESS இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6

3-5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம்



T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

17.02.2014 முதல் 22.02.2014 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்
(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்) (c-6505)


உங்கள் கவலைகளை மனம் விட்டுப் பேச நம்பிக்கையான ஒரு நண்பர் தேவையா?
மு.ப. 9.00-பி.ப. 1.00 வரை அழையுங்கள்
021 222 8117
கைகொடுக்கும் நண்பர்கள் (இரகசியம் பேணப்படும்) (சி-6522)

## சேவை முகவர்
## காணிகள், வீடுகள் விற்பனைக்கு

பிறவுண் வீதி, பஸ்தியன் A9-5பரப்பு, நுணாவில் 21 பரப்பு உரும்பிராய், கோண்டாவில், முடமாவடி, மணல்தறை லேன் ஆகியன. யாழ்.நல்லூரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். பழைய ஓடுகள் விற்பனைக்கு உண்டு. சுந்தரம் - 0774819801 (5609)

விளம்பரத் தொடர்புகளுக்கு...
0213210815,0215671532


## துயர் பகிர்வு



அமரர்
**இராசக்கோன் குழந்தைவேலு**
(ஓய்வுநிலை அதிபர், யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்)

14.02.2014 அன்று அமரத்துவம் அடைந்த அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அன்பு மருமகனும், எம் வித்தியாலய ஆசிரியருமாகிய திரு.க. சுகுந்தன் அவர்கட்கும் அன்னாரின் மனைவி, பிள்ளைகள், குடும்ப உறவுகளுக்கும் எம் அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்
(சி-6512)

## மின்தடை இரத்து

(யாழ்ப்பாணம்)

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த இன்று 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கான மின்தடைகள் யாவும் இரத்துச் செய்யப்படுகின்றதென யாழ் பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (செ)

## சவாரிப்போட்டி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி விவசாய சம்மேளனம் மற்றும் யாழ் மாவட்ட மாட்டுவண்டி சவாரி சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த சவாரிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு கருவம்பானை சவாரித்திடலில் இடம்பெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் தவிர்க்க முடியாத காரணத்தால் அப்போட்டி பிற்போடப்பட்டுள்ளதாக போட்டி அமைப்பாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முன்னர் வந்த செய்தி 18 ஆம் பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ளது. (க-23)

## சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் சிவகுருநாதகுருபீடம் வேதாந்த மடத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 7 மணி தொடக்கம் 10 மணிவரை கந்தர்மடம் குமாரசாமி வீதியை அடியவர்களின் துணையுடன் சிரமதான முறையில் துப்புரவு செய்யும் பணி இடம்பெறவுள்ளது.

மேற்படி பணியில் தம்மையும் ஈடுபடுத்திக் கொள்ள விரும்புவோர் காலை 6.30 மணிக்கு வேதாந்த மடத்தில் ஒன்று கூடும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)


## உடனடி வேலை வாய்ப்பு

(Management Trainees) 2014



STUDY&WORK IN NORTH PROVINCIAL

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு முகாமைத்துவ பயிற்சிக்கு யாழ்ப்பாணம் /கிளிநொச்சி/முல்லைத்தீவு/வவுனியா ஆகிய பிரதேசங்களில் பயிற்சி பெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

- பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
- பயிற்சியின் போது கொடுப்பனவுகள் வழங்கப்படும்(Fixed income packge 12000/=).
- பயிற்சியின் பின்னர் அடிப்படை சம்பளம் EPF/ETF அடங்கலாக ரூபா 60000/= மேல் பெறலாம்.
- தொழில் நிரந்தரமாக்கப்படும்.
- பயிற்சி காலம் 03-06 மாதங்கள் (2014,March-August)

GRANTON INTERNATIONAL (PVT)L.T.D
73,ST ANNE CHURCH, ROAD
ARIYALAI-JAFFNA
CONDUCT-0777274795/0215686466
(C-6523)

## ஆவரங்கால் கண்ணாரையம்பதி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் கோயில்


பூங்காவன சிறப்பு நிகழ்வுகள்

இன்று(16.02.2014) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவிலிருந்து வருகை தரும் சிறப்பு தவில் கலைஞர்களுடன் ஈழமண்ணின் புகழ் பூத்த தவில் நாதஸ்வர கலைஞர்கள் இணைந்து வழங்கும்

**நாதஸ்வர - தவில் சங்கமம்**

நாதஸ்வர கலைஞர்கள்

- "நாதஸ்வர கானவிநோதன்" P.S. பாலமுருகன்
- "நாதஸ்வர இளவரசன்" K.P. குமரேஸ்
- "நாத இசைமுரசு" R. சிவகுமார்
- "இசைவேந்தன்" K. நாகதீபன்



தவில் கலைஞர்கள்

- "கலைமாமணி" "கரவேகச்சக்கரவர்த்தி" மன்னார்குடி M.R.V. வாசுதேவன் (இந்தியா)
- "கலைமாமணி" "லயஞானசுரபி" K.G. கல்யாணசுந்தரம் (இந்தியா)
- தவில் சக்கரவர்த்தி தட்சிணாமூர்த்தி புதல்வன் "லயஞான பாஸ்கரன்" T. உதயசங்கர்
- "லயஞான பாலன்" P.S. செந்தில்நாதன்



இரவு 8.00 மணிக்கு ஆரம்பமாகும்

கண்ணாரையம்பாள் கோயில் ஆவரங்கால். பூங்காவனத் திருவிழா குழுவினர்.

விளம்பர அனுசரணை

சோதி றெக்ஸ்றைல்ஸ்
21, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(பிளவுஸ் பீஸ் காட்சியறை)
தொ.பே:- 021 222 2139

விஸ்ணு ஹாட்வெயார்
ஆவரங்கால், புத்தூர்.
(சி-6521)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாலாவியில் பஞ்சமாபாதகத்தை செய்ய எவர் துணிந்தாரோ?

## அகில இலங்கை இந்து மாமன்றம் அறிக்கை

பாவங்களையும் தோஷங்களையம் நீக்குகின்ற திருக்கேதீஸ்வரம் பாலாவி தீர்த்தக் கரையில் மனிதப் புதைகுழி கண்டு பிடிக்ககப்பட்டமை அச்சத்தையும் அதிர்ச்சியையும் அனைவருக்கும் தந்துள்ளது.

புண்ணிய பூமி என்று அழைக்கப்பட்ட இவ்விடத்தில் அவலமான காரியம் நிகழ்ந்துள்ளது. இச் செய்தி சைவ மக்களின் உள்ளத்தை மிகுந்த வேதனைக்கு ஆளாக்கியுள்ளது என அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

சைவத்தமிழர்களின் வரலாற்றுத் திருக்கோயிலாக விளங்குவது திருக்கேதீஸ்வரம். பாடல் பெற்ற பழைமை வாய்ந்த இத் திருத்தலத்தின் பெருமையை அறியாதவர்கள் இல்லை. பாவத்தைக் கழுவும் பாலாவி தீர்த்தத்தின் மகிமையை அனைவரும் உணர்வர். தமிழ்வேந்தர் காலத்தில் மாஞ்சோலைகள் சூழ்ந்த மாதோட்ட நன்னகர் என அழைக்கப்பட்ட புண்ணிய பூமி இது. பால் பொழியும் பசுக்களும் தோகை மயில்களும், புள்ளிமான்களும், தேன் அருந்தும் வண்டுகளும் அழகு தரும் திருக்கேதீஸ்வரத்தில் மனிதர்களை மண்ணுக்குள் யார் புதைத்தார்கள்? இடர்களையும் இறை நிலத்தில் இரக்கம் இல்லாது மனிதர்களைப் புதைத்தவர்களை மன்னிக்க முடியாது. அருள் மழை பொழியும் ஆண்டவன் சந்நிதானத்திற்கு அருகில் அவலமான காரியம் நிகழ்ந்திருக்கிறது. இந்தச் செய்தி சைவ மக்களின் உள்ளத்தை மிகுந்த வேதனைக்கு ஆளாக்கியுள்ளது.

பாவங்களையும் தோஷங்களையும் நீக்குகின்ற பாலாவி தீர்த்தக் கரையில் பலநூறு ஆண்டுகளுக்கு முன் பாண்டவர்கள், இராம கதாப்பாத்திரங்கள் ஏன் இராகுவும் கூட தேடி வந்து வழிபாடு செய்தார்கள். சிங்கள மன்னர்கள் கூட திருக்கேதீஸ்வரநாதனை சிந்தனையில் இருத்தி வழிபாடு செய்தார்கள். இன்றும் மொழி இனங்களை கடந்த திருக்கேதீஸ்வரப் பெருமானை தரிசிப்பதற்கு அனைவரும் ஆர்வமாக வருகை தருகின்றார்கள்.

வாழப்பிறந்த மனிதர்கள் வதம் செய்யப்பட்டு அநாதரவாக மாதோட்ட மண்ணுக்கு இரையாகியுள்ளனர். பஞ்சமா பாதகங்களை மதங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. பாலாவிக் கரையில் பஞ்சமா பாதகத்தை செய்ய எவர் துணிந்தாரோ? மாதோட்ட மண்ணில் கோயில் கட்டுவதென்றால் கூட பலரிடம் அனுமதி பெறவேண்டும். இதற்கான காரணம் மாதோட்டம் வரலாற்றுப் பூமி என்றும், அகழ்வு ஆராய்ச்சிக்குரிய நிலம் என்றும், புராதன பொக்கிஷம் என்றும் பிரகடனப்பட்டிருப்பதேயாகும். இந்தப் புண்ணிய மண்ணில் பிணங்களை வரிவரியாக அடக்கம் செய்ய எவர்தான் அனுமதித்தனரோ? கேதீஸ்வரப் பெருமானே! இக்கொடுமையை செய்தவரை நீ கேளாயோ?

மண்ணுக்குள் புதைக்கப்பட்டவர்கள் யார் பெற்றெடுத்த பிள்ளையோ யாமறியோம்! மண்ணுக்குள்ளே புதைத்தவர்களையும் யாமறியோம்! எல்லாம் அறிந்த இறைவா! யார் காணாவிட்டாலும் நீ கண்டிருப்பாய். உனக்கு தெரியாதது ஒன்றுமேயில்லை. ஊர் உறங்கலாம், உறவுகளுக்கு மறைக்கப்படலாம், உனக்கு உண்மையை யார் மறைக்க முடியும்? அறங்காத்த தெய்வமே! இதனை நீ உலகம் அறிய வைத்துவிட்டாய். பாலாவி கரையை பாவ பூமியாகப் பரிதவிக்கப் நீ விடமாட்டாய். அல்லற்பட்டு அழுது மாதோட்ட மண்ணுக்குள் இரண்டறக் கலந்தவர்களின் ஆத்மாவை நிச்சயம் நீ அணைத்திருப்பாய்.

இரக்கமுள்ள இறைவா! **இடரினும் தளரினும் எனது உறுநோய் தொடரினும் உனது கழல் தொழுது எழுவேன்** என ஞானசம்பந்தரின் பாடல் வரிகளை சமர்ப்பித்து தர்மம் நிலைக்க வழிசொல்லுங்கள் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.(அ-2)

## இராசி பலன்

16.02.2014
(மாசி 04, ஞாயிற்றுக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு
பிரதமை காலை 7.54 மணிவரை
பூரம் பின்னிரவு 5.57 மணிவரை
இராகுகாலம் 5.03-6.33 மணிவரை
சுபநேரம் 9.33-11.03 மணிவரை
சித்தாமிர்தம்

**மேடம்** பிறருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், பெரியோரால் மதிக்கப் படுவீர்கள் புத்திரரால் பெருமைகள் வந்து சேலராம்.

**இடபம்** சுபசெலவுகள் செய்து மகிழ்வீர்கள், நண்பர்கள் சந்திப்பால் நன்மை யுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும், பயணங்களால் பலனுண்டு, போசன நன்மை யுண்டு.

**மிதுனம்** உடன்பிறப்புகள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், பயணங்களால் பலனுண்டு, காரிய அனுகூலமான நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**கடகம்** எடுத்த காரியத்தை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், குடும்பத்தில் சில விவாதங்கள் ஏற்படலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** தன்னம்பிக்கை அதிகரிக்கும், கற்பனை மிகுதியான நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வய்ப்புண்டு, உறவினர் வருகையுண்டு புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்

**கன்னி** எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம், பெரியோரால் நன்மையுண்டு, மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள், சயன சுகக்குறைவான நாள்.

**துலாம்** உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொர்ருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** தொழிலை விருத்தி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், நண்பர்களின் உதவிகள், ஒத்தாசைகள் என்பன கிடைக்கலாம், தூரதேசச் செய்திகள் வந்து சேலராம்.

**தனுசு** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும், தந்தை வழி உறவினரால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.

**மகரம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், செலவுகள் அதிகமாகும், போசன சுகமுண்டு வேலைச்சுமை கூடும்.

**கும்பம்** களஸ்திர நன்மையுண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், முயற்சிகள் எளிதில் கைகூடும், நண்பர்கள் சந்திப்புண்டு, போசன சுகமுண்டு வருமானம் திருப்திதரும்.

**மீனம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு, பகைவர்கள் நண்பராகலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

வளவன்

## வாரம் ஒரு தகவல்

### நட்புக்கவலை

டாக்டர், இவன் என்னுடைய சிநேகிதன். இரண்டு பேரும் ஒரே அறையில் தான் தங்கிப் படிக்கிறோம். இவனை நினைத்தால் எனக்கு மிகவும் கவலையாக இருக்கிறது.

"என்ன விடயம்?"

"தலைமுடியை வாயில் வைத்து சாப்பிடுகிறான் டாக்டர். அது என்னமோ அப்படி ஒரு சுவை அவனுக்கு."

"இது போல் உலகத்தில் பலர் உண்டு. அதனால் இதுவொன்றும் பெரிய ஆச்சரியமில்லை"

"அப்படியா?"

"ஆமாம். இதைப்பற்றி சிலர் ஆய்வு செய்திருக்கிறார்கள்" முடியைச் சாப்பிடும் பழக்கம் பலருக்கு இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள்.

"அதற்கு என்ன காரணமாக இருக்கும்?"

"அது ஒரு மனோவியாதியாம். மனதிலுள்ள கோளாறு அது. இருந்தாலும் வயிற்றுக்குள் இடையூறு கொடுக்கும்"

"எப்படி"

"சாப்பிடும் முடியெல்லாம் வயிற்றுக்குள் போகும். அங்கு அது ஜீரணமாகாது. ஒன்றாகத் திரண்டு உருண்டு கட்டியாகிவிடும். அதன் பின் இடைஞ்சல் கொடுக்கும்"

"அப்படியானால் எப்படி அதை வெளியே கொண்டு வருவது?"

"சத்திரசிகிச்சை செய்து தான் வெளியே எடுக்க வேண்டும்."

"இவன் சுட அடிக்கடி வயிறு வலிக்கிறது என்று வயிற்றைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விடுகிறான்.

இவனை உடனடியாக கவனியுங்கள். எனக்கு மிகவும் அவஸ்தையாக இருக்கிறது டாக்டர். இரவு முழுவதும் தூக்கமில்லை"

"இவருடைய வயிறு தானே வலிக்கிறது. உங்களுக்கு என்ன அவஸ்தை?"

"இவனுடைய வயிற்றுக்குள் இருப்பது முழுவதும் என்னுடைய தலைமுடி டாக்டர்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் றோட்டரக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வு இன்று காலை 10 மணி முதல் ஒரு மணி வரை இலக்கம் 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இரத்தான நிகழ்வில் கழக உறுப்பினர்கள், ஆர்வலர்கள் கலந்து கொண்டு உயிர்காக்கும் உன்னதமான பணிக்கு உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 50 | 120 |
| தக்காளி | 60 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 35 | 40 |
| கோவா | 30 | 40 | 50 |
| கரட் | 70 | 70 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 30 | 50 | 60 |
| வாழைக்காய் | 30 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 40-100 | 110 | 70-100 |
| பெரிய வெங்காயம் | 40-70 | 90 | 60 |
| பாகற்காய் | 90 | 130 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 50 | 100 |
| ச ருணைக் கிழங்கு | 20 | 40 | 60 |
| பயற்றங்காய் | 170 | 150 | 100 |
| லீக்ஸ் | 60 | 80 | 100 |
| பீற்றூட் | 30 | 70 | 50 |
| கறிமிளகாய் | 70 | 150 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 180 | 320 |
| போஞ்சி | 40 | 80 | 60 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 15 |
| தேசிக்காய் | 40 | 70 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40 | 40-45 |
| இராசவள்ளி | 70 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடிப் பிரதேசத்தை நகரசபையாக்க தீர்மானம்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதன்படி நெல்லியடி நகரப்பகுதியையும் அதனை அண்டியுள்ள 20 கிராம சேவையாளர்பிரிவுகளையும் உள்ளடக்கிய பிரதேசத்தை நகரசபையாக மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக சபையினர் தீர்மானித்துள்ளனர்.

மேற்குறித்த பகுதிகளில் கூடிய வருமானம், மக்கள் பயன்பாடு அதிகரிப்பு, சனத்தொகை, பிரதேச பரப்பளவு என்பவற்றை கருத்தில் கொண்டே நகர சபையாகுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் சபையின் எல்லைக்குட்பட்ட வல்லை இந்து மயான பராமரிப்பாளர்கள் தமது மயானத்திற்கு அபிவிருத்தி வேலைகள் செய்வதற்காக வல்லை இந்து மயான அபிவிருத்தி சபையினை உருவாக்கி அதனை சபையுடன் இணைப்பதற்காக கோரப்பட்டதற்கு இணங்க அபிவிருத்தி சபைக்கான பதவிலக்கம் VADA. S.W/PS/CMB/07 என வழங்கப்பட்டுள்ளது.

நெல்லியடி சந்தையில் மரக்கறிகளை மொத்தமாக வழங்குகின்ற விவசாயிகள், 10கிலோ மரக்கறிக்கு ஒரு கிலோ கழிவு கொள்வனவாளர்களுக்கு வழங்க வேண்டுமென விவசாய சம்மேளனத்தினரால் அறிவுறுத்தப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றது.

இது தொடர்பில் விவசாயிகள் பாதிக்கப்படுவதாக சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு விவசாய சம்மேளனத் தலைவர் பொருளாளர், செயலாளர் ஆகியோருடன் கலந்து ஆலோசித்து முடிவெடுப்பதற்காக சபையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-60)




# அலுமினியங்களை களவாடிய பாரவூர்தி சாரதி கைதானார்

வதிரி மாலுசந்திப் பகுதியிலுள்ள கராஜ் கடையொன்றில் பாரவூர்தியை பழுதுபார்ப்பதற்காக வந்த நபரொருவர் அங்குள்ள பொருட்களை பாரவூர்தியில் ஏற்றிக் கொண்டு சென்ற பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த பகுதியிலுள்ள கராஜ்கடையொன்றில் பாரவூர்தியை திருத்துவதற்காக கொண்டு சென்றுள்ளார்.

அவ்வேளை கடை உரிமையாளர் பக்கத்திலுள்ள கடையொன்றிற்கு சென்றுள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தை சாதகமாக பயன் படுத்தி பாரவூர்தி சாரதி அங்கிருந்த அலுமினியப் பொருட்கள், வாகன பற்றறிகள், மின் விசிறி போன்ற பல பொருட்களை திருடி பாரவூர்தியினுள் மறைத்து வைத்துக் கொண்டு சென்று விட்டார். பின்னர் அங்கு திரும்பிய கடை உரிமையாளர் பொருட்கள் களவாடப்பட்டுள்ள மையை அறிந்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

தகவலையடுத்து தேடுதல் வேட்கையை மேற்கொண்ட நெல்லியடிப் பொலிஸார் பாரவூர்தி சாரதியையும் அதற்குள்ளிருந்த பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பாரவூர்தியின் சாரதியிடம் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-9-60)

# சுன்னாகம் சந்தைப்பகுதி குழாய் கிணற்று நீரில் அலுமினிய துகள்

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை




சுன்னாகம் சந்தைப் பகுதி வர்த்தகர்கள் மற் றும அப்பகுதி மக்களால் பாவனைக்குட் படுத்தப்படும் குழாக் கிணற்று நரில் அலுமினிய துகள்கள் காணப்படுவதால் அக் குழாய் கிணறறுநீரை குடிநீராக பயன்படுத்த முடியாத நிலை காணப் படுவதாக சுட்டிக்காட்டடப்பட்டுள்ளது.

குறித்த குழாய்க் கிணற்று பம்பி சேதமடைந்து காணப்படுவதாலேயே இவ வாறு அலுமினியத்துகள்கள நீருடன் கலந்துளளதாகவும் தெர விக்கப்படுகிறது.

சுன்னாகம் சந்தைப் பகுதி வர்த்தகர்கள், அப்பகுதி மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பயன்படுத்திவரும் இக்குழாக்கிணறு மேற்படி சேதமடைந்து காணப்படும் நிலையில் அதனை புனரமைப்பு செய்து தரும்படி வர்த்தகர்களினால் நேரடியாகவே வலி.தெற்கு பிரதேச சபையினரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டபோதும் இது வரையிலும்எவ்வித நடவடிக்கையும் மேற்கொள எப்படாத நிலையில் குழாக்கிணற்றுநீர் மேலும மாசடைந்து செல்வதாகவும் கடந்த ஒருமாத காலமாக இந்நிலை தொடர்வதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை குறித்த குழாய்க்கிணற்று நீரில் அலுமினிய துகள்கள் கலந்திருப்பதை அறியாத பொதுமக்கள், பயணிகள் தொடர்ந்தும் அந்நீரை அருந்திவந்த நிலையில் இதற்கான அறிவித்தல் பலகைகூட பிரதேச சபையினரால் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதையடுத்து குறித்த குழாய்கிணற்றுநீர் குடிப்பதற்கு உகந்ததல்ல என் பொதுமக்களால் வைக்கப்பட்டிருந்த எச்சரிக்கை பலகையும் அகற்றப்பட்டுள்ளது.

எனவே இவ்விடயம் தொடர்பில் பிரதேச சபை அலட்சியப்போக்குடன் நடந்து கொள்ளாது மக்கள் சுத்தமான குடிநீரைப்பெற்றுக் கொள்ள தகுந்த நடவடிக்கையை துரிதகதியில் மேற்கொள்ள வேண்டுமென பிரதேச மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-9)




# திருட்டு முயற்சி முறியடிப்பு; சந்தேகத்தில் இருவர் கைது

கரவெட்டி கொண்டபுலம் பகுதியிலுள்ள வீட்டினுள் திருடச் சென்ற திருடர்களை தாயும் மகளும் புத்திசாதுரியமான முறையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையால் சில பொருட்களை மாத்திரம் சூறையாடிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ள இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த தினம் நால்வர் அடங்கிய திருட்டுக் கும்பலொன்று கரவெட்டி கொண்டபுலம் பகுதியிலுள்ள வீடொன்றின் சமையலறையின் புகைபோக்கியூடாக புகுந்துள்ளனர்.

அச்சமயம் வீட்டினுள் உறங்கிக் கொண்டிருந்த தாயும் மகளும் திடீரென விழித்தெழுந்துள்ளனர். வீட்டினுள் கத்தி, பொல்லு என்பனவற்றுடன் பொருட்களை திருடிக் கொண்டிருந்த நால்வரையும் தாயும் மகளும் புத்துசாதுரியமான முறையில் எதிர்த்து செயற்பட்டமையால் உயிராபத்துக்கள் எதுவும் இடம்பெறாததோடு வீட்டிலிருந்த ஏனைய பொருட்களும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

ஆயினும் திருடர்கள் ஏமாற்றத்தோடு வீட்டிலிருந்த சிடி பிளேயரையும் ஏனைய சில பொருட்களையும் மாத்திரம் எடுத்துக் கொண்டு சென்றுள்ளனர்.

தகவல் அறிந்து ஸ்தலத்திற்கு மோப்ப நாய்கள் சகிதம் வந்த நெல்லியடிப் பொலிஸார் திருடர்களோடு போராடியதனால் ஒருவரின் சேட்டின் ஒரு பகுதி அவ்வீட்டினுள் கிடைத்துள்ளதையடுத்து அதைக் கொண்டு விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன் பயனாக சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-9-10)




தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினரின் ஏற்பாட்டில் சீனா மற்றும் இந்திய படகுகளின் அத்து மீறிய தொழில் நடவடிக்கைகள் உள்ளிட்ட ஐந்து முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுக் காலை யாழ்.முனியப்பர் கோவில் முன்பாக எதிர்ப்பு போராட்டம் இடம்பெற்ற போது... (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

# வீட்டில் மதுபானங்களை விற்றவர் கைது செய்யப்பட்டார்

(மானிப்பாய்)

மானிப்பாய் பகுதியில் போயா தினத்தன்று வீட்டில் மதுபானங்களை வைத்திருந்து விற்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று முன் தினம் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

போயா தினமான நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வீட்டில் மது வகைகள் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யப்படுவதாக மானிப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் குறித்த நபரின் வீடு சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதன்போது அங்கிருந்து ஒரு தொகை மதுபானங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் குறித்த நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த நபர் மீது வழக்கு பதிவு செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-9-23)

# யாழ்ப்பாணத்தில் நிழற்பட கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண த்தில் 16 ஆவது சர்வதேச நிழற்படக் கண்காட்சி முதல் முறையாக நடைபெறவுள்ளது.

குறித்த கண்காட்சி தேசிய நிழற்படக் கலைச் சங்கமத்தால் எதிர்வரும் 22, 23 ஆகிய திகதிகளில் யாழ்.இந்துக் கல்லூரி குமார சுவாமி மண்டபத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் சர்வதேச ரீதியில் 27 நாடுகள் பங்குபற்றிய மேற்படி கண்காட்சியில் பெறப்பட்ட மொத்தமாக 3 ஆயிரத்து 291 டிஜிற்றல் படங்கள் கிடைக்கப்பெற்றன. இதில் தேர்வு செய்யப்பட்ட 180 நிழற்படங்கள் காட்சிப் படுத்தப்படவுள்ளன.

அத்தோடு மேற்படி இரண்டு தினங்களிலும் சித்திரத்தை ஒரு பாடமாகக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் கற்கும் மாணவர்களுக்கும் இத் துறை சார்ந்தவர்களும் பயன்படும் வகையில் துறை சார்ந்தவர்களால் கருத்தரங்கும் இதே பாடசாலையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக் கருத்தரங்குகள் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரைக்கும், மறுநாள் ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் இடம்பெறும். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அரசியல் பலத்தை பயன்படுத்தி அரசிடம் பேரம் பேசுவோம் வாரீர்!

## மனோகணேசன் அழைப்பு

(கொழும்பு)

இந்த நாட்டில் சகல பெரும்பான்மை கட்சிகளையும் இனவாத பேய் உச்சந்தலையில் பிடித்தாட்டுகிறது.

நாம் ஏணி வைத்து ஏறி இவர்களின் உச்சந்தலையில் ஆணி அடித்து இந்த இனவாத பேயை விரட்ட வேண்டும்.

அதற்கு ஒரே வழி நாம் அரசியல் ரீதியாக எம் சொந்த பலத்தை உறுதி செய்வதுதான்.

எங்களுக்கு பலம் இருந்தால் மட்டுமே பச்சை, நீலம், சிவப்பு என்ற எல்லா நிறக்கட்சிகளும் எங்களை மதிக்கும் என்பது சத்திய வாக்கு.

நமக்கு அரசியல் பலம் இல்லாவிட்டால் நாம் வாழ்நாள் முழுக்க கூழைக்கும்பிடு போட்டு வாழவேண்டியதுதான் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

முன்னணியின் தேசிய அமைப்பாளரும், மேல்மாகாணசபை வேட்பாளருமான எஸ். ராஜேந்திரனின் ஏற்பாட்டில் வடகொழும்பு மட்டக்குளி கதிரானவத்தையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெரும்பான்மை இன அரசியல்வாதிகள் எங்களை உதைக்கும் பக்கம் எல்லாம் உருண்டோடும் பந்து என்றும், இலவச வாக்கு வங்கி என்றும் நினைக்கிறார்கள்.

இவர்களுக்கு தேவையான வாக்கு என்ற பொக்கிஷம் மட்டும்தான் இருகின்றது.

இதைத்தான் இவர்கள் குறி வைக்கிறார்கள். இதை எம்மிடமிருந்து இலவசமாக வாங்க இவர்கள் முயல்கிறார்கள்.

அது முடியாத பட்சத்தில் எமது இனத்தை சேர்ந்த தமது கையாட்களுக்கு மாறுவேடம் அணிவித்து அனுப்பி வைத்து வாங்க முயல்கிறார்கள்.

எங்கள் வாக்குகளை நாம் எப்படி இலவசமாக இவர்களுக்கும், மாறுவேடம் பூண்டு வரும் இவர்களின் கையாட்களுக்கும் கொடுக்க முடியும்?

எங்கள் இன உரிமையை உரக்க கேட்டதற்காக, என்னை எவரும் இனவாதி என்று சொன்னால் அது பற்றி நான் கொஞ்சமும் கவலைப்பட போவதில்லை. நான் பனங்காட்டு நரி. இந்த சலசலப்புக்கெல்லாம் அஞ்ச மாட்டேன்.

உண்மையான இனவாதிகளான இவர்கள் இன்று என்ன செய்கிறார்கள்? பூனையையும், வேப்பிலையையும், காக்கையும், குருவியையும் கொண்டு வந்து காட்டி எங்கள் வாக்குகளை இவர்கள் கேட்கிறார்கள். இந்த இடத்தில் இந்த மனோ கணேசனுக்கு அந்த சிவாஜி கணேசனின் வசனங்கள்தான் நினைவுக்கு வருகின்றன.

எதற்கு கேட்கிறார்கள் வாக்கு? அரசியல் கைதிகளை விடுவித்தார்களா? காணாமற்போனவர்களை கொண்டு வந்து தந்தார்களா? எங்கள் இன மாந்தர் மீது குற்றம் புரிந்தவர்களை நீதிமன்றில் நிறுத்தினார்களா?

உலகத்துக்கு உறுதியளித்தபடி அரசியல் சட்டத்தில் உள்ள அதிகாரங்களையாவது பகிர்ந்து கொடுத்தார்களா? எதற்கு கேட்கிறார்கள் வாக்கு?

இவர்கள் செய்துள்ளது இதுதான். எமது வாக்குகளையே பயன்படுத்தி எம் நியாயமான உரிமைகளை பறித்துள்ளார்கள். இவர்களிடம் சென்று கூழைக்கும்பிடு போட்டால் எலும்புத் துண்டுகளைத்தான் வீசுவார்கள்.

எமது மக்களின் உரிமைகளை இந்த யுத்தத்திற்கு பிந்திய காலகட்டத்தில் உறுதிபடுத்திக்கொள்ள நாம் எம்மை அரசியல் ரீதியாக பலப்படுத்திக்கொள்ள வேண்டும்.

தலைகீழாக நின்றாலும் நாங்கள் இந்நாட்டில் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ ஆகமுடியாது. இந்நாட்டில் அரசாங்கங்களை



எம்மால் தனியாக நின்று அமைக்கவும் முடியாது. இந்த ஜனாதிபதிகளிடமும், பிரதமர்களிடமும், அரசாங்கங்களிடமும் அரசியல் பேரம் பேச மட்டும்தான் எம்மால் முடியும்.

அதுதான் ஒரே வழி. அதற்கு நாம் அரசியல் பலமிக்கவர்களாக இருக்க வேண்டும். அதற்கு ஒரே வழி, எமது வாக்கைப் பயன்படுத்தி நாம் பலம் பெறுவது ஆகும் என்றார். (அ-2)

# ஐ.நாவின் பொறிமுறையை இலங்கை அரசு மதிக்கிறது

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடுகளின் அடிப்படையிலான தீர்மானங்களை இலங்கை ஏற்றுக்கொள்ளாது என அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

குறுகிய அரசியல் இலாபங்களின் அடிப்படையில் நாடுகளுக்கு எதிரான தீர்மானங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படவுள்ள தீர்மானம் தொடர்பில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

மனிதவுரிமை விவகாரத்தைப் பயன்படுத்தி இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகிக்க சில தரப்பினர் முயற்சித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்தற்போது நமிபீயாவிற்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொறிமுறைமையை இலங்கை மதிப்பதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)


### கடை வாடகைக்கு

வேம்படி மகளிர் பாடசாலைக்கு முன்பாக கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
077 896 5367 (5602)

### விற்பனைக்கு

இல. 94 கடை வீதி வவுனியாவில் அமைந்துள்ள கடையும் விடுதியும் விற்பனைக்கு உண்டு (ஐலண்ட் லொஜ்)

தொடர்புகளுக்கு:
0771235931
0049202313635
(5574)

### காணி விற்பனைக்கு

கத்தாப்படி வீதி நுணாவில் கிழக்கு சாவகச்சேரியில் அமைந்துள்ள 5 பரப்புக் காணியும் (கிணறும்; காணியின் படத்துடன்) விற்பனைக்குண்டு. A9 வீதியில் உள்ள கோபி கடையின் பின்புறம்.

தொடர்புகளுக்கு: T.P.No.
0771235931 (5574)

### கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: 10 ¼ சூரி., செவ் 3 ல
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: A/L, Draughtsman / அரச உத்தியோகம்
தொ.இ: B/1093

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 2
கி.பா: 20
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L / தொழில்நுட்பவியலாளர் (டோகா)
தொ.இ: B/1096

பிறப்பு: 1970 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 3
கி.பா: 31.5 உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L / சொந்தக்கடை (ஜேர்மனி PR)
தொ.இ: B/1101

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அத்தம் 3
கி.பா: 21 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L / பொது சுகாதார பரிசோதகர் (PHI)
தொ.இ: B/1104

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரம் 3
கி.பா: 11 சூரி., செவ் 12 ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: CIMA / தனியார் நிறுவன கணக்காளர்
தொ.இ: G/1571

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: 44 செவ் 12 ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்
தொ.இ: G/1572

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 3
கி.பா: 13
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/1574

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: 52.5 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்
தொ.இ: G/1575

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

### தேவை

கட்டட நிர்மாணத்துறையில் வெற்றிடம் கொழும்பை அண்மித்த பிரதேசங்கள் யாழ்./ மட்டக்களப்பு/ கண்டி/ கம் பஹா/மாங்குளம் பிரதேசங்களில் மேசன்/ தச்சு/ பெயின்டர் (1200/- 1500) கைஉதவியாளர் (900/- 1100/-) தேவை. உணவு+ தங்குமிடம் வழங்கப்படும்.

### வேலை வாய்ப்பு

உங்களுக்கு கப்பல்/ விமான நிலையத்தில் வேலை செய்ய விருப்பமா? அழையுங்கள் கப்பல் புனர்நிர்மாணத்துறையில் சாதாரண ஊழியர் / வெல்டர்/தச்சு மற்றும் விமான நிலையத்தில் சுத்திகரிப்பாளர்/ கேட்டரீஸ்/ காகோ பிரிவுக்கு 18-45 வயது ஆண்- பெண் தேவை உணவு+ தங்குமிடம் குறைந்த விலைளில் சம்பளம் 18000/, 25000/, 30000/ தொழில் அடிப்படையில் சம்பளம்.

தொடர்பு: 0775561883, 0774312176 (6515)

### கஜமுகன் டென்ரல் கிளினிக்

Dr.A. செந்தில்குமரன் அவர்களினால் நிரந்தரமாக பல் கட்டுதலும் கிளிப் போடுதலும் தற்போது நடைபெறுகின்றது.
மத்திய மகா வித்தியாலய வீதி,
நெல்லியடி.
தொடர்பு: 021 226 2888
021 4911366
(இலங்கை வங்கிக்கு அருகில்)



நிர்வாகம்

டென்ரல் கிளினிக்- அச்சுவேலி
தங்கம் வைத்தியசாலை, சந்நிதி வீதி,
Dr.A. செந்தில்குமரன் அவர்களால் சகல வாய், பல் சம்பந்தமான சிகிச்சைகள் தினசரி நடைபெறுகின்றது.
தொ.இல. 021 490 8898,021 205 8595,
கதிரிப்பாய் வீதி, அச்சுவேலி. (சி-6511)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிகாரப்பகிர்வு குறித்த விடயங்களில் விரைவாக அவதானம் செலுத்துங்கள்

## இருதரப்பிடமும் அமைச்சர் ராஜித கோரிக்கை

**அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப்பகிர்வு குறித்த விடயங்களில் அரசாங்கம் கவனம் செலுத்துவதே தற்போது அவசியம். எனவே, எதிர்வரும் ஆறு வாரங்களுக்குள் அரசாங்கத் தரப்பும் தமிழ்த் தரப்பும் விரைவாக கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும் என்று மீன்பிடி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**

இவ்வாறு அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக இணக்கப்பாட்டுக்கு சென்றால் மட்டுமே இந்தியாவின் ஆதரவை நாம் பெற முடியும். அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையும் அழுத்தங்களை கைவிடும். எந்த விதத்தில் பேசுவது என்று சிந்திக்காமல் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிடுள்ளார்.

ஜெனீவா மனிதவுரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களிக்கத் தீர்மானித்தால், அது இலங்கைக்கு பாரிய பாதகமாக இருக்கும். பல்வேறு நாடுகளின் தீர்மானம் இந்தியாவின் தீர்மானத்தில் தங்கியிருக்கும் என்றும் அவர் கூறினார்.

எதிர்வரும் ஜெனீவா மனிதவுரிமைக் கூட்டத் தொடர் அமர்வுகள் மற்றும் இலங்கை தொடர்பில் கொண்டு வரப்படவுள்ளதாக கூறப்படும் பிரேரணை குறித்து விபரிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை கூறினார்.

அமைச்சர் இவ் விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

ஜெனீவா மனிதவுரிமைப் பேரவையில் இந்தியாவின் ஆதரவை எம்மால் பெற முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. காரணம் இந்தியாவினால் இலங்கைக்கு உதவி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களிப்பதற்கு தீர்மானம் எடுக்குமாயின் அது எமக்கு பாதகமான நிலைமையை உருவாக்கும். காரணம் பல்வேறு நாடுகளின் தீர் மானம் இந்தியாவின் தீர்மானத்தில் தங்கியிருக்கின்றது என்று கூறலாம்.

இதேவேளை இந்தியாவின் ஆதரவை பெறவேண்டுமானால் அரசாங்கமும் வடக்குத் தமிழ் மக்களும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டியது அவசியமாகும்.

குறிப்பாக அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்கள் தொடர்பில் அரசாங்கமும் வடக்குத் தரப்பும் பிரவேசம் ஒன்றுக்கு வர வேண்டியது அவசியமாகும்.

வடக்குத் தமிழ் தரப்பும் அரசாங்கமும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப் பகிர்வு குறித்த விடயங்களில் விரைவாக அவதானம் செலுத்துவதே தற்போது மேற்கொள்ளப்படவேண்டிய விடயமாகவுள்ளது. இதனை முதலில் ஆரம்பிக்கவேண்டும்.

எதிர்வரும் ஆறு வாரங்களுக்குள் அரசாங்கத் தரப்பும் தமிழ்த் தரப்பும் விரைவாக கலந்துரையாடல்களை மேற்கொள்ளவேண்டும். காரணம் ஆறு வாரங்களுக்குள் வடக்குத் தரப்பும் அரசாங்கமும் இணைந்து பேச்சுக்களை நடத்தி ஒரு பிரவேசம் ஒன்றுக்கு வரவேண்டியது அவசியமாகும்.

காரணம் மூன்றாவது முறையாகவும் ஜெனீவாவில் இலங்கை தொடர்பில் பிரேரணையை நிறைவேற்ற விடாமல் அதனை எவ்வாறாவது தடுப்பது அவசியமாகும் என்றார். (அ-2)

## கம்பன் விழா நிறைவுநாள் நிகழ்ச்சிகள்

கொழும்புகம்பன்கழகத்தின்கம்பன் விழாவின் நிறைவு நாள் காலை நிகழ்வுகள் 9.30 மணிக்கு முன்னாள் ஐ.நா.வின் வதிவிடப் பிரதிநிதி எஸ். திருஞானசம்பந்தர் தம்பதியரின் மங்கல விளக்கேற்ற லுடன் ஆரம்பமாகிறது. இந்நிகழ்வில் பி.நித்தியானந்தன் கடவுள் வாழ்த்து இசைப்பார். தொடர்ந்து, தலைமை யுரையினை, பேராதனைப் பல் கலைக்கழகத்தின் தகைசார் பேராசிரியர்சிதில்லைநாதன் ஆற்றுவார். தொடக்கவுரையினை வித்துவான் வசந்தா வைத்தியநாதன் வழங்குவார். சிறப்பு நிகழ்வாக பேராசிரியர் வி. அசோக்குமாரனின் "கம்பனில் சமண" என்ற தலைப்பிலான தனியுரை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து பேராசிரியர் இரா.செல்வக் கணபதி தலைமையில் "மானுடம் வென்றதம்மா" எனும் சிந்தனை அரங்கம் இடம்பெறும். இதில் "கடவுளும் மனிதனும்" என்ற தலைப்பில் ஸ்ரீ. பிரசாந்தனும் "அரக்கனும் மனிதனும்" என்ற தலைப்பில் இரா. சண்முக வடிவேலும் "பறவையும் மனிதனும்" என்ற தலைப்பில் த.இராமலிங்கமும், "மிருகமும் மனிதனும்" என்ற தலைப்பில் இ.ஜெயராஜும் கருத்தளிப்பர்.

மாலை நிகழ்வுகள் 4.30 மணிக்கு, எஸ்.சிதம்பரநாதன் குழுவினரின் மங்கல இசையுடன் ஆரம்பமாகின்றது. இந் நிகழ்வின் மங்கல விளக்கினை வெள்ளவத்தை நித்யகல்யாணி நகை மாட அதிபர் ஏ.பி. ஜெயராஜா தம்பதியர் ஏற்றி வைப்பர். கடவுள் வாழ்த்தினை அ.ஆரூரன் வழங்குவார், அதனைத் தொடர்ந்து ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல் கலைக்கழக முதுநிலை பேராசிரியர் சுனில் ஆரியரத்ன தலைமையுரையை நிகழ்த்துவார். இந் நிகழ்வின் தொடக்கவுரையினை, கொழும்பு பொன்னம்பலவானேஸ்வரர் ஆலய அறங்காவலர் டி.எம்.சுவாமிநாதன் வழங்குவார். இந்நிகழ்வின் நிறைவு உரையினை புதுவைக் கம்பன் கழகச் செயலர் கம்பகாவலர் தி.முருகேசன் ஆற்றுவார். தொடர்ந்து ஆன்றோர் கௌரவம் இடம்பெறும். இக்கௌரவ நிகழ்வில் "கம்பகலாநிதி இரா.இராதாகிருஸ்ணன்" விருதினை எஸ்.ரி.ஆர் பிலிம்ஸ் அதிபர் எஸ்.தியாகரா, "வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை" விருதினை ஜாமியா நளீமியா கல்லூரி இயக்குநர் கலாநிதி எம்.ஏ.எம் சுக்ரி, "பேராசிரியர் அ.ச.ஞான சம்பந்தன்" விருதினை கட்டட கலைஞர் ஆர்.சிவராமன் "கம்பன் அடிப்பொடி சா. கணேசன்" விரு தினை சிங்கள கவிஞர் பராக்கிரம கொடித்துவக்கு, "கம்பவாணர் ஆ. அருணகிரி" விருதினை தேவி ஜீவலர்ஸ் அதிபர் என். எஸ்.வாசு, "மகாவித்துவான்சிகணேசையர்" விருதினை அறங் காவலர் கலாநிதி ஆறு.திருமுருகன் பெறுகின்றனர்.

உலகப்புகழ் பெற்ற இசைமேதை நாதவாணி "கலைமாமணி" பம்பாய் ஜெயஸ்ரீக்கு ஒரு இலட்சம் ரூபா பொற்கிழி, விருதுப் பட்டயம் என்பவற்றைக் கொண்ட கம்பன்புகழ் விருது வழங்கப் படவுள்ளது.

நிறைவாக சிறப்பு நிகழ்ச்சி யான வழக்காடு மன்றம் 'கம்பவாரிதி' இ.ஜெயராஜ், டத்தோ சரவணன், நீதியரசர்களாக அமர நடைபெறவுள்ளது. "முன்பின் முரணான ராமனின் செயற்பாடுகள்" குற்றம் என்ற தலைப்பில் வழக்கு முன் வைக்கப்படுகிறது. 'இராமனுக்கு வழங்கிய வாய்ப்பை வாலிக்கு வழங்காமை' "அகலிகைக்கு வழங்கிய வாய்ப்பை சீதைக்கு வழங்காமை" ஆகிய குற்றங்களை தி.திருநந்தகுமார் த. இராமலிங்கம் ஆகியோர் சுமத்தவுள்ளனர். இரா.சண்முக வடிவேலும் வி. அசோக்குமாரனும் எதிர்த்து வாதிவுள்ளனர். (நு)





சண்டிலிப்பாய் மத்தி (கல்வளை) முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்திற்கென அமைக்கப்பட்ட கட்டடம் அண்மையில் பிரதேச செயலர் சு.முரளிதரன் மற்றும் விருந்தினர்களால் திறந்து வைக்கப்பட்ட போது...

(படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

## சகல பரீட்சை முடிபுகளும் குறுந்தகவல் சேவையில்

பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற சகல பரீட்சை முடிவுகளையும் இணையத்தளம் மற்றும் குறுந்தகவல் சேவைகளினூடாக வெளியிடுவதற்கு பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நடவடிக்கையினை இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிலநுட்ப முகவர் நிலையமும் இலங்கை பரீட்சைத் திணைக்களமும் இணைந்து மேற்கொள்ளவுள்ளதாக பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

வருடாந்தம் பரீட்சைத் திணைக்களத்தினால் 300 பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. இருப்பினும், க.பொ.த. உயர்தர, சாதாரண தர பரீட்சைகள் மற்றும் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் என்பனவே இணையத்தளம் மற்றும் குறுந்தகவல் சேவைகளினூடாக வெளியிடப்படுகின்றன.

பரீட்சார்த்திகளின் சிரமங்களைத தவிர்க்கும் பொருட்டு சகல பரீட்சை முடிவுகளையும் இணைத்தளம் மற்றும் குறுந்தகவல் சேவைகளினூடாக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பரீட்சை முடிவுகளை தெரிந்துகொள்ள விரும்புவோர் www.results.exams.lk என்ற இணையத்தள முகவரிக்குச் செல்வதனூடாகவோ அல்லது 'exams' என கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்து 1919 என்ற இலக்கத்திற்கு அனுப்புவதனூடாகவோ பெற்றுக் கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## மார்பில் அடித்துக் கொள்பவர்கள் எல்லோரும் தேசப்பற்றாளர்களா?

### ஜனநாயகக்கட்சி கேள்வி

மார்பில் அடித்து கொள்ளும் அனைவரும் தேசப்பற்றாளர்கள் என்றால், தெஹிவளை விலங்கியல் பூங்காவில் இருக்கும் கொரில்லா குரங்கிற்கும் தேசப்பற்றுள்ளது என ஜனநாயகக் கட்சியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயந்த கெட்டகொட தெரிவித்துள்ளார்.

மாத்தறை பிட்டபெத்தர பிரதேசத்தில நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முடிந்தமட்டும் இருக்கும் பொய்கள் அனைத்தையும் கூறிவிட்டு, சொல்வதற்கு எதுவுமில்லாமல் தற்பொழுது ஜெனீவா பற்றியும் தெரிவிக்கின்றனர.

எங்களை மின்சார நாற்காலிக்கு கொண்டு செல்ல போகின்றனர். இதனால் எமக்கு வாக்களியுங்கள் என்று கோருகின்றனர். எம்மை காப்பாற்றுங்கள் என்று கூறி வாக்குகளை பெறுவதற்காக அழுது புலம்புகின்றனர்.

தேசப்பற்றாளர்களான நாமே போரை முடிவுக்கு கொண்டு வந்தோம் என்று கூறுகின்றனர். பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை காப்பாற்றியவர் சரத் பொன்சேகா.

எனினும் அரசாங்கத்தில் உள்ளவர்கள் தாமே தேசப்பற்றாளர்கள் என மார்பில் அடித்து கொள்கின்றனர். தெஹிவளை விலங்கியல் பூங்காவில் உள்ள கொரில்லா குரங்கும் மார்பில் அடித்து கொள்கிறது. அப்படியானால் அதுவும் தேசப்பற்றுள்ளதாக இருக்க வேண்டும். இப்படித் தானா அரசாங்கம் மக்களை ஏமாற்ற பார்க்கின்றது.

புறக்கோட்டையில் உள்ள பிக்பொககற அடிப்பவர்கள் தற்போது அதனை நறுத்தி விட்டனர. மக்களின் சட்டை பைகளில் அடையாள அட்டையும் நகையை அடகு வைத்த பற்றுச்சீட்டுகளுமே உள்ளன.

பிக்பொக்கற் அடிக்கும் பொறுப்பை ராஜபக்ஷ அரசாங்கம் ஏற்றுக்கொணடுள்ளது. ஒரே தடவையில் 200 இலட்சம் ரூபாவை வரியாக அறவிடுகின்றனர். நாட்டை அபிவிருத்தி செய்வதாக கூறி இவர்கள் மக்களை ஏமாற்றி வருகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் சகல விடயங்களுக்கும் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டியுள்ளது

## மகாநாயக்க சுமங்கள தேரர் தெரிவிப்பு

பிள்ளையைப் பாடசாலைக்குச் சேர்ப்பது முதல் சகல விடயங்களையும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியே பெற்றுக் கொள்ளவேண்டிய சூழ்நிலை இன்று ஏற்பட்டுள்ளதாக மல்வத்தை மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரர் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும் கொழும்பு மாவட்ட தலைமை வேட்பாளருமான சிஹல உறுமய கட்சியைச் சேர்ந்த உதய கம்மன்பில மல்வத்தை மகாநாயக்க தேரரைச் சந்தித்து நல்லாசி பெற்றுக் கொண்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இன்று ஒரு பிள்ளையைப் பாடசாலைக்குச் சேர்க்கவும் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டியுள்ளது. எல்லாமே ஆர்ப்பாட்டமாகி விட்டது.

நாட்டில் மது, மாது, சூது என்று எல்லாம் சர்வசாதரணமாகி விட்டது. இவற்றை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அநேக அரசியல் பிரமுகர்கள் தேர்தல் காலங்களில் தேவையில்லாத செலவினங்களை அதிகரித்து பெரிய வர்த்தகப் புள்ளிகளிடம் இருந்து பண உதவி பெறுகின்றனர்.

தேர்தலில் வெற்றி பெற்றும் அவர்களுக்கு கைமாறு செய்ய வேண்டிவருகிறது. அப்படியான சந்தர்ப்பங்களிலேதான் இவ்வாறான ஊழல் மோசடிகள் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது. மேற்படி விடயத்தைத் தவிர்த்து கொள்ள வேண்டும் என்றார்.

இதேவேளை அஸ்கிரிய மகாநாயக்க தேரர் உடுகம ஸ்ரீபுத்தரகித தேரரை சந்தித்த போது அவர் தெரிவித்ததாவது,

பணம், பலம், அதிகாரம் நிறைந்தவர்கள் அரசியலுக்கு வந்ததும் மேலும் மேலும் பணமீட்ட முற்படுகின்றனர். இந்த நடைமுறையை மாற்றி வாக்களிக்கும் தன்மை எம்மில் ஏற்பட வேண்டும் என்று கூறினார். (அ-2)

# பிரபாகரனின் குண்டுக்கு பயந்தவர்கள் மனிதவுரிமை பற்றி பேசுகின்றனர்

## மேதானந்த தேரர் கொதிப்பு

இலங்கையின் பௌத்த சக்திகளை அழிப்பதற்காக பலம் வாய்ந்த நாடுகள் மனிவுரிமை தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவள மேதானந்த தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்திய தூதரகப் பெண் அதிகாரியை நிர்வாணப்படுத்தி அந்த பெண்ணின் மனிதவுரிமையை மீறிய அமெரிக்கா, தனது பெண் அதிகாரியான நிஷா தேசாய் பிஸ்வால் என்பவரை இலங்கைக்கு மனிதவுரிமையை கற்றுக்கொடுக்க அனுப்பியது நகைப்புக்குரியது.

இலங்கைக்கு எதிரான மனிதவுரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை சுமத்தும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் பின்னால் மதவாத சக்தி இருப்பது தெளிவாகியுள்ளது.

பிரபாகரனையும் இப்படியான மதவாத சக்தியே வழிநடத்தியது என்பது தெளிவாக தெரிந்தது. இந்த சக்திகளுக்கு நாட்டுக்கு நன்மை செய்யும் நோக்கங்கள் இல்லை.

நாட்டிலுள்ள பௌத்த சக்திகளை அழிப்பதற்காகவே இலங்கை மீது மனிதவுரிமை மீறல்கள் தொடர் பில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகினறன. பிஸ்வால் போன்ற தூதுவர்களுக்கு பந்தம் பிடிக்கும் தேசத்துரோகிகளின் செயற்பாடுகளால் நாட்டுக்கு பாதிப்பு ஏற்படும்.

பிரபாகரன் குண்டுகளை வீசும் போது நடுங்கி கொண்டு கட்டிலுக்கு அடியில் ஓடி மறைந்து கொண்ட இலங்கையில் உள்ள தேசத்துரோகிகள் தற்போது வெளியில் வந்து மனிதவுரிமைகள் பற்றி பேசுகின்றனர் என எல்லாவள மேதானந்த தேரர் தெரிவித்தார். (அ-2)

## கலந்துரையாடல் -2

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற தெரிவுக்குழுவும் தமிழர் தரப்பும் கலந்துரையாடல்-2 வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள D.C.M. தனியார் கல்வி நிறுவனத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.4 மணிக்கு ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கருத்துரையை சொ.சிவபாலன் வழங்கவுள்ளதாக யாழ்.சர்வதேச மார்க்சிய குழு அறிவித்துள்ளது. (அ)

# பிரிவுத்துயர் பகிர்வு



### இலட்சுமணபிள்ளை இராசையா

புளியங்கூடல் ஊர்காவற்றுறையை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சுமணபிள்ளை இராசையா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்நாளை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புளியங்கூடல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி ஐயாத்துரை நாகம்மா

கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை நாகம்மா 12 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### இராசக்கோன் குழந்தைவேலு

(ஓய்வு பெற்ற அதிபர்) சரசாலையைப் பிறப்பிடமாகவும் தற்போது இல154/2 , நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசக்கோன் குழந்தை வேலு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்..

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சின்னத்தம்பி செல்லத்துரை

புத்தூர் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட்மாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லத்துரை 13ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின்இறுதிக் கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புத்தூர் கிழக்கு, அந்திரானை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### குலசிங்கம் சந்திரபுஸ்பம்

துன்னாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குலசிங்கம் சந்திரபுஸ்பம் கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்றது.



### திருமதி சற்குணசிவம் வளர்மதி

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும்,ஜேர்மனி Wup pertal ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணசிவம் வளர்மதி கடந்த 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை பிற்பகல் ஒரு மணிக்கு Parkfried Hof ,Wuppertaler Strabe 173, 42653, Solingen ,Grafrath ,Germany என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி செல்லத்துரை பொன்னம்மா

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பொன்னம்மா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலிசீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### முருகன் தவராசா

ஐயனார் கோவிலடி ,மகாத்மா வீதி, நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் தவராசா 13 ஆம்திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### விஜயம் கிருஷ்ணபிள்ளை

துன்னாலை வடக்கை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயம் கிருஷ்ணபிள்ளை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் பூதவுடல் நாளை காலை 9.30 மணிக்கு elgin Mills Cemetery visitation Centre . 1591 Elgin mills east , richmond hill ,ON l4S 1M9,Canada என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

# சர்வதேசத்தின் கவனத்திலிருந்து இலங்கை தூர விலக முடியாது

இலங்கைக்கு எதிராக அமெரிக்க சார்பு நாடுகள் ஜெனீவாவில் கொண்டு வரவுள்ள பிரேரணையின் போது இந்தியா மேற்கொள்ளும் தீர்மானம், எதிர்வரும் பொதுத் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா தற்போது தேர்தல் களத்தில் கவனம் செலுத்துகிறது. எனவே, சகல விடயங்களையும் மக்களுக்கு தெளிவுப்படுத்திக் கொண்டிருக்க வாய்ப்பில்லை.

இதனால் சில வேளையில்



நல்ல உறவுகளும் சிலவேளையில் உறவுகளில் பிரச்சினைகளும் ஏற்படலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடமே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

அமெரிக்கா ஜெனீவாவில் கொண்டு வரவுள்ள பிரேரணை தொடர்பில் இலங்கை புரிந்துணர்வை கொண்டிருக்கவேண்டும்.

மனிதவுரிமைகள் விடயத்தில் சர்வதேசத்தின் கவனத்தில் இருந்து இலங்கை தூர விலகிச்செல்ல முடியாது.

இலங்கையில் அதிகமான உணர்வுகள் வெளிக்காட்டப்படுகின்ற நிலையில் சர்வதேசம் அதிகமாக செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகவும் குர்ஷித் தெரிவித்தார்.

எனவே, இலங்கையை பொறுத்த வரை தமது நிலைப்பாட்டில் மாற்றத்தை கொண்டு வரவேண்டியது அவசியம் என்றும் குர்ஷித் கூறினார்.

இலங்கை சர்வதேசத்தில் இருந்து தனிமைப்படக்கூடாது. 30 வருட பிரச்சினையை ஒருநாளில் தீர்க்கமுடியாது. எனவே, இலங்கை சர்வதேசத்தை திருப்திப்படுத்த வேணடும்.

சர்வதேசத்தை திருப்திப்படுத்துவதன் மூலம் இலங்கையால் நல்லிணகத்துக்கான காலஅவகாசத்தை பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் குர்ஷித் கோரிக்கை விடுத்தார். (அ-2)

## குத்திக் கொன்றவருக்கு மரண தண்டனை

மூன்று பிள்ளைகளின் தாயொருவரை கத்தியால் குத்தி கொலை செய்தவருக்கு மாத்தறை மேலதிக நீதிபதி பிரியந்த த சில்வா மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

திக்குவல்லை தம்பகஸ் சூர என்ற இடத்தைச் சேர்ந்த வை. ஜகத் (வயது 35) என்பவருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டது.

2001.12.30ஆம் திகதியன்று பிரஸ்தாப பெண்ணின் கணவன் வீட்டிலில்லாத சமயத்தில், இரவு நேரம் வீட்டின் கதவை தட்டி கதவை திறக்க வைத்து தனது ஆசைக்கு இணங்க பெண் மறுப்புத் தெரிவிக்கவே கத்தியால் குத்தி மூன்று பிள்ளைகளின் தாயாரை கொலை செய்தார் என குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியே கசிந்தது நயனின் இரகசியம்




ஆயுர்வேத குளியல் மூலம் தன் அழகை பராமரித்து வருகிறாராம் நயன்தாரா.

தமிழில் ஆரம்ப என்ட்ரியை சத்தமில்லாமல் கொடுத்த நயன்தாரா அதன்பின்பு ரஜினி, விஜய், அஜித் என்று முன்னணி ஹீரோக்களுடன் ஜோடி போட்டு தமிழ் சினிமாவை ஒரு ரவுண்டு வந்தார்.

மேலும் சிம்பு, பிரபுதேவா, ஆர்யா என்று எத்தனை முறை காதல் சர்ச்சைகளில் சிக்கினாலும் ரசிகர்களுக்கு மட்டும் அவர் மீதான கிரேஸ் குறையவில்லை.


காரணம், தனது அழகை முறையாக பராமரிப்பதில் அதீத அக்கறை காட்டி வருகிறார் நயன்தாரா.

தற்போது ஆரம்பம், ராஜா ராணி, அனாமிகா படங்களில் நடித்து முடித்த பின்பு சிம்பு, ஜெயம்ரவியுடன் நடித்துக்கொண்டு வருகிறார்.

இந்த இடத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக, இப்போது தனது உடல் எடையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நயன்தாரா, அடிக்கடி ஆயுர்வேத குளியல் போடுகிறாராம்.

இதன்காரணமாக, அவரது உடலும், தோலும் மினுமினுப்பு குறையாமல் இருக்கிறதாம். இதற்காகவே மாதாமாதம் ஒரு பெரிய தொகையை செலவு செய்கிறாராம் நயன்தாரா.

# இஸ்லாம் சமயத்திற்கு மாறினார் யுவன்!



யுவன்சங்கர்ராஜா, காதலித்து மணந்த முதல மனைவியை விவாகரத்து செய்தார் பின்பு வேறொரு பெண்ணை மணந்தார். இப்போது அவருட னும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் திடீரென்று யுவன்சங்கர் ராஜா இந்து மதத்தில் இருந்து இஸ்லாம் மதத்துக்கு மாறியுள்ளார். இதுகுறித்து அவர் டுவிட்டர் மூலம் ரசிகர்களுக்கு விடுத்துள்ள செய்தியில், இப்போது நான் இஸ்லாம் மதத் துக்கு மாறியுள்ளேன்.

இதற்கு என் தந்தை இளையராஜா மற்றும் குடும்பத்தினர் ஆதரவு தெரிவித்து ள்ளனர் என்று கூறியுள்ளார். மேலும், 3வது திருமணம் செய்துகொண்டாரா என்பது பற்றி கூறுகையில்,

எனது 3ஆவது திரும ணம் குறித்து வரும் தகவல் கள் வதந்தி என்றார்.

இளையராஜாவுக்கு கார்த்திக்ராஜா, யுவன்சங்கர்ராஜா ஆகிய மகன்களும், பவ தாரணி என்ற மகளும் உள்ளனர். இவர்க ளும் இசையமைப்பிலும், பின்னணி பாடுவ திலும் ஈடுபட்டுள்ளனர். பிரியாணி படத்து டன் 100 படங்களுக்கு இசையமைத்துள்ள

# இயக்குநர் பாலுமகேந்திரா மரணம்



இலங்கையின் மட்டக்களப்பில் 1934ஆம ஆண்டில் பிறந்த தமிழரான பாலு மகேந்திரா விற்கு தற்போது வயது 74. ஒரு ஒளிப் பதிவாளராகத்தான் தன் வாழ்க்கையை ஆரம்பித்தார்.


1977ஆம் ஆண்டு கோகிலா படம் மூலம் சினிமாவுக்கு இயக்குநராக அறிமுக மானார் பாலு மகேந்திரா. இது ஒரு கன் னடப் படம். இந்தப் படம் நேரடியாக தமிழ கத்தில் வெளியாகி வெள்ளி விழா கண்டது.

தமிழில் அவர் இயக்கிய முதல் படம் அழியாத கோலங்கள். அந்தப் படத்தில் தொடங்கிய அவரது திரைப் பயணம் ஒரு அழகிய நதியைப் போல தெளிவாக இருந்தது.

இந்நிலையில் திடீரென்று அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. உடனடியாக தனியார் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஆனால் சிகிச்சைப் பலனின்றி மரண மடைந்தார். பாலுமகேந்திரா மரணம் தமிழ் சினிமாவைப் பொறுத்தவரை நம்ப முடியாத, ஜீரணிக்க இயலாத ஒரு பேரிழப்பாகக் கருதப்படுகிறது.

# அஞ்சான் படப்பிடிப்பில் விபரீதம் அதிர்ச்சியில் திரையுலகத்தினர்



சூர்யா - சமந்தா இணைந்து நடித்து வரும் அஞ்சான் படப்பிடிப்பில் மும்பை நடனக்கலைஞர்கள் வந்து ரகளையில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

'அஞ்சான்" படத்தில் சூர்யா-சமந்தா இருவரும் முதல் முறையாக ஜோடி சேர்ந்துள்ளனர்.

லிங்குசாமி இப்படத்தை இயக்குகிறார். இதன் படிப்பிடிப்பு மும்பை பகுதிகளில் நடைபெற்று வருகிறது. சில தினங்களுக்கு முன்னர், சூர்யா, சமந்தா நடித்த பாடல் காட்சியொன்றை படமாக்கினர்.

நடனஇயக்குநர் ராஜுசுந்தரம் இதற்கான நடனத்தை அமைத்து கொடுத்தார். சென்னையில் இருந்து சென்ற நடன கலைஞர்களுடன் சூர்யா, சமந்தா ஆட இக்காட்சி படமாகிக் கொண்டு இருந்தது.

அப்போது மும்பையைச் சேர்ந்த இந்தி நடன கலைஞர்கள் கும்பலாக அங்கு வந்தனர். நடன கலைஞர்கள் முப்பது சதவீதம் பேரை மும்பை நடன கலைஞர்கள் சங்கத்தில் இருந்துதான் பணியாற்ற தெரிவு செய்ய வேண்டும். வெளியாட்களை வைத்து படப்பிடிப்பை நடத்தக்கூடாது என்று கோஷம் போட்டார்கள்.

அதோடு நிற்காமல் படப்பிடிப்பை நிறுத்தும்படி ஆவேசமாக கத்தியபடி கலாட்டாவில் ஈடுபட்டனர். படப்பிடிப்பு சாதனங்களை உடைக்கவும் பாய்ந்தனர்.

இதனால் படப்பிடிப்பில் இடையூறு ஏற்பட்டது. இதையடுத்து அஞ்சான் படக்குழுவினர் ரூ.60 ஆயிரம் அபராத கட்டணம் செலுத்திய பின்பே படப்பிடிப்பை தொடர அவர்கள் அனுமதி அளித்தனர். அஞ்சான் படப்பிடிப்பில் திடீர் ரகளை ஏற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

## மீண்டும் வந்தார் அர்ச்சனா கவி



வாய்ப்பில்லாமல் படிக்க சென்ற அர்ச்சனா கவி, மீண்டும் நடிக்க வந்துள்ளார். அரவான், ஞான கிறுக்கன் படங்களில் நடித்திருப்பவர் மல்லுவுட் நடிகை அர்ச்சனா கவி. மலையாளத்தில் ஒரு சில படங்களில் நடித்துள்ளார். திடீரென்று அவரு க்கு பட வாய்ப்புகள் குறைய தொடங்கியது. இதையடுத்து பேஷன் டிசைன் படிக்கச் சென்றார்.

மீண்டும் வந்தவரிடம்,

உங்களது திருமணம் எப்போது? அர்ச்சனா கவியிடம் கேட்டபோது, இப் போதைக்கு எனது திருமணம் நடக்காது. 2 வருடத்துக்கு பிறகுதான் எனது திருமணம் பற்றி யோசிப்பேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணங்கள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

நகுலேஸ்வரம் வீதி, அளவெட்டி வடக்கு எனும் முகவரியுடைய எஸ்.செல்வரெட்ணம் என்பவரது வாகன வருமான உத்தரவு பத்திரம், வாகன காப்புறுதி அட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும். (அ-2)



யூனியன் இன்சூரன்ஸ் சுன்னாகக் கிளையினரால் ஆயுட் காப்புறுதியை பெற்ற மீசாலையைச் சேர்ந்த க.தம்புவின் மரண இழப்பீட்டுக் கொடுப்பனவு அவரின் மகனிடம் கையளிக்கப்பட்டது. இதன்போது சுன்னாக பிராந்திய முகாமையாளர் இழப்பீட்டுத் தொகையை வழங்குவதையும் அருகில் காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான மாவேந்தன், முல்லைக்குமரன் மற்றும் அபிவிருத்தி முகாமையாளர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# அரசாங்கம் புலிகளிடமிருந்து மக்களை காப்பாற்றியது தவறா?

## இப்படிக் கேட்கிறார் உதய கம்மன்பில

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் அரசாங்கம் தேர்தலுக்காக வாக்குகளைத் தேடும்போது அமெரிக்கா இலங்கைக்கு எதிராக வாக்குகளைத் தேடிக் கொண்டிருக்கின்றது. தீவிரவாதிகளிடமிருந்து தமிழ் மக்களை காப்பாற்றியது யுத்த குற்றமென்றால், அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கின்றோம் என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முன்னாள் மேல்மாகாண அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இம்முறை மாகாண சபை தேர்தல் மக்களின் ஆதரவினை நாட்டுக்காக வெளிப்படுத்தும் தேர்தலாகும். இலங்கை மக்களை விட்டுக் கொடுக்கக்கூடாதெனில் அனைவரும் எம்முடன் இணைய வேண்டும் எனவும் அவர் கூறினார்.

ஹெல உறுமய கட்சியினால் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கையில் மாகாண சபை தேர்தல் இடம்பெற இருக்கின்றது. இதே காலத்தில் சர்வதேசத்திலும் இலங்கைக்கு எதிரான தேர்தலை அமெரிக்கா நடத்தவுள்ளது.

நாம் வாக்குகளைப் பெற்று தேர்தலில் வெற்றி பெற முயற்சிக்கின்றோம். ஆனால், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இலங்கைக்கு எதிராக சர்வதேச நாடுகளின் ஆதரவு வாக்குகளை பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றார்.

ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக இலங்கை மாறி இன்று அபிவிருத்தி கண்டு வரும் நாடாக வளர்ச்சி கண்டு வருகின்றது. இதனை தடுத்து இலங்கையை மத்திய கிழக்கு தீவிரவாத நாடுகளாக மாற்றவே மேலைத்தேய நாடுகள் முயற்சிக்கின்றன. இதற்கு அரசாங்கம் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை.

யுத்தத்தில் இருந்து கர்ப்பிணிப் பெண்களையும் சிறுவர்களையும் காப்பாற்றி வடக்கில் புதிய தமிழ் சமூகத்தினை உருவாக்கிக் கொடுத்தமைக்காகவே சர்வதேசம் எம்மை யுத்த குற்றவாளியாக முத்திரை குத்தியுள்ளது. உண்மையிலேயே இலங்கையில் யுத்தத்தின் பின்னரே மனிதவுரிமை நிலைநாட்டப்பட்டு ள்ளது. வடக்கு தொடக்கம் தெற்கு வரையில் அனைத்து மக்களும் சுதந்திரமாக பயணிக்க முடிந்துள்ளது.

மொழிப் பிரச்சினைகளோ, இன அடக்கு முறைகளோ இன்று இல்லை. இதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அதேபோல் மக்களின் பாதுகாப்பிற்கும் அவர்களின் வளர்ச்சிக்கும் அரசாங்கம் துணை நிற்கின்றது. இவை அனைத்தையும் சர்வதேசமும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நாம் நாட்டில் பிரிவினையினை தோற்றுவிக்கவில்லை. அடக்கு முறைகளை நாம் கையாளவில்லை.

தமிழ் மக்களை காப்பாற்றி அவர்களின் விடுதலைக்கும் உயிர் பாதுகாப்பிற்கும் துணை நின்றமை மனிதவுரிமை மீறல்களாகாது. இவை யுத்த குற்றமெனின் அவற்றினை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கின்றோம் என்றார். (அ-2)

# பணிப்பெண் விடயம் தொடர்பில் இலங்கை சவுதியுடன் ஒப்பந்தம்

(கொழும்பு)

தற்போது 5 இலட்சம் தொழிலாளர்கள் சவுதி அரேபியாவில் பணிபுரிகின்றனர். இவர்களுள் 60வீதமானோர் வீட்டுப்பணிப் பெண்களாக கடமையாற்றுகின்றனர். இவர்களின் சேமநலன்களை பாதுகாக்க மேற்படி உடன்படிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. பிலிப்பைன்சும் இந்தியாவும் ஏற்கனவே உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

இந்த உடன்படிக்கையின் கீழ் தொழில் வழங்குபவர் தொழிலாளர்களின் பெயரில் வங்கியில் கணக்கை ஆரம்பித்து அவர்களின் சம்பளத்தை வங்கியில் வைப்புச் செய்து பாஸ் புத்தகத்தை தொழிலாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

2 வருட முடிவில் 30 நாட்கள் சம்பளத்துடனான விடுமுறை அதே தொழில் வழங்குபவரிடம் திரும்பி வருவதாக இருந்தால் அவருக்கு மேலதிகமாக ஒரு மாத சம்பளம் வழங்குதல்.

கடவுச்சீட்டு வீட்டு பணியாளரிடம் இருத்தல் வேண்டும்.

சேர்த்துக்கொள்வதற்கு தொழிலாளரிடமிருந்து எந்தவித கட்டணமும் அறவிடப்படக்கூடாது. (அ-2)

# போர்க்குற்றச் சாட்டுக்களுக்கு விளக்கமளிப்பார் ஜனாதிப்தி

(கொழும்பு)

போர்க்குற்றச் செயல்கள் குற்றச்சாட்டுக்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டனில் விளக்கம் அளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜனாதிபதி லண்டனுக்கு விஜயம் செய்யவுள்ளார். பொதுநலவாய நாடுகள் தினத்தை முன்னிட்டு நடைபெறும் நிகழ்வில் அவர் பங்கேற்கவுள்ளார்.

என்ன காரணத்திற்காக இலங்கை மீது சில தரப்பினர் போர்க் குற்றச்செயல் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார்கள் என்பது குறித்துவிளக்கவுள்ளார். அரச தலைவர்கள் உள்ளிட்ட 300 முக்கிய பிரமுகர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

இலங்கைக்கு எதிராக குற்றம் சுமத்துவோர் பயங்கரவாத நடவடிக்கைகளில் தொடர்புபட்டுள்ள விதம் பற்றி உலகத் தலைவர்களுக்கு ஜனாதிபதி விளக்குவார் என சிங்களப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஜெனீவாவை சமாளிக்க நாடகமாடுகிறது அரசு

## ஜ.ம.முன்னணி ஊடகச் செயலாளர் பாஸ்கரா

வடமாகாணத் தேர்தல் நடைபெற்று ஆறு மாதங்கள் கடந்த நிலையில் வட முதல்வரின் நல்லிணக்க சமிக்ஞை, மாகாணசபை குறைபாடுகள் என பலமுறை யாழ். முதலமைச்சர் எடுத்தியம்பிய போதும் கவனத்தில் கொள்ளாத அரசு, மேல்மாகாண சபைத் தேர்தல் ஜெனீவாவில் ஏற்படும் இறுக்கமான தீர்மானங்களை கவனத்தில் கொண்டு செயற்படுகின்றது என ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளர் சி. பாஸ்க்கரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரசு தேர்தலை நடத்திய பின்னர் மாகாண சபைக்கான குறைந்தபட்ச உரிமைகளைக் கூட வழங்காமல் இழுத்தடிப்பது மட்டுமன்றி, செயற்பாடுகளையும் முடக்குவதற்கும் இடையூறு செய்வதற்கும் தன்னாலான கைங்கரியங்களை செய்து கொண்டு வந்ததுடன் பலமுறை வடமாகாண முதல்வரின் நல்லிணக்க செயற்பாடுகளை கூடக் கண்டு கொள்ளாமல் குறைகளை கூறும் போது காது கொடுக்காமல் இருந்து விட்டு, இப்போது அரசுக்கான இறுக்கமான சூழ்நிலை ஜெனீவாவில் ஏற்படும்போது அதில் இருந்து மீளவும் மேல்மாகாண சபை தேர்தலில் சிறுபான்மை இன மக்களை திசை திருப்பவும் போடும் போலி நாடகமாகவே அரசின் வடமாகாண சபைக்கான நல்லிணக்க அழைப்பை கருதவேண்டியுள்ளது என்றார். (அ-2)

# நிலைமையை சமாளிக்க ஓய்வுபெற்ற புகையிரத சாரதிகளுக்கு அழைப்பு

(கொழும்பு)

புகையிரத சாரதிகளின் வேலை நிறுத்தத்தினால் அநேகமான புகையிரத சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததோடு, இதனால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபடாத புகையிரத சாரதிகளின் உதவியுடன் தூர சேவை ஈடுபடுத்தப்பட்டதாக புகையிரத திணைக்களம் கூறியுள்ளது. இது தவிர ஓய்வுபெற்ற புகையிரத சாரதிகளும் கடமைக்கு அழைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

போக்குவரத்து அமைச்சின் கண்காணிப்பு பதவி வகித்த புகையிரத சாரதிகள் சங்கத்தலைவர், 28 புகையிரத தொழிற் சங்கங்களின் எதிர்ப்பின் காரணமாக மேற்படி பதவியில் இருந்து அண்மையில் நீக்கப்பட்டார். அமைச்சரின் இந்த முடிவை ஆட்சேபித்து அன்றிலிருந்து புகையிரத சாரதிகள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

புகையிரத சாரதிகளின் திடீர் வேலை நிறுத்தத்தினால் பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். குறித்த சாரதிகளின் கோரிக்கை தொடர்பில் புகையிரத அதிகாரிகளுக்கிடையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்த நிலையில் புகையிரத சாரதிகளின் வேலைநிறுத்தம் நேற்று முன்தினம் வரை நீடித்தது.

புகையிரத நிலையங்களில் பெருமளவு மக்கள் புகையிரத சேவை இல்லாது திரண்டிருந்தனர். சில புகையிரத நிலையங்களில் பயணிகளுக்கும் புகையிரத நிலைய அதிகாரிகளுக்குமிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

வேலைநிறுத்தத்தினால் நீண்ட வார இறுதி விடுமுறை என்பதால் சொந்த இடங்களுக்கு செல்லும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இதனால் பேருந்து நிலையங்களிலும் அநேகமான மக்கள் குழுமியிருந்தனர். இதேவேளை, புகையிரத சாரதிகள் சங்க தலைவரை கண்காணிப்பாளர் பதவியில் மீண்டும் நியமிக்கும் வரை வேலை நிறுத்தத்தை கைவிடப் போவதில்லை என சாரதிகள் சங்கங்கள் தெரிவித்தன.

இதேவேளை, ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற புகையிரத சாரதிகள் நேற்று முன்தினம் முதல் கடமைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அறிவுரை

...தங்கப்பன் வண்டியில் இருந்து விழவே அவனது தலையில் பலத்த அடிபட்டது. அவன்



நினைவை இழந்து விழுந்து கிடந்தான். வண்டிக்கார வரதனும் வண்டியிலிருந்து விழவே அவனது கையில் பலத்த காயம் ஏற்பட்டது. அச்சமயத்தில் காலன் அவ்வழியே வந்து கொண்டிருந்தான்.


அவன் குடை சாய்ந்த வண்டியையும் அதன் பக்கம் நின்ற எருதையும் கண்டான். கீழே நினைவு இழந்து விழுந்து கிடந்த தங்கப்பனையும் காயம் அடைந்து துடிக்கும் வரதனையும் பார்த்தான். உடனே வண்டியைச் சரியாக நிறுத்தி அதில் எருதைப் பூட்டி தங்கப்பனையும் வரதனையும் வண்டியில் ஏற்றினான். பிறகு அவன் அருகிலுள்ள பழுதூருக்குப் போய் அங்கு ஒரு வைத்தியரிடம் சிகிச்சைக்குக் கொண்டு சென்றான்.

வண்டிக்காரன் வரதனின் காயம் இரண்டே நாட்களில் ஆறி விட்டது. ஆனால் தங்கப்பன் நினைவை அடைந்து குணம் அடைய ஒரு வாரகாலம் பிடித்தது. தங்கப்பன் பணக்காரன் என்று அறிந்த வைத்தியரும் அவர்கள் குணம் அடைந்ததும் அவர்களிடமிருந்து பணம் வாங்கிக் கொள்வதாகக் காலனிடம் சொல்லிவிட்டே சிகிச்சை அளித்தார். காலனும் அவர்கள் இருவரும் முழுவதுமாக குணம் அடையும் வரை அவர்களோடு இருந்து அவர்களுக்கு வேண்டிய வேலைகளைச் செய்தான். வரதன் குணம் அடைந்ததுமே வண்டியை ஓட்டிக் கொண்டு தகடூருக்குப் போய் தங்கப்பன் பழுதூரில் இருப்பதாயும் விபத்து நடந்ததையும் கூறினான். உடனே தங்கப்பனின் மனைவியும் மக்களும் உறவினர்களும் நீலகண்டரும் மற்றும் பலரும் உடனே கிளம்பி பழுதூருக்குப் போய் தங்கப்பனை பார்த்து நலம் விசாரித்தார்கள்.

அப்போது காலன் "நான் செய்தது தவறே. என் போலத்தான் மாலனும் வேலனும், மருதனும் தவறு செய்தவர்கள். நாங்கள் திருந்த வாய்ப்பை அளிக்க வேணடும் என்று கடவுளை தினமும் வேண்டி வருகிறோம். முதன் முதலாக அவர் எனக்கு வாய்ப்பு அளித்து இவருக்குப் பணி புரியும் படி செய்து என்னைத் திருத்தி விட்டார்" என்று களிப்புடன் கூறினான்.

தங்கப்பன் வைத்தியருக்கு நிறையப் பணத்தைக் கொடுத்தான். அதன் பின் தகடூருக்கு வந்தான். அவன் நீலகண்டரிடம் "காலன் தன் தவறை உணர்ந்து விட்டான். அவன் விபத்தில் அடிபட்டு விழுந்து கிடந்த என்னையும் வரதனையும் கண்டு இரக்கப்பட்டதோடு எங்களை ஒரு வைத்தியரிடம் அழைத்துச் சென்று சிகிச்சைக்கும் ஏற்பாடு செய்தான். நாங்கள் குணம் அடையும்வரை எங்களோடு இருந்து எங்கள் தேவைகளையும் கவனித்துக் கொண்டான். இப்படி எல்லாம் அவன் நற்செயல்களைச் செய்ததால் அவன் திருந்திவிட்டான். எனவே அவ்னை நம் ஊருக்கு வரச் சொல்லி ஒரு வேலையும் போட்டுக் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? "என்று கேட்டான்.

நீலகண்டரும் "நீங்கள் காலன



விடயமாக என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். அது உங்கள் இஷ்டம். இனி மேல் நீங்கள் இந்த ஊரிலிருந்து வண்டியில் வேறு எந்த ஊருக்கும் போகக்கூடாது. போக்கிரிகள் இன்னும் மூன்று பேர்கள் இருக்கிறார்கள். அவர்களும் காலனைப் போலக் கடவுளிடம் வேண்டிக்கொண்டு தான் இருக்கிறார்கள். காலன் திருந்திவிட்டான் என உறுதியாகக் கூறவிட முடியாது. அன்று ஏதோ அவனுக்கு அவ்வாறு செய்யவேண்டும் என்று தோன்றியதால் அவ்வாறு செய்தான். இந்த ஒரு நிகழ்ச்சியைக் கொண்டு அவன் திருந்தி விட்டான் என்ற முடிவுக்கு வந்து விடக்கூடாது. காலன் விடயம் **காக்கை உட்கார பனம் பழம் விழுந்த கதை** போலத் தான்" என்றார்...... (முற்றும்)

## 02.2014 16 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1568 - நெதர்லாந்தின் அனைத்து மக்களுக்கும் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையினரால் மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- 1646 - இங்கிலாந்தின் முதலாவது உள்நாட்டுப் போரின் கடைசிச் சமர் டெவன் நகரில் இடம் பெற்றது.
- 1796 - ஆங்கிலேயர் கொழும்பை டச்சுக்களிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1918 - லித்துவேனியா ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1934 - ஆஸ்திரியாவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1937 - வொலஸ் கரோத்தேர்ஸ் நைலோனுக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் படைகள் பிலிப்பீன்சின் கொரெகிடோர் தீவில் தரையிறங்கினர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: முதல் தடவையாக அமெரிக்கப் போர் விமானம் டோக்கியோவைத் தாக்கியது.
- 1945 - அமெரிக்கப் படைகள் பிலிப்பீன்சின் பட்டான் குடாவை மீளக் கைப்பற்றினர்.
- 1947 - 80 ஆண்டுகளாக பிரித்தானியர்களாக இருந்த கனேடியர்கள் முதற்தடவையாக கனேடிய குடியுரிமையைப் பெற்றனர். பிரதமர் வில்லியம் லியோன் மக்கென்சி முதலாவது குடியுரிமையைப் பெற்றார்.
- 1959 - ஜனவரி 1 இல் புல்ஜென்சியோ பட்டீஸ்டாவை ஜனாதிப்தி பதவியில் இருந்து அகற்றிய பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் புதிய ஜனாதிபதியானார்.
- 1961 - எக்ஸ்புளோரரர் 9 (S-56a) விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1985 - ஹெஸ்புல்லா தீவிரவாத இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1986 - சோவியத் கப்பல் மிகைல் லெர்மொண்டொவ் நியூசிலாந்தில் மூழ்கியது.
- 2005 - கியோட்டோ உடன்பாடு நடைமுறைக்கு வந்தது.
- 2007: 2000 ஆம் ஆண்டில் தர்மபுரி பேருந்து தீவைப்பு நிகழ்வில் மூன்று மாணவிகளை உயிருடன் எரித்துக் கொலை செய்த அ.தி.மு.க.வினர் மூவருக்கு தூக்குத்தண்டனையும் மேலும் 25 பேருக்கு 7 ஆண்டுகள் சிறைத தண்டனையும் வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1834 - ஏர்ன்ஸ்ட் ஹேக்கல், செருமானிய உயிரியலாளர், மெய்யியலாளர் (இ. 1919)
- 1934 - தெளிவத்தை ஜோசப், ஈழத்து எழுத்தாளர்
- 1941 - கிம் ஜொங்-இல், வட கொரிய ஜனாதிபதி (இ. 2011)

### இறப்புகள்

- 1656 - தத்துவ போதக சுவாமிகள் (றொபேட் டீ நொபிலி), கத்தோலிக்கக் குரு, தமிழ்நாட்டில் சமயப்பணி ஆற்றியவர் (பி. 1577)
- 1885 - வீ. இராமலிங்கம், ஈழத்துப் புலவர்.
- 1954 - டி. கே. சிதம்பரநாத முதலியார், தமிழக எழுத்தாளர் (பி. 1882)
- 1990 - கெய்த் ஹேறிங், அமெரிக்க ஓவியர் (பி. 1958)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

### கோணத்தல வாசல்

அத்தி ஊத்து பாதை வழியே கிழக்குப் பக்கமாகச் சென்றால் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் நடந்தால் கோணல் மாணலாக அப்படியும் இப்படியுமாக திடீர் திருப்பங்களைக் கொண்ட பாதை செல்கிறது. இப்படிப் பாதை கோணலாக, அப்படியும் இப்படியுமாக திரும்புவதால் கோணத்தல வாசல் பாதை என்று பெயராம். இதனை கோணத்தல வாசல் என்ற பெயராலும் அழைக்கின்றனர்.

### பசு மிதிப்பாறை

கோணவாசல் பாதையில் தொடர்ந்து முன்னேறினால் சற்று மேட்டுப் பாங்கான பாதையில் பசு மிதிப் பாறை என்னுமிடம் வருகிறது. அத்தி ஊத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் இந்தப் பாதையிலுள்ள ஒரு பாறையில் காமதேனுவாகிய தெய்வப் பசுவின் கால் தடம் தெரிகிறது.


சிவபெருமான் சித்தராகச் சதுரகிரியில் தங்கியிருந்தபோது தேவலோகப் பசுவான காமதேனு தினமும் சதுரகிரிக்கு வந்து அவருக்குத் தேவையான பாலைக் கொடுத்து அவரை வணங்கிச் செல்லுமாம். ஒருநாள் சற்று காலதாமதமாகி விடவே அவசரமாக வந்த பசுவின் காலடித்தடம் இந்தப் பாறையில் பதிந்துவிட்டதாம்.

இந்தப் பசுமிதிப் பாறை பசுவின் கால் குளம்பிற்கு இன்னொரு கதையும் கூறப்படுகிறது.

பச்சைமாலாகப் பிறந்த யாழ்வல்ல தேவரின் பொருட்டு ஏற்பட்டதே இந்தப் பசுவின் கால்குளம்புத் தடயம் என்றும் ஒரு கதை கூறப்படுகிறது.

சடைமங்கை சித்தர் பெருமானால் சடாதாரி என்ற பெண் தெய்வமானதை அறிந்த பச்சைமால் சித்தர் பெருமானைத் தரிசிக்க விரும்பி மலைமீது ஏறத் தொடங்கினான். பாதி தூரம் ஏறும்போது மேலே செல்ல வழி தெரியாமல் சித்தரை வேண்டி நின்றான்.

சித்தராகிய இறைவனும் அவன் மீது கருணை கொண்டு தெய்வப் பசுவான காமதேனுவை அவனுக்கு வழிகாட்ட அனுப்பினார்.



பசுமிதிப்பாறை

தேவலோகப் பசுவான காமதேனு, சாதாரணப் பசுவாக எதிர்ப்பட்டு, மலைமேல் செல்லும் வழியைப் பச்சைமாலுக்கு உணர்த்தியது. அதன் குளம்புகள் படிந்த இடம்தான் இந்தப் பசுமிதிப் பாறை.

இந்தக் காலடித்தடம் சாதாரண பசுவின் குளம்பைவிட நான்கு மடங்கு பெரியதாகக் காணப்படுகிறது. இந்தக் கால் குளம்பு தடயத்தைத் தொட்டு முகர்ந்தால் பசுவின் சிறுநீர் (கோமயம்) வாசனையும் வரும் என்பது பக்தர்களின் அனுகவமாகும்.

### கோரக்கர் குண்டாவும் குகையும்

பசுமிதிப் பாறையிலிருந்து சுமார் 2 கி.மீ. தூரம் நடந்தால் ஒரு திருப்பத்தில் கோரக்கர் குகை என்று பாறை மீது சுண்ணாம்பால் எழுதி அம்புப் குறியிட்ட அறிவிப்பு ஒன்று காணப்படுகிறது.

பயணத்தில் சிறு தடுமாற்றம். மகாலிங்கம் சன்னதிக்குச் செல்ல நேரமாகி விட்டது. வரும்பொழுது பார்த்துக் கொள்ளலாம். இது வழிகாட்டி வந்த தியாகராசரின் குரல். கோரக்கர் குகைக்குச் சென்று நேரமாகி விட்டால் வேளையோடு திரும்ப முடியாமல் போய்விட்டால் என்ன செய்வது? என்ற பரபரப்பு அவர் குரலில் தென்பட்டது.

வாருங்கள் அதிக நேரம் ஒன்றும் ஆகிவிடாது. அபிஷேகம் நடந்து கொண்டிருக்கிறது. அம்மாவும் இருக்கிறார்கள். வரும்பொழுது இந்த வாய்ப்பு கிடைக்காது என்று வரவேற்றார் பாறையருகில் அமர்ந்திருந்த பெண்மணி. அவர் சென்னை, சேலையூரைச் சேர்ந்த திருமதி உமா எனப் பின்னர் தெரிந்து கொண்டோம்.

எங்களுக்கு நேரமாகிவிட்டது

**ஆன்மீகம் 35**

ஐயா. வேளையோடு திரும்பி மதுரை சென்று கடையைத் திறக்க வேண்டும் என்று அவசரப்படுத்தினர் உடன் வந்தவர்கள்.

பரவாயில்லை அவர்கள் செல்லட்டும். பூசை முடிந்ததும் நானும் மலையேற வேண்டியவள்தான். நான் வழிகாட்டுகிறேன் என்றார் அந்தப் பெண்மணி.

கோரக்கரே எங்களை வந்து அவர் குகையைக் காண அழைப்பது போலிருந்தது அவரின் அழைப்பு. சந்தர்ப்பம் கிடைக்கும் போதே பயன்படுத்திக் கொள்வதுதான் புத்திசாலித்தனமாகப் பட்டது.

சரி நண்பரே, நீங்கள் தொடர்ந்து செல்லுங்கள். நாங்கள் கோரக்கர் குகையை தரிசித்துவிட்டு வருகிறோம் என்றோம் ஒரு வழியாக.

நாங்கள் அந்தப் பெண்மணியைத் தொடர்ந்தோம். பாறை அடுக்குகள் வழியாகக் கீழே இறங்கினோம். சுமார் 150 அடி பள்ளத்தில் இறங்கியதும் பாதையில் ஓடை ஒன்று குறுக்கிடுகிறது. பாறையில் ஓடிக் கொண்டிருப்பதால் சற்று பாசி பிடித்தே காணப்படுகிறது.... *(தொடரும்)*

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி



ஈழத்தமிழர் விடுதலைக்கு இதயம் தந்த இமயம்!

# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்

47

"முன்னே அங்கே இருந்த அதே குல்தீப் 40 வருடத்துக்குப் பிறகு வயதாகி நரைச்சு, ஒட்டல் கூட்டத்திலே ஒரு மாலையோடு நின்னுக்கிட்டு இருந்தார். நான் பார்த்துட்டேன்.

அன்னிக்கு அவர் கொடுத்த ரசகுல்லாவிலே என் நாக்கு இனிச்சது. இன்னிக்கு அவரைப் பார்த்ததிலே என் மனசே இனிச்சது.

அன்னிக்கு அவர் என்னைப் பாத்ததுக்கும், இன்னிக்கு பாக்குறதுக்கும் உள்ள வித்தியாசத்திலே ஒதுங்கிப் போனார்.

நான் அவரை அணைச்சுப் பிடிச்சு ரூமுக்கு கூட்டியாந்தேன்.

அப்ப பிரம்மச்சாரி...இப்ப இரண்டு பேரப் பிள்ளைகளே இருக்குதுன்னார்.

பாவம் கஷ்டம். என்னால முடிஞ்சதைக் கொடுத்தேன். வாங்க மாட்டேனுட்டார். பார்த்தது போதும்னார். நான் வற்புறுத்திக் கொடுத்தேன்.

நிறைவுன்னு சொன்னீரே அது பட்டம் வாங்கினதுலே கிடைக்கலே. அவரைப் பார்த்து என் நன்றிக் கடனை தீர்த்துக்கிட்டேனே அதுலே கிடச்சது என்றார்" செம்மல்.

இரு கையறியாக் கொடை

ஹிட்ச்சாக் எடுத்த ஒரு படத்தின் பெயர் A man who knew too much

ராஜ்கபூர், செம்மலுக்கு எழுதிய ஒரு கடிதத்திலும் இதே வார்த்தையைப் பயன்படுத்தி இருந்தார்.

"நாங்களும் எல்லாம் அறிந்த மனிதன் என்று ஒரு படத்துக்கு பெயர் வைத்த போது இது அதிகப்பிரசங்கித்தனம்.



நடிகர் சங்கம் எம்.ஜி.ஆருக்கு நடத்திய பாராட்டு விழாவில் சிவாஜிகணேசன்

அவ்வளவு பெரிய பெயர் வேணாம் அதை முகம்னு வைங்க போதும்" என்றார்.

செம்மல் பணத்தைப் பாதுகாப்பாக வைக்க மாட்டார்; எங்கெங்கோ கிடக்கும்.

ஒருநாள் சிறு பூட்டு வாங்கி வரச் சொன்னார்.

பணப் பெட்டியை பூட்டி அந்த சாவியை ஒருசேஃப்டி பின்னில் கோர்த்து பெட்டியிலே தொங்கவிட்டார்.

இதென்ன கொடுமை? சாவியை வெளியே வைச்சுட்டு ஏன் பூட்டணும் என்று கேட்டோம்.

"கொடுமையல்ல... புதுமை! யாருக்காவது பணம்தேவைப் பட்டு திருடணும்னா இந்த நல்ல பெட்டிக்கு கள்ளச் சாவி போட்டு பெட்டியை கெடுக்கவேண்டாமே! நல்ல சாவியாலேயே திறந்து எடுத்துக்கிடட்டும்" என்றார்.

அன்று முதல் பணம் காணாமல் போகவில்லை!

ஒரு படப்பிடிப்புக்காக சாரதா ஸ்டுடியோ போயிருந்தோம். அங்கே தொழிலாளி ஒருவர் தன் மகனின் கல்யாண பத்திரிகையைத் தட்டில் வைத்து செம்மலிடம் நீட்டினார்.

அதை எடுத்துக்கொண்ட செம்மல்... பணம் வைக்க சட்டைப் பையைப் பார்க்க பணம் இல்லை.



எப்போதும் கண்ணாடிக் கூண்டில் பணம் இருக்கும். அன்று அதிலும் இல்லை.

"இருப்பா என் அதிர்ஷ்டத்தைப் பார்க்கலாம். ரவீந்திரன்! டிக்கியிலே மருந்து வைக்கிற பேக் இருக்கு. எப்பபோ ஏதோ யோசனையில் நோட்டுக்களை மடிச்சு மடிச்சுப் போட்டேன் பாருங்கள்" என்றார்.

துழாவி எடுத்தேன். 17 நூறு ரூபாய் நோட்டுக்களை! அவை தாயத்து மடிப்பது போல் மடித்துப் போடப்பட்டிருந்தன.

சரி அவன் அதிர்ஷ்டக்காரன். "10 நோட்டுக்களைப் பிரிச்சு கொடுத்தனுப்பும்" என்றார்.

கொடைக்கு ஒரு சட்டம்; வலதுகை கொடுப்பது இடது கைக்குத் தெரிக்கூடாது என்பது.

ஆனால் செம்மலைப் பொறுத்த வரை இரண்டு கைகளுக்குமே தெரியாது. ஏனெனில் எடுத்துக் கொடுக்கவே சொல்லியிருக்கிறார் எப்போதும்.

*(தொடரும்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் அதிபர் பி.சந்திரபாபு தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவிகளின் இசையும் அசைவும் நிகழ்வையும் வெற்றி பெற்ற மாணவர்கள் விருந்தினர்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.செல்வதீபன்)





மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டிகள் அண்மையில் கல்லூரியின் அதிபர் அருட்சகோதரி கில்டா சிங்கராயர் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவிகளுக்கு கேடயம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.








வடமராட்சி தேவரையாளி இந்து கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்ற போது... (படங்கள் :-எஸ்.செல்வதீபன்)








தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கல்லூரி மைதானத்தில் அதிபர் ம.மணி சேகரம் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படு வதையும் மாணவனுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.







யா/கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலையின் அதிபர் கு.கண்ணதாசன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் மாணவனுக்கு பிரதம விருந்தினர் வெற்றி கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் பரிசீலிக்கப்பட்டே நடவடிக்கை

## ஜனாதிபதியின் செயலர் தெரிவிப்பு



**(கொழும்பு) உலக வரைபடத்தில் இலங்கை எந்த இடத்தில் இருக்கின்றது என்பதை தெரிந்துகொள்ளாத, பொது அறிவு இல்லாத அமெரிக்க காங்கிரஸின் ஓர் உறுப்பினர் இலங்கைக்கு எதிராக கண்டனப் பிரேரணையை முன்மொழிவதற்கு தலைமை தாங்கியிருக்கிறார் என ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.**

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடை முறைப்படுத்தும் தேசிய நடவடிக்கை திட்டத்திற்கு தலைமை தாங்கும் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க, ஊடகங்களின் தலைமை அதிகாரிகளை கொழும்பில் சந் தித்து உரை யாடிய போதே இவ் வாறு தெரிவித்தார்

இலங்கை எங்கிருக்கிறது என்று உலக வரைபடத்தில் கண்டுபிடிக்கும் பொது அறிவு அற்றவர்களை அங்கத்தவர்களாக கொண்டிருக்கும் அமெரிக்க காங்கிரஸ், இலங்கைக்கு எதிரான கண்டனப் பிரேரணைகளை நிறைவேற்றுவதற்கு எத்தனிப்பது வேதனையை அளிக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நாம் ஒவ்வொன்றாக பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்த அவர், முதலில் காணாமற் போனவர்களை கண்டுபிடிக்கும் ஆணைக்குழுவின் செயற்பாட்டுக்கு முன்னுரிமை அளிப்பது அவசியமென்று தெரிவித்தார்.

காணாமற் போனவர்களின் எண்ணிக்கையை சரியாக மதிப்பீடு செய்த பின்னர் அடுத்த நடவடிக்கை எடுக்கப்படும். காணாமற் போனவர்கள் தொடர்பான ஆணைக் குழுவுக்கு காணாமற் போனோர் பற்றி 13ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதன்படி, சுமார் 8 ஆயிரம் பொதுமக்கள் காணாமற் போயிருப்பதாக முறைப்பாடுகளில் சுட்டிக் காட்டப்படுகிறது.

2012ஆம் ஆண்டு மே மாதத்தில் அன்றைய அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டனுக்கு இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகள் குறித்து நாம் தகவல்களை பெற்றுக்கொடுத்த போது, நாம் அந்த அம்மையாருக்கு நல்லிணக்கப்பாட்டை சில மாதங்களில் செய்துமுடிக்க முடியாது என்பதை சுட்டிக்காட்டி, குறுகிய காலத்தில் இந்தப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு நாம் மாயாஜாலக் காரர்கள் அல்ல என்பதை நினைவுபடுத்தினோம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஏற்கனவே நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் 18 மாதங்களை செலவு செய்துள்ளோம். இது தொடர்பாக நாம் பெருமளவு பணிகளை செய்து முடித்திருக்கிறோம்.

அரசாங்கம் இலங்கை நிர்வாக சேவைக்கு தமிழ்மொழி அறிவுடையவர்களை சேர்த்துக் கொள்வதற்காக சமீபத்தில் விசேட பரீட்சை ஒன்றையும் நடத்தியது.

இவ்விதம் நாம் இப்போது தமிழ் அறிவு படைத்தவர்களை அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றும் கூறினார்.

வடமாகாணத்தில் தற்போது நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக் கப்பட்டிருக்கிறது.

2009ஆம் ஆண்டில் வட மாகாணத்தில் இருந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை 2013ஆம் ஆண்டில் 30 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

அதுபோன்று கிழக்கு மாகாணத்தில் ஆயுதப்படையினரின் எண்ணிக்கை 26 சதவீதமாக குறைக் கப்பட்டுள்ளது. யுத்தத்தினால் பாதிக்கப்படாத நாட்டின் பல பிரதேசங்களில் சுமார் 50 சதவீதமான ஆயுதப் படையினர் நிலை கொண்டுள்ளனர். நாட்டின் பாதுகாப்பை கவனத்திற்கு எடுத்து அவ்வப்போது ஆயுதப் படையினரின் எண்ணிக்கையை குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

யுத்த காலத்தில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் குறித்து அவற்றின் மீதான விசாரணையின் ஆதாரங்கள் தற்போது மேல் நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மூதூரில் ஏ.சி.எப். என்ற சர்வ தேச தொண்டர் அமைப்பின் உறுப்பினர்களின் கொலை தொடர்பாக சட்டமா அதிபர் குற்றம் இழைத்தவர்களுக்கு எதிராக சட்டபூர்வமாக வழக்குகளை தொடர்ந்துள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகளின் சிறுவர் போராளிகளும் இப்போது விடுவிக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன் முன்னாள் தமிழீழ விடுதலை புலிகளின் ஆயுதப்படை வீரர்கள் 11ஆயிரத்து 872 பேர் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை 171 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் தனியாருக்கு சொந்தமான 20 ஆயிரம் ஏக்கர் காணி அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்கு சொந்தமான 5ஆயிரத்து700 ஏக்கர் காணியும் இப்போது விடுவிக்கப்பட்டுள்ளது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் 285 பரிந்துரைகளில் 43 பரிந்துரைகள் நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பாகவும் மும்மொழி தொடர்பானவையாக்வும் அமைந்திருக்கின்றன.

இது தொடர்பாக அரசாங்கம் உரிய சட்டதிருத்தங்களை மேற் கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். தான் ஜெனீவாவில் அமெரிக்க காங்கிரஸின் 40 உறுப்பினர்களை சந்தித்து இலங்கையின் நிலைப்பாட்டை விளக்கிக் கூறிய போது, யுத்தம் பல்லாண்டுகளாக நடைபெற்ற போதும் யுத்தத்தின் இறுதி இரண்டுவார கால நிகழ்வுகள் குறித்து மாத்திரம் அமெரிக்கா அக்கறை காட்டுவது தவறு என்பதை சுட்டியதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## சர்வதேச விசாரணை முனைப்பை ரஷ்ய அரசாங்கமும் நிராகரித்தது

மேற்கத்தைய நாடுகள் இலங்கையின் போர்க்குற்றங்களுக்காக சர்வதேச விசாரணை கோருவதை ரஷ்யா நிராகரித்துள்ளது.

இலங்கையின் இறுதிப்போரின் போது மனிதவுரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் ஜெனீவாவில் சர்வதேச விசாரணையை கோரப் போவதாக அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஏற்கனவே தெரிவித்து வருகின்றன.

ஏற்கனவே இது தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டவர்களை தண்டிக்குமாறு ஐக்கிய நாடுகளும் இலங்கையை கேட்டுக்கொண்டது.

இந் நிலையில் சர்வதேச விசாரணை காரணமாக நல்ல விடயங்கள் எதுவும் நடக்கப்போவதில்லை என்று இலங்கைக்கு இரண்டு நாட்கள் விஜயம் மேற்கொண்டிருந்த ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சு பணிப்பாளர் அனட்டொலி விக்டோரோவ் கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

மனிதவுரிமை மீறல்களுக்கு யார் பொறுப்பு என்பதை கண்டுபிடிப்பதில் பாரிய சிரமங்கள் இருக்கும். எனவே இந்த விடயத்தில் ஐக்கிய நாடுகளின் தலையீடு உள்ளகப் பிரச்சினையில் தலையிடுவதாகவே அமையும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இலங்கைக்கு எதிரான ஜெனீவா யோசனையை சீனாவும் ஏற்கனவே நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தினதும் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரினதும் ஏற்பாட்டில் சுவிஸ் பபிக்கோன் தமிழர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் பண்டத்தரிப்பு யசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள், கற்றல் உபகரணங்களும் பாடசாலை மேலைத்தேய பாண்ட் வாத்தியக் குழுவிற்காக ஸிம்பல் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டபோது... (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

## துப்பாக்கிகளுடன் கொள்ளைக் குழு கைது

(கொழும்பு)

கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த மிகப் பெரிய கொள்ளை குழுவைச் சேர்ந்த சிலரை கொஸ்கம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி கொள்ளை குழுவைச் சேர்ந்த 4 பேரை கைது செய்ததுடன் அவர்களிடம் இருந்து டி.56 ரக துப்பாக்கி, 75தோட்டாக்கள், செக்கோஸ்லோவாக்கியாவில் தயாரிக் கப்பட்ட பிரவுணின் ரக கைத்துப்பாக்கிகள் இரண்டு, 27 தோட்டாக்கள், இரண்டு கைக்குண்டுகள், ஹைறைட் ரக கார் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்தது.

இவர்கள் கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் இடம் பெற்ற பல பாரிய கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் சில கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு கூறியது. (எ-11)

## விசா திட்டத்தில் இலங்கையை இந்தியா புறக்கணித்தது ஏன்?

(கொழும்பு)

வந்தடைந்தவுடன் வழங்கும் விசா திட்டத்தில் இலங்கை உள்ளடக்கப்படாதது இலங்கையை அவமதிப்பது போன்ற செயல்.

இதனால் இருநாட்டிற்குமிடையிலான உறவில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாமென அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

வந்தடைந்தவுடன் வழங்கும் விசா திட்டத்தில் இலங்கை உள்ளடக்கப்படாதது குறித்து அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் வினவப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர், இந்த விவகாரத்தை அரசாங்கம் ஆழமாக கவனிக்க வேண்டும். வெளிவிவகார அமைச்சு இராஜதந்திர மட்டத்தில் பேசி இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும். நமது நட்பு நாடொன்று இவ்வாறு புறக்கணித்ததை ஏற்க முடியாது.


வெளிவிவகார அமைச்சு இந்த பிரசினைக்கு முன்னுரிமை அளித்து செயற்பட வேண்டும். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன்- நளினி...

## சிறைப் பறவைகளின் காதல் கதை!

முருகன்- நளினி காதலுக்கு வயது 23 வருடங்கள். இதில் சிறையில் பிரிக்கப்பட்டு இருவரும் தனித்திருந்த காலம்... கிட்டத்தட்ட அதே 23 வருடங்கள்! ராஜீவ் கொலை



வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் முருகன்- நளினி ஜோடி, தங்கள் காதலுக்குக் கொடுத்த விலை மிக மிக அதிகம்!

1991 பெப்ரவரி மாதம் இருவருக்கும் இடையிலான முதல் சந்திப்பு. மே மாதம் ராஜீவ் காந்திகொலை. ஜுன் மாதம் இருவரும் கைதாகினார்கள். அன்றுமுதல் இன்றுவரை சிறைச் சுவர்களுக்கு இடையில் கிளைத்துக் கிடக்கிறது இவர்களின் காதல்!

முதல் சந்திப்பு முதல் உங்கள் காதல் கதையை விரிவாகச் சொல்லுங்கள்! என்று வழக்கறிஞர் மூலம் வேலூர் சிறையில் இருக்கும் முருகனிடம் பேசியதில் இருந்து... நான் முருகன் அல்ல... தாஸ்.

யாழ்ப்பாணம் இத்தாவில் கிராமத்தில் பிறந்தேன். ஓர் அண்ணன், ஓர் அக்கா, மூன்று தம்பிகள், மூன்று தங்கச்சிகள் என நாங்கள் மொத்தம் ஒன்பதுபேர்.

1987 இல் மூத்த அண்ணன் விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்ந்து மாவீரர் ஆன பிறகு, நானும் விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்ந்தேன். வீட்டில் எனக்கு வைத்த பெயர் ஸ்ரீகரன். அமைப்பு வைத்த பெயர் இந்து. செல்வராசா மாஸ்டர் எனக்குப் பயிற்சி அளித்தார்.

பயிற்சி முடிந்து புதிய உறுப்பினர்களுக்குப் பயிற்சியாளராகவும், பின்னர் புலனாய்வுப் பிரிவில் விசாரணை அதிகாரியாகவும் வேலை செய்த என்னை எல்லோரும் இந்து மாஸ்டர் என்று அழைப்பார்கள். 1991 ஆம் ஆண்டு ஜனவரியில் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டேன்.

விடுதலைப்புலிகள் அமைப்பைப் பொறுத்தவரை, நமக்கு அளிக்கப்பட்ட வேலையைச் செய்து முடிக்க வேண்டும். அது தொடர்பான மேலதிகத் தகவல்களைப் பற்றி விசாரிக்கக்கூடாது. தற்கொலைப் போராளிகளாகச் செல்பவர்களுக்குக்கூட யாரைக் குறி வைத்துத் தாக்குதல் நடத்தப்போகிறோம் என்று தெரியாது.

யாருக்காக நமது உயிரைத் தியாகம் செய்யப்போகிறோம் என்பது தாக்குதல் நாளன்றுதான் தெரிவிக்கப்படும். ஏனென்றால், யாரேனும் ஒருவர் பிடிபட்டால் கூட குழுவினரின் நோக்கத்தை அவர் மூலம் கண்டுபிடித்து விடக்கூடாது அல்லவா! அதுதான் விடுதலைப் புலிகள் அமைப்பின் பலம்.

அமைப்பைச் சார்ந்த எவருடனும் பேசக்கூடாது என்ற உத்தரவோடு நான் கடல் வழியே சென்னைக்கு வந்தபோது, எனக்கு வயது 19. சென்னைக்கு வந்தவுடன் தாஸ் என்று எனக்கு நானே பெயர் சூட்டிக்கொண்டேன்.

### அந்த முதல் சந்திப்பு!


சென்னை நகரம் எனக்குப் புதியது. முடிவற்ற அதன் பரபரப்புக்கு நான் பழக இன்னும் சில காலம் ஆகும் எனும் நிலையில் பாக்கியநாதன் என்கிற தமிழ் ஆர்வலரின் வீட்டில் தங்க வைக்கப்பட்டேன். பாக்கியநாதன், நளினியின் தம்பி. நளினியின் அம்மா பத்மாவுக்கு இரண்டு மகள்கள், ஒரு மகன். மூத்த பெண்ணான நளினியை நான் அங்கு சென்ற நாட்களில் கண்டதில்லை.

இளையவளையும் பாக்கியநாதனையுமே பார்த்திருக்கிறேன். நளினியின் அம்மாவிடம், உங்கள் மூத்த மகள் நளினி எங்கே? என்று கேட்டேன். ஓ.... வென்று கதறி அழுதவர், என்னிடம் கோபித்துக்கொண்டு பெரியம்மா வீட்டுக்குச் சென்றுவிட்டாள் என்று சொன்னார்.

உங்கள் மகளை உங்களுடன் சேர்த்து வைக்கிறேன்... கவலைப் படாதீர்கள் என்று அவரைச் சமாதானப்படுத்தினேன். அந்த அம்மாவின் கண்ணீர்தான், நளினியுடனான என் காதலுக்கு விதையாக இருந்தது.

வார இறுதி நாட்களில் நளினியுடன் தங்கியிருப்பார் அவருடைய தங்கை. அவர் மூலம்தான் நளினி எனக்கு அறிமுகமானார். 1991 பெப்ரவரி 8 ஆம் திகதி முதன்முதலாக அடையாறில் நாங்கள் சந்தித்தோம். அவரைப் பார்த்தவுடன் இனம்புரியாத ஈர்ப்பு இருந்தது. ஆனால், அதைக் காதல் என்று சொல்ல முடியாது.

அன்றைய தினம் எனது பிறந்த நாள் என்று தெரிந்தவுடன் என்னோடு வந்திருந்த அனைவரையும் அழைத்துச் சென்று எளிமையான ஒரு விருந்தை எனக்குப் பரிசாக அளித்தார். நான் எப்போதுமே என் பிறந்தநாளைக் கொண்டாடியது இல்லை. யுத்தக் களத்தில் அதற்கான வாய்ப்புக்களும் இல்லை. ஆனால், நளினி என் பிறந்த நாளைக் கொண்டாடச் செய்தது எனக்குப் புதிய அனுபவமாக இருந்தது.



நளினியை எப்படியாவது அவருடைய தாயாருடன் இணைத்து வைக்க வேண்டும் என்ற நோக்கும் நளினியைக் காண வேண்டும் என்ற இயல்பான எண்ணத்திலும் நான் அன்றாடம் சைக்கிளை எடுத்துக் கொண்டு அடையாறு செல்லத் தொடங்கினேன்.

பணியில் இருந்து அவர் வரத் தாமதமானால், காத்திருந்து அவருடன் பேசிவிட்டு அவரைப் பேருந்து ஏற்றிவிட்டு மீண்டும் ராயப்பேட்டைக்குத் திரும்புவேன். பேசும்போது பணியிடங்களில் தனக்கு சில ஆண்களால் ஏற்பட்ட தொல்லையால் வேலையை இழக்க நேரிட்டதையும் மேலும் சில கவலைகளையும் நளினி என்னோடு பகிர்ந்துகொண்டார்.

> "நான் என் காதல் மனைவிக்காக கேட்பதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். ஓர் ஆயுள் தண்டனைக் கைதிக்கு சிறையில் என்னவெல்லாம் உரிமைகள் வழங்கப்படுமோ, அதை மட்டுமாவது நளினிக்கு வழங்குங்கள். என் காதல் மனைவிக்கு என்னால் செய்ய முடிந்ததெல்லாம், இப்படியான வேண்டுதல்கள்தான். ஆனால், அவள் எனக்காக தன் வாழ்க்கையையே கொடுத்துவிட்டாள்!"

ஒருநாள் நளினிக்கு வேலை தாமதமாக முடிந்தபோது, என்னை அவர் தனியாக சைக்கிளில் ராயப்பேட்டை அனுப்ப விரும்பாமல், வில்லிவாக்கம் பெரியம்மா வீட்டுக்கு என்னையும் அழைத்துச் சென்றார்.

ஒரு பேருந்துப் பயணத்தில் முதன்முதலாக நாங்கள் இருவரும் நீண்ட நேரம் செலவிட்டது அப்போதுதான். நான் அவருக்கும் அம்மாவுக்கும் இடையிலான பிரிவு பற்றிப் பேசினேன். ஒரு கட்டத்தில் உடைந்து அழுதுவிட்டார். அவரது கண்ணீர் என் கைகளை நனைத்தது. அம்மாவுடன் இணையும் விடயத்தில், நான் நளினியின் மனதில் பாதியைக் கரைத்துவிட்டேன்.

சில நாட்கள் கழித்து, ஒரு குழுவாக நாங்கள் கோல்டன் பீச் சென்றோம். அங்கு சுற்றிப் பார்த்துவிட்டு சென்னைக்கு வர இரவு தாமதமானது. அதனால் வில்லிவாக்கம் செல்லாமல், ராயப்பேட்டையில் அவரது அம்மா வீட்டுக்கு நளினியை அழைத்து வந்துவிட்டேன்.

நளினி, சுமார் ஒரு வருடம் கழித்து அவருடைய அம்மாவையும் தம்பியையும் பார்த்தார். மிகவும் நெகிழ்ச்சியான தருணமாக அமைந்தது அது. நளினிக்கு என்மீது ஓர் அபிப்ராயம் வரவும், நட்பு பிரியமாக மாறவும் அந்தச் சம்பவமும் காரணமாக இருந்திருக்கலாம்.

எப்போதும் போர் விமானங்களையும் இடப்பெயர்வுகளையும் மட்டுமே கண்ட எனக்கு, நளினி எத்தனை பெரிய வரமாக அமைந்தார் என்பதை நான் மட்டுமே அறிவேன்.

மார்ச் மாதம் சென்னை மெரினா கடற்கரையில் பிரமாண்டப் பொதுக் கூட்டம் ஒன்று நடந்தது. அதற்கு நானும் நளினியும் போனோம். கூட்டம் முடிந்து திரும்பிவரும்போது காந்தி சிலை அருகே சாலையைக் கடக்க முடியாத அளவுக்கு வாகன நெரிசல்.



என் கையைப் பிடிச்சுக்கோ என்று சொல்லி, என் கைகளைப் பற்றிக் கொண்டுசாலையைக்கடந்தார் நளினி.

அந்தப் பிடிப்பிலும் வார்த்தையிலும் அவ்வளவு பிரியம். அன்று வீடு வரை இருவரும் நடந்தே வந்தோம்.

எங்கள் காதலுக்கு இரு தரப்பிலும் அச்சாணி விழுந்த நாள் அது!

### இந்தக் காதல் சிக்கலானது!

காதல் உணர்வு எங்களை ஈர்த்து இருந்தாலும் நளினியின் எதிர்கால வாழ்வு குறித்து நான் கவலைப்பட்டேன். அந்தக் கவலைகளை ஏற்றுக்கொண்ட நளினி, அதற்கான காரணங்களை நிராகரித்தார்.

காதலில் உறுதியாக இருந்தார். உன்னோடு ஒருநாள் வாழ்ந்தாலும் போதும் என்றார். என்னைப் பற்றியும் என் குடும்பம் பற்றியும் கேட்டார்.

பெரிய கனவுகள், ஆசைகள் எதுவும் எங்களிடம் இல்லாவிட்டாலும் வாழ்வின் மீது பெரும் தாகம் இருந்தது. இதை எப்படி அமைப்புக்குச் சொல்வது. நளினியின் அம்மாவும் தம்பியும் இதை எப்படி எதிர்கொள்வார்கள் என்ற எண்ணங்களுக்கு இடையில் சில நாட்கள் ஓடின.

ஒரு பெண்ணாகப் பிற உயிர்கள் மீது கரிசனத்தோடு இருந்தாரே தவிர, நளினிக்கும் ஈழப்போராட்டத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை. ஒரு போராளியைக் காதலித்ததைத் தவிர, வேறு எந்தத் தவறையும் அவர் செய்யவில்லை......!

(தொடரும்)

-ஆனந்த விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

# 13.02.2014–14.03.2014



## சிம்மம்

**மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்**

**ஆழமாகச் சிந்தித்து அதிரடியான முடிவுகளை எடுக்கும் சிம்ம இராசிநேயர்களே!**

**விரயங்கள் அதிகரிக்கும் நேரமிது!**

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே விரயாதிபதி சந்திரன் விரய ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கின்றார். தனாதிபதி புதனின் பார்வை அதன்மீது பதிகிறது. எனவே விரயத்திற்கேற்ற தனம் வந்து கொண்டே இருக்கும். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு உங்கள் கூட்டு முயற்சிகளில் அனுகூலம் காண்பீர்கள்.

ராசிநாதன் சூரியன் உங்கள் ராசியைப் பார்ப்பதால் கோபம், படபடப்பு அனைத்தும் இயல்பாகவே வந்து சேரும். இருப்பினும் அவற்றை விலக்கி பொறுமையோடு செயற்பட்டால் அருமையான வாழ்க்கையை அமைத்துக்கொள்ளஇயலும். பொது நலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். மதிப்பும், மரியாதையும் உயரும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள்.

கேதுவின் ஆதிக்கத்தால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். ஆலய திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பெற்றோர் வழியில் மருத்துவச் செலவுகள் கூடும். தொழில் வியாபாரத்தில் கடின உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். இம்மாதம் இரண்டு கிரகங்கள் வக்ர நிவர்த்தியாகின்றன. ஒன்று புதன் மற்றொன்று குரு. இந்த இரண்டின் வக்ர நிவர்த்தியும் இனிய பலன்களை உங்களுக்கு வழங்கும். ஏனென்றால் தனலாபாதிபதியாக விளங்குபவர் புதன். பஞ்சம அஷ்டமாதிபதியாக விளங்குபவர் குரு.

ஐந்தும், ஒன்பதும் நன்றாக அமைந்திருந்தால் மிஞ்சும் பலன் தரும் என்பார்கள். அந்த அடிப்டையில் 5-க்கு அதிபதியான குரு பலம் பெறும்பொழுது தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். தொகை வரவும் கூடுமல்லவா! எனவே, இதை செய்வோமா, அதைச் செய்வோமா? என்ற சிந்தனை மேலோங்கும். நூதன பொருள் சேர்க்கை அதிகரிக்கும்.

## பொறுமையோடு செயற்பட்டால் மட்டுமே அருமையான வாழ்க்கை அமையும்

வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**பொன்னான புதனின் பெயர்ச்சியும், வக்ர நிவர்த்தியும்!**

2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் இம்மாதம் பெப்ரவரி 21 ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகிறார். தனலாபாதிபதி வக்ர நிவர்த்தியாவதால் தன வரவு வந்துகொண்டே இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தொழில வியாபாரத்தை விரிவு செய்ய முன்வருவீர்கள். வெளிநாட்டு பயண வாய்ப்புகள் ஒரு சிலருக்கு வந்து சேரும். மார்ச் 10 ஆம் திகதி கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். புத-ஆதித்திய யோகம் செயற்படப்போகிறது. கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். அரசியல்வாதிகளாலும் அனுகூலங்கள் கிடைக்கும். சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 3, 10-க்கு அதிபதியான சுக்ரன் பெப்ரவரி 25 ஆம் திகதி 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். சகாய ஸ்தானாதிபதி எதிரிகள் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது எதிரிகளால் நன்மை ஏற்படும். மறைமுக எதிர் ப்புகள் அகலும். வங்கிகளின் ஒத்துழைப்போடு கடனுதவி பெற்று, வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும். சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும். தொழிலில் கூட்டாக இருந்த உடன்பிறப்புகள் இனி உங்களை விட்டு விலகலாம் என்று முடிவெடுத்திருப்பர். ஆனால் அந்த முடிவை இப்பொழுது மாற்றிக்கொண்டு உங்களோடு இணைந்து செயற்பட முன்வருவர்.

**சனியின் வக்கிரமும், செவ்வாயின் வக்கிரமும்!**

மார்ச் முதலாம் திகதி சனி, செவ்வாய் ஆகிய கிரகங்கள் வக்ரம் பெறுகின்றன. 6, 7 இடங்களுக்கு அதிபதியான சனி வக்ரம் பெறும் பொழுது சில நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வந்தாலும், அதை உபயோகப்படுத்திக்கொள்ள முடியுமா? என்பது சந்தேகம்தான். குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரிப்பு கொஞ்சம் குறைவாகவே இருக்கும். அதே நேரத்தில் செவ வாயின் வக்ரம் அவ்வளவு நல்லதல்ல. 4, 9-க்கு அதிபதியான செவ்வாய் வக்ரம் பெறும் பொழுது சில சொத்துக்களை விற்க நேரிடலாம். உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பு குறையும். உற்றார், உறவினர்களை அனுசரித்துச் செல்லவேண்டிய நேரமிது. பெற்றோர் வழியல் ஏற்படும் வைதத்ய செலவுகளும் தவிர்க்க முடியாததாக அமையும்.


**மிதுன குருவின் வக்ர நிவர்த்தி காலம்!**

உங்கள் ராசிக்கு 5, 8-க்கு அதிபதியான குரு மார்ச் 12ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகிறார். இது ஒரு வழிக்கு நன்மை தான் என்றாலும், பஞ்சமாதிபதியாகவும் குரு விளங்குவதால் பிள்ளைகள் வழியில் பிரச்சினை ஏற்பட்டு அகலும். அவர்களின் எதிர்கால நலன் கருதி ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். ஆபரணங்கள் வாங்கி சேர்பபதில் ஆர்வம் காட்டுவீர்கள். பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும். இம்மாதம் முருகப பெருமான் வழிபாடு உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உற்றார், உறவினர்களையும், உடன்பிறப்புக்களையும் அனுசரித்து செல்ல வேண்டிய மாதமாகும். பெற்றோர் வழியிலும் சில செலவு நடைகள் கூடலாம். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். தாய்வழி ஆதரவோடு சில நல்ல காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். தொழில் உத்தியோகத்தில் உங்கள் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிபெற அரசியல்வாதிகள் அனுகூலமாக இருப்பர். மாதத்தொடக்கத்தில் விரயங்கள் அதிகரித்தாலும் பிறகு வரவு திருப்திகரமாக அமையும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். அனுமன் வழிபாடு அல்லல் தீர்க்கும்.

## சிவல்புரி சிங்காரம்



## கன்னி

**உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

**முன்வைத்த காலைப் பின் வைக்காமல் முடித்துக்காட்டும் கன்னி இராசிநேயர்களே!**

**பத்தாமிடத்து குரு பலம் பெறும்நேரம்!**

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசி நாதன் புதன் வக்ர நிவர்த்தியாகி சஞ்சரிக்கப்போவதால், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும். வரவு திருப்தி தரும். வசதி வாய்ப்புகள் பெருகும். இரவு, பகலாக பாடுபட்டதற்கேற்ற பலன் இம்மாதம் கிடைக்க வழி பிறக்கும்.

சனியின் 2ஆம் இடத்து சஞ்சாரத்தால் குடும்பத்தில் சுபகாரிய பேச்சுக்கள் கைகூடும். கொடுக்கல் -வாங்கல்கள் ஒழுங்காகும். கடன் சுமை குறைவதற்கான வழி பிறக்கும். கலகலப்பான தகவல்களும் வந்து சேரும். இம்மாதத்தில் இரண்டு கிரகங்கள் குருவும், புதனும் வக்ர நிவர்த்தியாகிறார்கள். சனியும, செவ்வாயும் வக்ரத்தை தொடங்குகிறார்கள்.

பத்தில் சஞ்சரிக்கும் குரு வக்ர நிவர்த்தியாவது அவ்வளவு நல்லதல்ல. 10இல் குரு வந்தால், பதவியில் மாற்றம் வரும். முத்தான வாழ்வில் வரும் முன்னேற்றத்தில் தடைகள் ஏற்படலாம். எனவே, தொழில், உத்தியோகத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி உங்களுக்குத் தேவை. 2 இல் ராகு 8 இல் கேது இருப்பதால் சர்ப்ப தோஷத்தின் பின்னணியிலும் உங்கள் ராசி இருக்கிறது.

எனவே, சர்ப்ப சாந்திகளை அதற்குரிய ஸ்தலங்களுக்குச் சென்று முறையாக செய்து வந்தால், எப்பொழுதும் இனிய முகத்தோடு வாழ்க்கையை அமைத்துக்கொள்ள இயலும. அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு சனிக்கிழமையும சனிக்கவசம் பாடி, சனி பகவான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். மந்தன் எனப்படும் சனி மகத்தான பலன்களை உங்களுக்கு வழங்குவார்.

**பொன்னான புதனின் பெயர்ச்சியும், வக்ர நிவர்த்தியும்!**

ராசிநாதனாகவும், 10ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் புதன் பெப்ரவரி 21ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகிறார். இது மிகுந்த நன்மையைத் தரும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். எடுத்த முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கும். இனிய நண்பர்களின் ஒத்துழைப்போடு பணியிலிருந்த தொய்வு அகலும். மார்ச் 10ஆம் திகதி கும்பத்தில் புதன் சஞ்சரிக்கப் போவதால் ஜீவன ஸ்தானம் பலமடைகிறது. எனவே, எல்லா வழிகளிலும் அனுகூலம் கிடைக்கும். புத ஆதித்ய யோகத்தால் பொதுவாழ்வில் புகழ் கூடும்.

**மகர, சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் மகர ராசியில் பெப்ரவரி 25 ஆம் திகதி சஞ்சரிக்கப்போகிறார். பஞ்சம ஸ்தானத்தில் சுக்ரன் சஞ்சரிப்பது யோகம் தான். பூர்வீக சொத்துக்களில் இருந்த தகராறுகள் அகலும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். பிரிந்து சென்றவர்கள் வந்திணைவர்.

**சனியின் வக்ரமும், செவ்வாயின் வக்ரமும்!**

மார்ச் முதலாம் திகதி சனி மற்றும் செவ்வாய் ஆகிய இரு கிரகங்களும் வக்ரம் பெறுகின்றன. 5, 6-க்கு அதிபதியான சனி வக்ரம் பெறும பொழுது பிள்ளைகள் வழியில் விரயங்கள் ஏற்படலாம். அதை சுப விரயமாக மாற்றிக்கொள்வது நல்லது. பூர்வீக சொத்துக்களில் ஒரு பகுதியை விற்று லாபம் காண்பீர்கள். வழக்குகள் சாதகமாக முடியும். எதிரிகளின் தொல்லை குறையும். உத்தியோக முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். செவ்வாயின் வக்ர காலம் மிகுந்த நன்மையைத் தரும் காலமாகும். 3, 8-க்கு அதிபதி வக்ரம் பெறும் பொழுது முன்னேற்றங்கள் கூடும். முத்தான பலன்கள் வந்து சேரும். உடன்பிறப்புகள் ஒத்துழைப்பு செய்வர். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து தொழில் வளர்ச்சியை கூட்ட வழி வகுப்பர்.

**மிதுன குருவின் வக்ர நிவர்த்தி காலம்!**

உங்கள் ராசிக்கு 4, 7-க்கு அதிபதியான குரு நிவர்த்தியாகிறார். 10இல் குரு பலம் பெறும் போது, பதவி மாற்றம், இடமாற்றம், ஊர மாற்றங்கள் வந்து சேரலாம். உத்தியோகத்திலிருப்பவர்கள் உடன் பணிபுரிபவர்களை அனுசரித்து செல்வது நல்லது. வியாழன் பெயர்ச்சி வரை குரு வழிபாட்டை தொடர்ந்து செய் வதன் மூலம் குழப்பங்களிலிருந்து விடுபட இயலும். பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பெர்றுப்புகளில் மாற்றம் ஏற்படும். இம்மாதம் சிவன் வழிபாட்டிலும், நந்தியெம் பெருமான் வழிபாட்டிலும் கவனம் செலுத்தினால் செல்வநிலை உயரும் வாய்ப்பு கிட்டும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் மாற்றங்களையும், ஏற்றங்களையும் சந்திக்கும் மாதமாகும். உறவினர் பகை மாறும். உடன் இருப்பவர்களால் ஒரு சில நல்ல காரியங்கள் நடைபெறும். பொருளாதார நிலை சென்ற மாதத்தைக் காட்டிலும் சிறப்பாக இருக்கும். பெண் குழந்தைகளின் சுப சடங்குகள் எதிர்பார்த்தபடியே நடைபெறலாம். அவர்களின் எதிர்கால நலன் கருதி ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம காட்டுவீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு தலைமைப்பதவி வந்து சேரலாம். விலகிச்சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். ராகு - கேது வழிபாடு நன்மையை வழங்கும்.

## இரவு பகலாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைப்பதற்கான வழி பிறக்கும் நேரம்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீரை விரயமாக்காத தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்

## வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்

நிலத்தடி நீரின் அளவு வேகமாகக் குறைந்து செல்வதாலும், இருக்கின்ற நீரும் மோசமாக மாசடைந்து வருவதாலும் இன்று சொட்டு நீரையும் சொத்தாகக் கருதிச் சேமிக்க வேண்டியவர்களாகவே நாங்கள் வாழ்கிறோம். இந் நிலையில், நீரை அதிகளவில் பயன்படுத்துகின்ற துறையாக விவசாயம் இருப்பதால் நீரை விரயமாக்காத நவீன தொழிலநுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு விவசாயிகள் முன்வர வேண்டும் என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உணவு விவசாய நிறுவனத்தின் அனுசரணையுடன் மானிய அடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்கும் வைபவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டப் பிரதி விவசாயப்பணிப்பாளர் அ.செல்வராசா தலைமையில் கிளிநொச்சி மாவட்டப் பிரதி விவசாயப்பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது,

நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கும் தண்ணீரில் முக்கால் பங்குக்கும் அதிகமான தண்ணீர் விவசாயத்துக்கே செலவழிக்கப்படுகிறது.

மனிதர்கள் பயிர் செய்ய ஆரம்பித்த காலப் பகுதியில் பயன்படுத்திய வெள்ள நீர்ப்பாசன முறையையே நாங்கள் இப்போதும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

பயிர்களைச் சுற்றித் தண்ணீரை வெள்ளக்காடாகத் தேக்கி வைப்பதில் ஏற்படும் திருப்தி பரம்பரை பரம்பரையாக எங்களில் நீடிக்கிறது போலும், இதனால்தான் எமது கிணறுகளில் இருந்து நீர்ப்பம்பிகள் இரவுபகலாகத் தண்ணீரை இறைத்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால், இந்தத் தண்ணீரில் பெரும பங்கை வீணாக்கிக் கொண்டிருககிறோம் என்பதுதான் உண்மை. இந்தத் தண்ணீரில் பெரும்பங்கு தேவையில்லாத நிலத்துக்குப்போக, இன்னுமொரு பெரும் பங்கு ஆவியாக, இன்னுமொருபங்கைக்களைகள் குடிக்க எமது பயிர்களைச் சென்று சேர்வது நாம் பாய்ச்சிய தண்ணீரில் அரைவாசிக் கும் குறைவான அளவு தண்ணீர்தான்.

தண்ணீருக்கான பற்றாக் குறைவு ஏற்பட்டிருக்கும் நிலையில் இயன்ற அளவு சேமிப்பது எல்லோரினதும் கடமையாகும். செல்லிடப்பேசிகள், கணனிகள் போன்ற சாதனங்களில் புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகமானவுடன் பழையனவற்றை - அவை நன்றாக இருந்தாலும்கூட - வீசிவிட்டு உடனடியாகப் புதியவற்றை வாங்கும் நாம் விவசாயத்தில் மட்டும் ஏன் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தத் தயங்குகிறோம்.

இஸ்ரேல் அறிமுகப்படுத்திய சொட்டு நீர்ப்பாசனம், தூவல் நீர்ப்பாசனம் போன்ற புதிய தொழில் நுட்பங்களின் மூலம் பயிர்களுக்குத் தேவையான அளவு தண்ணீரை மட்டுமே விநியோகிக்கலாம்.

இந்த நவீன நீர்ப்பாசனக் கருவிகளை உணவு விவசாய நிறுவனத்தின் உதவியுடன் விவசாயத் திணைகளம் எங்கள் விவசாயிகளுக்கு விநியோகித்தாலும் அவற்றைப் பயன்படுத்துவதற்கு விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை.

அவர்கள் பாரம்பரியமுறையில் தண்ணீரை இறைத்துக் கொண்டிருக்கவே விரும்புகிறார்கள். இந்த மனப்பாங்கில் மாற்றம் வரவேண்டும்.

யாழ்ப்பாணத்துக்கு 1965இல் வந்திருந்த இஸ்ரேலிய விஞ்ஞானி ஏரட் நமது இடைவிடாத இறைப்பு முறைகளைப் பார்வையிட்ட பின்னர், குடாநாடு பாலைவனமாகும் என்று எச்சரித்துவிட்டுப் போயிருந்தார். இந்த எச்சரிக்கையைக் கருத்தில் எடுத்து ஊதாரித்தனமாகத் தண்ணீரைச் செலவு செய்யாமல், பயிர்களுக்கு வேண்டிய நீரை மட்டுமே தரக் கூடிய சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தூறல் நீர்ப்பாசனத்தையும் அதிகளவில் நாம் பயன்படுத்த முன்வரவேண்டும். அப்போதுதான் நீர்வளத்தைப் பேணி விவசாயத்தையும் மேம்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வடமாகாண சபை உறுப்பினர்கள் அ.பசுபதிப்பிள்ளை, வை.தவநாதன் ஆகியோரும் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்களை வழங்கினார்கள். (அ-6)

# தரம் 9 மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி



(குருமன்காடு)

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி கடந்த வியாழக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

மாணவர்களின் தலைமைத்துவப் பண்பை கட்டியெழுப்பும் நோக்கோடு தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் அதிபர் மற்றும் பதில் தலைவர்களின் தலைமையில் குறித்த செயலமர்வு நடைபெற்றது.

இச் செயலமர்வில் மாணவர்களுக்கான தியானப் பயிற்சி, தலைமைத்துவம், போக்குவரத்துச்சட்டம், உளவளத்துறை தொடர்பான பயிற்சி, வெளிக்கள பயணம், விளையாட்டு பயிற்சி போன்ற அம்சங்களை உள்ளடக்கி முழுநேர செயலமர்வாக நடைபெற்றது.

இதில் 500இற்கு மேற்பட்ட மாணவர்கள் தலைமைத்துவம், உளவளம், போக்குவரத்து, சட்டம், விளையாட்டு போன்ற துறைகளில் பயிற்சி பெற்று பயனடைந்துள்ளனர்.

(அ-9-250)

# காடழிக்கப்படுவதற்கு ஏற்ப மீளுருவாக்கம் இடம்பெற வேண்டும்

## பொது மக்கள் கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் பல்வேறு தேவைகளுக்காக காடழிப்பு இடம் பெற்று வருகின்ற போதிலும் மீள் உருவாக்கம் இடம்பெறுவதில்லையென சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மின்சார வழங்கலுக்காகவும் வீடு கட்டுமாணங்களுக்காகவும் வெட்டப்படும் காடுகளை மீள் உருவாக்கம்




செய்வதற்கோ மீள் மர நடுகைக்கான ஏற்பாடுகளோ மேற்கொள்ளப்படாது பல காடுகளும் மரங்களும் வெட்டப்பட்டுவருவது வேதனைக்குரியதே.

குறிப்பாக வவுனியா வடக்கு பிரதேசத்தில் மின்சார வழங்கலுக்காக பல பயன்தரு மரங்கள் உட்பட பெறுமதியான மரங்களும் வெட்டி சாய்க்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக புளியங்குளத்தில் இருந்து நெடுங்கேணி வரையுமாக விதியோரத்தில் உள்ள பல மரங்கள் அண்மைக்காலமாக பல தேவைகளுக்காகவும் வெட்டப்பட்டுள்ள போதிலும் அதற்கு ஈடாகும் வகையில் மீள் உருவாக்கம் செய்யப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறாக வேகமாக அழிக்கப்படும் காடுகளுக்கு நிகராக மீள் மர நடுகை இடம்பெறாமலிருப்பது சமூக சிந்தனையாளர்களின் பெரும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

எனவே வன பரிபாலன திணைக்களம் வெறுமனே மரம் வெட்டப்படுவதற்கு அனுமதி வழங்குவதும் முறையற்ற விதத்தில் மரங்களை வெட்டுபவர்களை கைது செய்வதை மாத்திரம் தமது கடமையாக கொள்ளாது, அரச காணிகளில் காடுகளை மீள் உருவாக்கம் செய்யவும் வெட்டப்பட்டு வரும் மரங்களுக்கு நிகராக மக்கள் மத்தியில் மரங்களை நடவைப்பதற்கான விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்த வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-266)

# குமுழமுனை முறிப்பு கிராமத்தில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு

முல்லைத்தீவு குமுழமுனையில் சுமார் 200 குடும்பங்களைக் கொண்ட முறிப்பு கிராமத்தில் சட்டவிரோதமான வகையில் மண் அகழ்வு இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் வழங்கிய தகவலை அடுத்து வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நிலைமையை நேரில் சென்று பார்வையிட்டு உறுதிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், மேற்படி சட்டவிரோத கிரவல் அகழ்வால் அப்பகுதியின் இயற்கைச் சமநிலை பாதிக்கப்படும் அபாயம் நிலவுகிறது.

இது தொடர்பில் முன்னாள் கரைத்துறைப்பற்று பிரதேச செயலரிடம் மக்கள் தெரிவித்தபோது , மேற்படி நடவடிக்கை நிறுத்தப்பட்டதாகவும், தற்போது தொடர்ந்து நடைபெறுவதாகவும் பிரதேச மக்கள் என்னிடம் நேரிலும் எழுத்து மூலமும் அறியத்தந்தனர். தங்கள் போக்குவரத்து, இருப்பிடங்களின் கட்டமைப்பு பாதுகாப்பு, சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் என பல ஆபத்துக்களை ஒருங்கே எதிர்கொள்வதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த அகழ்வுப்பகுதி முறிப்பு குளத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள தோடு, நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் இவ்விடயத்தை பார்வையிட்ட பின்பே முன்னாள் கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் அகழ்வை தடுத்து நிறுத்தியதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கின்றேன். விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்க்கிறேன் என்றார். (அ-9-250)

# சேமமடு மக்களுடன் கலந்துரையாடல்



(குருமன்காடு)

வவுனியா வடக்கு, சேமமடு பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் சமகால அரசியல் நிலவரம் குறித்தும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் சேமமடு பிரதேச மக்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் மாலை சேமமடுவில் இடம்பெற்றது.


இதன் போது அப் பிரதேச மக்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கு தெளிவுபடுத்தியதுடன், சமகால அரசியலில் தாம் எவ்வாறு உள்ளோம் என்பதையும் கூறியுள்ளனர்.


இவ் விடயங்களை கேட்டறிந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் மக்களுக்கு சில தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன.

இக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாக அதன் பொதுச செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், அக் கட்சியின் வவுனியா மாவட்ட செயலாளர் கோபால கிருஸ்ணன், அக் கட்சியின் மனிதாபிமான பிரிவைச் சேர்ந்த என்.ரஜீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(அ-9-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கவிதைக் கலசம்

## விட்டுச் சென்ற நினைவுகள்

அன்பே...!
நீ அன்று சொன்ன
வார்த்தைகளை
இன்று மறந்திருக்கலாம்
ஆனால்...
உன்னிடம் நான்
விட்டுச் சென்ற சுவடுகளை
மறக்க நினைத்தாலும்
மறைக்க நினைப்பதென்பது
அவ்வளவு சுலபமானதல்ல
ஏனெனில் அவைகள் –உன்
உடம்பினுள் இன்னும்
உதிரமாய்...!
ஓடிக்கொண்டு இருக்கின்றது

**கிரு.செந்தூரன்**
**பருத்தித்துறை**

## பெண்ணடிமை

பாரதி பாடியென்ன
பாரினில் பெண்கள் பலர்
சங்கம்கூடி ஓதியென்ன
பங்கம் செய்யும் சமூகம்
எங்கும் மாறவில்லை
பொங்கும் கல்வியும்
பொருள் கொதிந்த அறிவும்
மங்காத விஞ்ஞான வளர்வும்
மக்கள் கண்களிலே
பெண்ணடிமை உண்மைகளை
ஒரு மண்ணளவும் தூவவில்லை
மண்ணில் பெண்ணடிமை
மாறவில்லை பெண்மை தேறவில்லை

**பு.துவாரகன்**
**கரவெட்டி**



## காத்துக் கிடக்கின்றேன்

பேனா இல்லை
பென்சில் இல்லை
வரிகள் இல்லாத
முற்றுப்புள்ளி என் வாழ்க்கை
எங்கே தொலைந்தது?
யார் பறித்தது?
என் கவிதை வரிகளை
கண்களில் ஊற்றெடுக்கும்
உப்புக் கரைசலில்
என் கனவுகள் கரைந்து விட்டதா
வாடிக்கிடக்கின்றேன்– என்னை
வாழ வைத்தவனைத்
தேடிக்களைத்ததால்
ஒற்றை வானம் நான்– அதில்
இரட்டை நிலவுகள்
ஒளி இழந்து இருள் கௌவி...
கதிரை இழந்து
காத்துக்கிடக்கின்றேன்
கம்பி வேலிக்குள்
வெள்ளைப்புறா வருமா?
இல்லை
வெள்ளை ஆடை தானா?

**ஆர்.எஸ்.ஆனந்தன்**
**தும்பளை**

## இமயம் தொட...


மாமலையையும்
பிளந்திடும் வலிமை கொண்ட
பிளிறு கூட
சிறு வேங்கை கண்டு
கலங்கும் நடு நடுங்கும்
இதிலிருந்து உன்னை- நீ
கற்றுக் கொள்
பலமென்பது மனமே
அதுதான் அதன் பாலம்

மாவை.நா. கஜேந்திரன்

## உயிர் அறுவடை

ஆழியின் தாண்டவத்தில்
ஆண் துணையிழந்து
வறுமையினை வரவாக்கி
விதவையானவள்–மகனை
விடுதலைக்கு விதைத்து
அறுவடைக்கு காத்திருந்தாள்!
இறுதிப்போரின்
உறுதி தளர்கையில்
அடுத்த மகனையும் படை
அணிக்குக் கேட்டனர்
அனுப்ப மறுத்த(ாள்)
அன்பான அன்னை
புதருக்குள் ஒளித்து
பங்கருக்குள் பதுக்கி– அவனுக்கு
பாவாடை சட்டை போட்டு
புதுமாத்தளன் போகையில்
பறித்தது அவனுயிர்
பல்குழல் பீரங்கி

**விவேகானந்தனூர் சதீஸ்**



# மௌனத்தின் தேடல் – 191

## எதிர்பார்ப்பு

துள்ளித் திரியும்
பள்ளிப் பருவமிது
அள்ளிவைத்த ஆசைகளை
கொள்ளிவைத்தது யார்
முட்கம்பி வேலிக்குள்
முனங்கிக் கிடக்கின்றேன்
என் துயர் துடைக்க
இனியும் வருவார்களா?

திருமதி நீ. பன்னீர்ச்செல்வம்
சுழிபுரம்

## அகதி வாழ்க்கை

யுத்தம் ஓய்ந்த பின்பும்
முள்வேலிக்குள்
நம் அகதி வாழ்க்கை
மட்டும் இன்றுவரை
தொடர்கதையாய்
தொடர்கிறதே
இந்த நிலை மாறாதோ?
நம் இன்னல்கள்
யாவும் தீராதோ?

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## ஏற்றுக்கொள்

யாருமே இல்லை
எனும் உன்
நிலைமை
அப்பட்டமாகின்றது
உனக்காக நாம்
அனுதாபப்படமாட்டோம்
ஏனெனில் எல்லோர்
நிலையும் அப்படியே!
நீயும் எம்மைப்போல்
ஏற்றுக்கொள்
எளிதாகிடும் இவ்வாழ்வு
நாளை உனதாகிடும்
வரலாறு

ஆர்.வி.நிதி
மல்லாவி

## காத்திருப்பு

அன்று... அப்பாவின்
கைபிடித்து நடந்த நீ
இன்று... அப்பாவின்
வருகைக்காக
முள்வேலியில்
கைபிடித்தபடி
நிற்கிறாயா?

சி.அகல்யா
கொக்குவில்

## தகர்த்தெறி

பிறந்திட்ட நாம்
அடைந்திட்ட துன்பங்கள்
போதும்- இனி
காத்திருக்க காலமில்லை
இன்றே தொடங்கிடு- உன்
இலட்சிய பயணத்தை
முட்கம்பி மட்டும் ஏன்?
முட்டுக்கட்டையை தகர்த்தெறி
நாளை தரணி கூறி உன் புகழ்

ஆர்.விஜி, உடுவில்

## உலகிற்கோர் விண்ணப்பம்

ஏடு பிடிக்கும் கை
முட்கம்பி பிடிக்கிறதே
போரில் பெற்றோரை இழந்து
யாருமே இல்லாது தவித்திடும்
இந்த பாலகனுமா
முட்கம்பி முகாமில்
என்ன பாவம் செய்தான்
இதுவோ
உலக சிறுவர் தினம்

க.அசோக், மானிப்பாய்

## எத்தனை நாட்கள்?

கொடுந்தீயினில் வெந்தும்
குருதிதனில் குளித்தும்
ஆறிடா வடுக்களேந்தி
ஆழமறியா சோகத்துடன்
பொழுதின் புலர்விற்காய்
பொருமிய விழிகளுடன்
முட்கம்பியோரத்திலே
காத்துக்கிடக்கின்றேன்...
இன்னும் எத்தனை
நாளதற்கு....?

பி.தனு, மல்லாவி

## துரத்தும் துயரம்

எட்டி எட்டி
எட்டடி வைத்தன்று
இடம்பெயர்ந்த போது
இதயம் கனத்த நாம்
திரும்பிப் பார்த்தால்
தயங்கித் தயங்கி
பின் செல்வது
விரும்பி விரும்பி
நாளும் பொழுதும்
காதலித்த வலிவடக்கு
நில மங்கையாம்
உரிமையிருந்தும்
இன்றுமிது பலருக்கும்
தூரத்துப் பச்சைதான்


க.நாகராசா
சாவகச்சேரி

## விடிவு

கற்பனையில்லா
உலகத்தின்
கதாநாயகனே நீதான்
நிதர்சன உலகின்
நித்திய பரிசம் நீதான்
விளக்கின் ஒளிநாடி
விழுவதற்கு
விட்டில் பூச்சியல்லவே
நாம்
விசும்போடு வீரம் பேசும்
பொசுக்கும்
பொன் கதிரோன்

அ.நளினாசினி
கோண்டாவில் கிழக்கு

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –192



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 20.02.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் பிரச்சினைக்கு வலுவான தூதரக நடவடிக்கை எடுக்கவேண்டும்

## பிரதமருக்கு ஜெயலலிதா மீண்டும் கடிதம்



(சென்னை)

***இருநாட்டு மீனவர்களுக்கும் இடையில் சுமுகமான ஒப்பந்தம் ஏற்பட்டுவரும் நிலையில் அதை சீர்குலைக்கும் வகையில் இலங்கைக் கடற்படையினரின் செயற்பாடு உள்ளது. இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் 121 பேரையும் உடனே விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.***

இது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முதலமைச்சர் ஜெயலலிதா, நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது,

பாக்ஜலசந்தி பகுதியில் தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய- பகுதியில் மீன்பிடிப்பதை இலங்கை கடற்படை தடுத்து வருவது தொடர்கதையாகியுள்ளது.

மீன்பிடிக்க செல்லும் தமிழக மீனவர்கள் ஒவ்வொருவரும் இலங்கை கடற்படையின் தாக்குதல், சித்ரவதை, சிறைபிடிப்பு போன்ற அச்சுறுத்தலை எதிர் நோக்கியே செல்கின்றனர்.

சென்னையில் இரு நாட்டு மீனவர்களுக்கு இடையே சமீபத்தில் பேச்சுவார்த்தை நடந்த பின்பு இலங்கை கடற்படை தாக்குதல் அதிகரித்து விட்டது.

இரு நாட்டு மீனவர்களுக்கு இடையே சுமுகமான ஒப்பந்தம் ஏற்பட்டு வரும் நிலையில் அதை சீர்குலைக்கும் வகையில் இலங்கை கடற்படையினர் செயறபாடு உள்ளது.


கடந்த 13 ஆம் திகதி மீன்பிடிக்க சென்ற 29 மீனவர்கள் இலங்கை கடற்படையால் 7 எந்திர படகுகளுடன் கடத்தி செல்லப்பட்டனர். அவர்களை யாழ்ப்பாணத்தில் உள்ள மஜிஸ்திரேட்டு நீதிமன்றில் இம்மாதம் 24ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் சிறையில் அடைக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரியவந் துள்ளது.

இந்திய அரசின் 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் நமது மீனவர்கள் வாழ்வாதாரத்தை மட்டுமின்றி இந்தியாவின் இறையாண்மையையும் பறித்து சென்றுள்ளது. என்றாலும் இந்திய அரசு தமிழக மீனவர்களின் வாழ்வாதார பிரச்சினை பற்றி இன்னமும் கண்டுகொள்ளாமல் உள்ளது.

நமது மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நடத்தும் தொடர் தாக்குதல்களை வலுவான தூதரக நடவடிக்கை மூலம் தடுத்து நிறுத்தாமல் மத்திய அரசு மெத்தனமாகவுள்ளது.

இலங்கை கடற்படையால் கடத்தி செல்லப்பட்ட 121 தமிழக மீனவர்கள் இலங்கை சிறைகளில் வாடிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களது 26 படகுகளும் இலங்கையிடம் உள்ளது.

இலங்கை சிறைகளில் உள்ள தமிழக மீனவர்கள் 121 பேரையும்உடனே மீட்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக தாங்கள் தனிப்பட்ட முறையில் தலையிட்டு தூதரக அளவில் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (2)



துருக்கி பயணித்த பாக். பிரதமர் நவாஸ் ஷெரீப் (இடது), அங்காரா நகரில் வைத்து அந்நாட்டு ஜனாதிபதி அப்துல்லா குல்லை சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

### வெனிசுவேலாவில் தொடரும் போராட்டம்

## உக்ரைன் நாட்டைப் போன்று வெனிசுவை கருதவேண்டாம்

### போராட்டக்காரர்களுக்கு வெனிசு. ஜனா. எச்சரிக்கை



(காரகாஸ்)

வெனிசுவேலாவின் முனனாள் ஜனாதிபதி ஹியூகோ சாவேசின் மரணத்திற்குப் பின்பு கடந்த 2013 ஆம் ஆண்டு நிகோலஸ் மதுரோ அந்நாட்டின் ஜனாதிபதி பொறுப்பை ஏற்றார். அந்நாட்டில் தொடர்ந்து வரும் பொருளாதார பற்றாக்குறைகளும், வேலையில்லாத் திண்டாட்டங்களும் மக்களை அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களுக்குத் தூண்டியுள்ளன.

நேற்றுமுன்தினம் பல நகரங்களில் கூடிய மக்கள் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். பல இடங்களில் வீதிகளை மறித்து டயர்களை எரியவிட்டு தடைகளை ஏற்படுத்தினர்.

அரசின் அடக்குமுறை முதல் அடிப்படைப் பொருட்கள் பற்றாக்குறை வரையிலான குற்றச்சாட்டுகளை இவர்கள் கோஷமிட்டனர். இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை அரசு சிறையில் வைத்தது. நாம் என்ன காரணங்களுக்காக வீதியில் இறங்கிப் போராடினோமோ அதையே இன்றும் செய்யப்போகின்றோம் என அவர்கள் தெரிவித்தனர்.

பணவீக்கம், பாதுகாப்பின்மை மற்றும் அடக்குமுறையைக் கொண்ட இந்த அரசு எங்களது கூட்டாளிகளை வெளியில் விட மறுக்கின்றது என்று மாணவர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் தடை எதிர்ப்புகளையும் மீறி 500இற்கும் மேற்பட்டோர் தலைநகர் காரகாசின் அல்ட்டாமிரா சதுக்கத்தில் கூடி எதிர்ப்பு வாசகங்க



ளைக் கொண்ட அட்டைகளை கையில் ஏந்திய வண்ணம் கோஷங்களை எழுப்பினர்.

கடந்த 2002 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி சாவேசின் ஆட்சியில் நடைபெற்ற தற்காலிக பதவி கவிழ்ப்பு போன்ற அச்சுறுத்தல் தனக்கும் ஏற்படுத்தப்படுகின்றது என்று மதுரோ இந்தப் போராட்டங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

இதுபோன்ற வீதி ஆர்ப்பாட்டங்களை எதிர்க்கும் மிதவாதிகள் மற்றும் உட்கட்சி பூசல்கள் போன்றவற்றை ஒருங்கிணைக்க மதுரோ இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடும் என்று அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

அரசு எதிர்ப்பு போராட்டங்களில் ஆறு பேர் பலியாகியுள்ள உக்ரைன் நாட்டைப் போல் வெனிசுவேலாவைக் கருதவேண்டாம் என்று மதுரோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால் போராட்டங்களில ஈடுபட்ட 150 பேரை அரசுத்தரப்பு கைது செய்துள்ளது என்று எதிர்த்தரப்பினர் குறிப்பிடுகையில் அரசு கணக்கீடுகள் 70 என்று கைது செய்தோர் விபரத்தை வெளியிட்டுள்ளது. (2)

## நோயுற்ற பிள்ளைகளின் வயதை கருதாது கருணைக் கொலை சட்டமூலம்

### பெல்ஜிய பாராளுமன்றம் நிறைவேற்றியது



(பெல்ஜியம்)

உயிரிழக்கும் தறுவாயிலுள்ள நோயுற்ற பிள்ளைகளை வயதை கருதாது கருணைக் கொலை செய்வதை அனுமதிக்கும் சட்டமூலம் பெல்ஜிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்திற்கு 86 பாராளுமன்ற உறுப்பினர்கள ஆதரவாகவும், 44 பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்துள்ளதுடன், 12 பேர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

குறித்த சட்டமூலத்தில் மனனர் கையெழுத்திட்ட பின்னர் அது சட்டமாக்கப்படும் என சர்வதேச தகவல்கள் குறிப்பிடுகின்றன.

வயதெல்லையை கருத்திற் கொள்ளாமல் கருணை கொலையை அனுமதிக்கும் உலகின் முதலாவது நாடாக இதன் மூலம் பெல்ஜியம் பதிவாகியுள்ளது.

மரணிக்கும் தறுவாயில் வேதனைப்படுகின்ற பிள்ளைகளை மாத்திரமே கருணைக் கொலை செய்யமுடியும் என்பதுடன், அதற்கு பெற்றோரின் அனுமதி பெறப்பட வேணடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வயது வந்தவர்களுக்கு கருணைக் கொலையை அனுமதிக்கும் சட்டம் கொண்டு வரப்பட்டு, 12 வருடங்களின் பின்னர் வயதெல்லை கருதாது கருணை கொலையை அனுமதிக்கும் சட்டமூலத்திற்கு பெல்ஜியத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அயல்நாடான நெதர்லாந்தில் உயிரிழக்கும் தறுவாயிலுள்ள 12 வயதிற்கு அதிகமான பிள்ளைகளை பெறறோரின் அனுமதியுடன் கருணை கொலை செய்வதற்கு சட்டரீதியாக அனுமதி வழங்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிருடன் வருவார்களா? காத்திருக்கும் உறவுகள்

காணாமற் போன தமது உற வினர்கள் உயிருடன் மீண்டு வருவார்களா என்று ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கேள்வி யெழுப்பியிருந்தனர் காணாமற் போனவர்களின் உறவி னர்கள்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்ற ஆணைக் குழுவின் விசாரணைக்கு சாட்சிய மளிக்க வருகைதந்த காணாமற்



போனவர்களின் உறவினர்கள் பலர் இந்த கேள்வியை ஆணைக் குழுவிடம் மன்றாட்டமாக எழுப்பி யிருந்தனர்.

ஜனாதிபதி ஆணைக்குழு விடம் சாட்சியமளிப்பவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க பாரா ளுமன்றத்தில் விசேட சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டு ள்ளதாக அந்த ஆணைக்குழுவின் தலைவர் மக் வேல் பராக்கிரம பரணஹம தெரி வித்துள்ளார்.

யுத்தகாலத்தில் வடக்கில் காணாமற்போனவர்கள் தொடர் பாக விசாரணைகளை மேற்கொ ள்ளவென ஜனாதிபதி மஹிந்த



ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணை கள் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் யாழ்.மாவட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலர்பிரிவில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த விசாரணைகள் தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறவுள்ள நிலையில் நேற்றைய தினம் சாவகச்சேரி பிரதேச செய லகத்தில் விசாரணைகள் இடம்பெ ற்றன.

கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான யுத்த காலப்பகுதியில் வடக்கில் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணைகள் அந்த ஆணைக்குழுவின் தலைவர் மக்வேல் பராக்கிரம பரணஹம மற்றும் ஆணைக்குழுவின் ஆணையாளர்களான திருமதி சுரண்யா வித்யவத்தனே, திருமதி மனோ ராமநாதன் ஆகியோர் முன்னிலையில் முதற்கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மாதம் நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக காணாமற் போனோர் பற்றி விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசார ணைகள் யாழ்.மாவட்டத்திலும் இடம்பெற்று வருகின்றன.

சாவகச்சேரியில் நேற்று இடம் பெற்ற ஆணைக்குழுவின் விசாரணையில்,

### இராணுவம் காரணம்.

வடக்கில் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணை செய்யவென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழுவின் விசாரணைகள் கடந்த மாதம் கிளிநொச்சியில் ஆரம்ப மானதிலிருந்து இராணுவத்திற்கு எதிரான சாட்சியங்கள் அதிகரித்து கொண்டே வருகின்றன.

சாவகச்சேரியில் நேற்று இடம் பெற்ற ஆணைக்குழுவின் விசாரணைக்கு சமுகமளித் திருந்தவர்களில் பலரும் இராணுவத்திற்கு எதிராகவே சாட்சியமளித்திருந்தனர். வீதியால் பேருந்தில் சென்று கொண்டிருந்தபோது இராணுவ முகாமிற்கு முன்பாக இறக்கி சோதனை செய்த பின்பு அழைத்து சென்றனர். அதற்கு பின்பு தமது பிள்ளைகள் காணாமற்போயிருந்தனர் என்றும் தமது பிள்ளைகள் காணாமற்போக காரணமானவர்கள் இராணுவத்தினரேயெனவும் குற்றஞ்சாட்டினர்.

இராணுவத்தினரால் கடந்த 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதில் பலரை இராணுவத்தினர் விசாரணைக்கென கொண்டு சென்றனர். ஆனால் இதுவரை அவர்களில் பலர் எங்கு சென்றனர் என்பது தெரியவில்லை. இராணுவம் சுற்றிவளைத்து பிடித்தவர்களுக்கு பொறுப்பு கூறவேண்டியவர்கள் அவர்களைத்தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது.

அதேவேளை இராணுவத்தினர் கைது செய்ததன் பின்னர் இராணுவ முகாமில் முதுகுப் புறமாக கைகளை கட்டிவைத்தபடி எமது உறவினர்களை பலர் கண்டும் உள்ளனர்.அத்தோடு அவர்களின் துவிச்சக்கரவண்டி கள் உள்ளிட்ட ஆவணங்களை யும் இராணுவ முகாமில் நாம் கண்டுள்ளோம் என்றும் காணாமற்போனவரகளின் உறவினர்கள் இராணுவத்திற்கு எதிராக சாட்சியமளித்தனர்.

### விடுதலைப்புலிகளுடன் தொடர்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்புடைய வர்கள் என்று குற்றஞ்சாட்டி தலையாட்டிகளைக்கொண்டு தமது உறவினர்களை இராணுவத்தினர் கைது செய் துகொண் டுசென் றனர். ஆனால் அவர்களுக்கு விடுதலைப் புலிகளுடன் எந்த விதமான தொடர்பும் இல்லை. பாடசாலையில் படித்து கொண்டிருந்தவர்களைக்கூட இராணுவத்தினர் விட்டுவைக்க விலலை.

நள்ளிரவு வேளைகளில் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து நாம் கதறகதற எமது பிள்ளைகளை இராணுவத்தினர் இழுத்துச்சென்றனர் என்றும் பல பெற்றோர் ஆணைக்குழுவிடம் சாட்சிமளித்தனர்.

இதேவேளை விடுதலைப்புலிகளுக்கு உணவு கொடுத்தார் என்று கூறி எனது கணவரை இராணுவத்தினர் தமது முகாமிற்கு கொண்டு சென்றனர்.

கடந்த 1996 ஆம் ஆண்டு கொண்டுசென்ற எனது கணவர் பற்றி இன்றுவரை எந்த தகவல்களும் இல்லை. கைது செய்த இராணுவத்தினரையும் எனக்கு தெரியாது.அவரின் பெயரும் எனக்கு தெரியாது. எப்படியாவது எனது கணவரை மீட்டுத்தாருங்கள் என்று ஆரம்ப பாடசாலை ஆசிரியை ஒருவர் சாட்சியமளித்தார்.

### வலுக்கட்டாயம்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது பிள்ளைகளை வலுக்கட்டாயப்படுத்தி தமது அமைப்பில் இணைத்துக் கொண்டதாகவும் ஆனால் அதற்கு பின்பு பலர் வீட்டுக்கு திரும்பிவந்து திருமணம் செய்து வாழ்ந்து வந்ததாகவும் அதன்பின்பு முள்ளிவாய்க்கால்,வட்டுவாகல் பகுதியில் இறுதியுத்தத்தின்போது காணாமற்போனதாவும் உறவினர்கள் சாட்சியமளித்தனர்.

இதில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே இவ்வாறு வலுக்காட்டாயப்படுத்தி புலிகள் அமைப்பில் பலர் இணைக்கப்பட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

### உயிருடன் வருவார்களா?

ஐயா எங்கட பிள்ளைகள் இப்ப உயிருடன் இருப்பார்களா? அவர்களை உயிருடன் எங்களிடம் மீட்டுத்தாருங்கள் என்று கண்ணீர் விட்ட உறவினர்கள்,

எப்பொழுது எம்பிள்ளைகள் மீண்டுவருவார்கள் என்று உயிரைக்கையில் பிடித்துகொண்டு காத்திருக்கின்றோம் என்றும் தெரிவித்தனர்.

உழைத்து குடும்பத்தை காப்பாற்ற வேண்டியவர்களை தொலைத்து விட்டு கண்ணீருடன் தேடி அலைகின்றோம். ஏங்களுக்கு உங்களுடைய உதவிகள் எதுவும் வேண்டாம். காணாமற்போன எங்களுடைய பிள்ளைகளை மீட்டுத்தந்தாலே போதும்.









மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்ததோடு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடமும் நாங்கள் சாட்சியமளித்திருந்தோம்.

ஆனால் இதுவரைக்கும் எங்களுடைய பிள்ளைகளை மீட்டுத்தர யாருமே நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த ஆணைக்குழுவாவது எமது பிள்ளைகளை மீட்டுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மன்றாட்டமாக வேண்டுகோள்விடுத்தனர்.

காணாமற் போன தமது உறவினர்களைத்தேடும் உறவுகளின் கண்ணீர்போராட்டம் வடக்கில் இன்னும் முடிவிற்கு கொண்டு வரப்படாமல் தொடர்ந்தவண்ணமேயுள்ள அதேவேளை இராணுவத்திற்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்கள் அதிகரித்துகொண்டே வருகின்றன.

உறவுகளைத்தேடும் உறவினர்களுக்கு ஜனாதிபதி விசேட ஆணைக்குழுவாவது ஒரு தீர்வினைப்பெற்றுக்கொடுக்குமா?

எஸ்.ஆர்.கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்பு வாசகர்களே!

அரசியல், ஆன்மீகம், சினிமா, பொழுது போக்கு தொடர்பான உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல. 3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

*எஸ். விஜிதபாமா, கோண்டாவில்.*

அன்பின் வியாசர் அண்ணா!

**செத்தவன் வாயில் மண்ணும், இருக்கிறவன் வாயில் சோறும் என்று கூறுகிறார்களே! அதற்கு என்ன அர்த்தம் என்று எனக்கு புரியவில்லை. தயவு செய்து உங்களுக்கு புரிந்தால் கூறுவீர்களா?**

ஒருவன் செத்துவிட்டால் அவன் இந்த மண்ணுக்கே சொந்தம். மண்தான் அவனை செரித்து தனதாக்கிக் கொள்ளப் போகிறது. ஆனால், உயிருடன் இருக்கும் ஒருவனுக்கு தேவை உணவு (சோறு) உயிர் வாழ தேவை சோறு. உயிரில்லா உடல் செரிக்கத் தேவை மண்.

*கிரு. செந்தூரன், பருத்தித்துறை*

அன்பின் வியாசரே!

**ஒருவனைக் காதலித்த பெண் கல்யாணம் ஆன பின்னரும் அவனைக் காதலிப்பதாகக் கூறுகிறாள் நம்பலாமா..?**

தன்னை திருமணம் செய்த ஆண் ஒருவன் தன்னில் நம்பிக்கை கொண்டு வாழ்கின்றான் என்பதை உணர்ந்தால் இப்படிப்பட்ட வார்த்தைகள் வாழ்வில் வரவே வராது.

*வே. வே. அகிலேஸ்வரன், மருதங்கேணி*

அன்பின் வியா!

**இன்றைய கடைச் சாப்பாட்டைப் பற்றி என்ன நினைக்கின்றீர்?**

ஒரு சிறிய நகைச்சுவைக் கதையொன்று. ஒரு சாப்பாட்டுக் கடையில் ஒருவன் போய் முதலாளியின் மேசைக்கு நேரே இருந்து சோறு சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அப்போது அவனது சோற்றில் கல் கடிபட்டது. அதை முதலாளி கண்டு விட்டு, காணாதது போல் உதவியாளரை அழைத்து ஏதோ கூறுவதுபோல் பாசாங்கு செய்து விட்டு இருந்து விட்டார். மறுபடியும் அவனுக்குச் சோற்றில் கல் கடிபட்டது. முதலாளியும் நேருக்கு நேர் பார்த்து விட்டார். அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. "என்ன கல் கடிபடுகிறதா?" எனக் கேட்டார். அதற்கு அவன் "இல்லை இல்லை இடைஇடையே சோறும் கடிபடுகிறது" என்றான்.

## இன்றைய கடைச் சாப்பாட்டைப் பற்றி என்ன நினைக்கின்றீர்?

*பி. இளவரசி, பருத்தித்துறை*

அன்பின் வியா!

**என்னைப் பற்றி ஒரு பாடல்**

ஓர் ஆயிரம் கேள்வியிலே உன் கேள்வியை நான் அறிவேன். அந்த கேள்விக்கு பதில் எழுத பல பேரிடம் கெஞ்சி நிற்பேன்.

*S.K. நாகினி, புன்னாலைக்கட்டுவன்*

அன்பின் வியாசரே!

**எனது கணவர் அடிக்கடி கோபப்படுகிறார் என்னதான் செய்வது?**

இரண்டு தலையணையை ஒரு தலையணையாக மாற்றிவிடுங்கள். அது தான் தலையணை மந்திரம் என்று கூறுவார்களே!

*ச. புவித்ரா, சாவகச்சேரி.*

**Hai Anna!**

**இன்றைய காலத்தில் சிறுவர்கள் ஏன் யாருக்கும் அடங்காதவர்களாக தங்களுடைய விருப்பத்தின் பெயரில் செயற்படுகின்றார்கள்?**

சிறுவர் என்றாலே அவர்கள் தங்கள் விருப்பங்களை நிறைவேற்ற வேண்டும் என்றே நினைப்பார்கள். நல்லவை என்றால் நிறைவேற்றலாம். அதே கெட்ட விடயம் என்றால் பொறுமையாய் அந்த விடயத்தில் இருக்கின்ற தீயனவற்றை அன்பாய் எடுத்துக் கூறினால் ஏற்றுக் கொள்வார்கள். எதையும் மாற்றும் வல்லமை அன்புக்கு உண்டு.


## எனது கணவர் அடிக்கடி கோபப்படுகிறார் என்னதான் செய்வது?

### கொஞ்சம் சிரிங்கப்பா...

"பிடிபட்ட தீவிரவாதி நிறைய தமிழ் சினிமா பார்த்திருப்பான் போல"

"எப்படிச் சொல்றீங்க?"

" 'என்னை விசாரிக்க 'ஆக்ஷன் கிங்' ஆர்ஜுன் வரலையா?'னு கேட்கிறான்."



*தர்மிகா, யாழ்ப்பாணம்.*

**Hai வியா அண்ணா!**

**உங்களுக்கு பிடிக்காத விடயத்தை யாரும் செய்தால் என்ன செய்வீர்கள்?**

என் இதயத்தில் இருந்து அவர்களை எடுத்து எறிந்து விடுவேன். அதன்பின்னர் அவர்களுக்கு என்னிடம் இடம் கிடையாது.

*எஸ். காந்தரூபன், சுழிபுரம்*

**Hai வியா அண்ணா!**

**மற்றவர்களின் மனநிலையை புரிந்து கொள்ளாத மாந்தரைப் பற்றி உங்களின் கருத்து என்ன?**

மிருகங்கள் என்று கூறக்கூடமுடியாது. அவை கூடச்சில சந்தர்ப்பங்களில்மற்றவைகளின் மனததைப்புரிந்துகொண்டுநடக்கும்ஆனால்இவர்களோ வாயில் வரும் வார்த்தைகளை அள்ளிக் கொட்டிவிட்டு தன்னை நியாயப்படுத்த ஓடித் திரிவார்கள். இப்படிப்பட்டவர்களின் இறுதி வாழ்க்கை நரகமாகவே இருக்கும்.

*த. மோகனரூபன், சுழிபுரம்.*

**Hi அண்ணா!**

**கல்வியை பற்றி உங்களின் கருத்தை வழமையான பஞ்சு டயலொக் மூலம் கூறுகளேன்?**

பள்ளியில் படித்தால் உனக்கு வரும் பெருமை. அதை பாதியில் விட்டால் உனக்குப் பெயர் எருமை.

*சு. ஜெயரூபன், பருத்தித்துறை.*

அன்பின் வியாசரே!

**எங்கள் யாழ்ப்பாணத்தில் இன்று புற்று நோயின் தாக்கம் அதிகரிக்கக் காரணம் என்ன?**

பார்த்தீனியத்துக்கு அடிக்க வேண்டிய மருந்தை பிஞ்சுகளுக்கு அடித்து அதை பழம் என்று உண்டு, நமக்கு நாமே தலையில்மண் அள்ளிப் போடும் பண்பாடு நம்மிடம் தானே இருக்கிறது.

# சந்தர்ப்பம் கிடைத்தால் கலந்துகொள்வேன்-வாசு

ஜெனீவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனிதவுரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் சந்தர்ப்பம் கிடைத்தால் தானும் கலந்து கொள்ளும் எதிர்பார்ப்புடன் இருப்பதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டத்தொடரில்கலந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தால், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இதுவரை செயற்படுத்தியுள்ள விதம் குறித்து அதில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களுக்கு தெளிவுப்படுத்த எண்ணியுள்ளேன்.

மனிதவுரிமை ஆணைக் குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக யோசனை முன்வைக்க உத்தேசித்துள்ள அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் கடந்த காலத்தை விட இம்முறை மிகவும் திட்டமிட்ட வகையில் அந்த பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

அமெரிக்கா தலைமையிலான இந்த யோசனைக்கு எதிரான நிலைப்பாடுகளை கொண்டுள்ள மற்றும் நடுநிலையான நிலைப்பாடுகளை கொண்ட நாடுகளும் மனிதவுரிமை ஆணைக்குழுவில் அங்கம் வகிப்பதால், இலங்கையும் சம்பந்தப்பட்ட யோசனை தொடர்பில் கவனத்தில் கொண்டு கருத்துக்களை முன்வைக்க வேண்டும்.

இந் நிலையில், இலங்கையில் இருந்து ஜெனீவா செல்லும் பிரதிநிதிகள் குழுவில் சில புதிய முகங்கள் இருப்பார்கள்.

எனக்கும் அந்த பிரதிநிதிகள் குழுவில் இடம்பெற அதிக வாய்ப்புள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ-2)





எமது கரந்தன் ராமுப்பிள்ளை வித்தியாலய அதிபர் திரு. கு.வாகீசன் அவர்களின் பாசமிகு தந்தை உயர் திரு. இராஜக்கோன் குழந்தைவேலு (இளைப் பாறிய அதிபர், யா/ மட்டுவில் கமலாசினி வித்தி) அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதோடு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்க்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரிய நலன்புரிக்கழகம், கரந்தன் ராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி.


# வாய்ப்புற்று நோய்க்கு மூலிகை வெற்றிலை

(கொழும்பு)

வாய்ப்புற்றுநோயை தடுக்கும் வகையில், சுகாதார அமைச்சினால் புதிய வெற்றிலை பீடா ஒன்று அறிமுகம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் வாய்ப்புற்று நோயால் நாளாந்தம் நான்கு பேர் உயிரிழக்கின்றனர்.

வெற்றிலை மற்றும் மதுபாவனையே இதற்கான பிரதான காரணமாக காணப்படுகிறது.

இந் நிலையில் அதனை தடுக்கும் வகையில், கராம்பு, சாதிக்காய் போன்ற மூலிகைகளால் ஆன வெற்றிலை பீடா ஒன்றை அறிமுகம் செய்ய சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

முதற்கட்டமாக இதனை பௌத்த பிக்குமார்களுக்கு வழங்க திட்டமிட்டிருப்பதாக, சுகாதார அமைச்சின் புற்றுநோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது. (அ-2)





தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்ப்பாண மாவட்ட காரியாலயத்தின் மருதங்கேணி பிரதேச பிரிவில் இளைஞர் சேவை அதிகாரியாக கடமை புரியும் செ.கோகிலராஜா அவர்களின் மூத்த புதல்வன் கோ. பிரதாஸ் அவர்கள் 14.02.2014 ஆம் திகதி அகால மரணம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அவரின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் மன அமைதியடையவும் இறைவனை பிரார்த்திக்கிறோம்.

சகல உத்தியோகத்தர்கள், இளைஞர் கழகங்களின் மாவட்ட சம்மேளனம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மாவட்ட காரியாலயம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சான்று நீதிபதியாய் இருந்து தண்டனை தருமுன் நண்பனாய் இருந்து எச்சரிக்கை செய்யும். – ஸ்டானிஸ்லாஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உங்கள் மனச்சாட்சியை விற்றுவிட்டு விசாரணை நடத்தி விடாதீர்கள்

வன்னிப் போரில் பெற்ற வெற்றியை விழாவாகக் கொண்டாடிய இலங்கை அரசு போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அவலம் பற்றி சிறிதும் சிந்தித்தில.

விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்று நினைத்த அரசு அதன் பொருட்டு நடத்தும் போரில் தமிழ் மக்களுக்கு ஆபத்து நேராமல் அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்திருந்தால் இத்துணை அழிவுகளை தமிழ் மக்கள் சந்தித்திருக்க மாட்டார்கள்.

ஆனால், இலங்கை எங்கள் நாடு. எங்கள் நாட்டில் நாங்கள் நினைத்ததே சட்டம். நாங்கள் எது செய்தாலும் அதனை யாரும் தட்டிக் கேட்க முடியாது என்ற திமிர்த்தனம் வன்னிப்போரில் நாசகாரம் பண்ணியது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் சிக்கிப் பொது மக்கள் உயிரிழந்தார்கள் என்ற துன்பத்துக்கு அப்பால்; போர் முடிந்த பின், மக்களைக் காப்பாற்ற வேண்டியவர்கள் நடந்து கொண்ட முறை இந்த உலகம் இருக்கும்காலும் இலங்கை ஆட்சியாளர்கள் தமிழருக்குச் செய்த கொடுமை மறந்து–மறைந்து போகக் கூடியது அல்ல.

விடுதலைப்புலிகளுடனான போர் வெற்றிக்குப் பின் படைத்தரப்பிடம் சரணடைந்தவர்களுக்கு நடந்தது என்ன? உறவுகளின் கண்முன்னே வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்ட அந்த தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு என்ன நடந்தாயிற்று? ஏன்தான் இப்படியொரு கொடுமைத் தனம் புரியப்பட்டது?

ஒரு இனத்தை அழித்து இன்னொரு இனம் வாழ்ந்ததாக சரித்திரம் இருக்கின்றதா என்ன?

காலனித்துவ ஆட்சியில் இலங்கையை தங்களின் இறையாண்மைக்கு உட்படுத்தும் பொருட்டு தங்களின் சமயப் பண்பாட்டு விழுமியங்களை புகுத்திய குடியேற்றவாதிகள் இங்கிருக்கக் கூடிய இந்து ஆலயங்களைஅழித்தனர்.

சைவ பண்பாட்டைக் கடைப்பிடிப்பது முதல் சைவசமயிகளாக வாழ்வதுவரை அவர்களுக்கு வெறுப்பூட்டியது. அன்று அவர்கள் இலங்கை பூராகவும் தங்கள் மயமாக இருக்க வேண்டுமென நினைத்தனர். அந்த நினைப்பும் அதன் செயல் வினையும் இன்று பிரித்தானியாவில் இந்துக் கோயில்களின் இராஜகோபுரங்கள் ஓங்கி உயர்ந்து காட்சி தருகின்றன.

லண்டன் மாநகரில் தேர் ஓடுகின்றது. வாழை இலையில் போசனம் அருந்தி விரதம் அனுஷ்டிக்கும் கலாசாரம் ஆங்கில தேசத்தில் நடந்தாகிறது. இதுவே இயற்கையும் உலக நியதியும் ஆயிற்று.

நிலைமை இப்படியாக இருக்கையில், வன்னிப் போரில் மீண்டு வந்த என் பிள்ளையை, என் கணவனை, என் சகோதரனை உங்களிடம் ஒப்படைக்கின்றேன் என்று கை எடுத்துக் கும்பிட்டு காப்பாற்றுங்கள் எனக் கெஞ்சி நம்பிக்கையோடு தந்துபோக, நீங்கள் அவர்களை என்ன செய்தீர்கள்?

தோற்றவனை விட வென்றவனுக்கே அதிக துன்பம் என்று கௌதம புத்தபிரான் போதித்த அந்த உண்மையை இப்போதாவது நீங்கள் உணருவீர்களோ தெரியாது?

ஆனால் ஒன்றை மட்டும் கூறலாம். ஆணைக்குழு என்ற பெயரில் விசாரணை நடத்தும் பெரியவர்களே! உங்கள் மனச்சாட்சியை விற்றுவிட்டு, தயவு செய்து விசாரணை நடத்தாதீர்கள். அப்படி விசாரணை நடத்தினால் அது கொன்றொழித்த கொடுமையிலும் கொடுமையானது என்பதை மருந்துக்கேனும் மறந்து விடாதீர்கள்.

## சிறையில் இருந்து தப்பிய நபர் 17 வருடங்களின் பின்னர் கைது

(கொழும்பு)

வெலிக்கடை சிறையில் இருந்து தப்பித்த கைதி ஒருவர் 17 வருடங்களின் பின்னர் பொலனறுவை, புலஸ்திகம பிரதேசத்தில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளார்.

குறித்த நபர் 1987 ஆம்ஆண்டு கொலை சம்பவம் ஒன்று தொடர்பாக பொலனறுவை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டதுடன் கொலை சம்பவம் தொடர்பில் குற்ற வாளியாக இனங்காணப்பட்டு, 1996 ஆம் ஆண்டு செப்டெம்பர் 17 ஆம் திகதி முதல் 4 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், 1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் திகதி சிறையில் இருந்து தப்பித்த இந்த நபர் புலஸ்திகம பிரதேசத்தில் தலைமறைவாக இருந்து வந்துள்ளார்.

இது குறித்து பொலனறுவை பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் இந்த நபர் கைது செய்யப்பட்டார். (அ-2)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

(குருநாகல்)

குருநாகல்-தம்புள்ள வீதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்த ஹோட்டல் உரிமையாளர் ஒருவர் குருநாகல் வைத்தியசாலையில் மரண மடைந்து விட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 35 பேர் பங்கு பற்றிய வைபவமொன்றில் பங்கேற்ற இவர் மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு அவரை புகையிரத தண்டவாளத்தில் அருகில் கொண்டு வந்து போட்டு சென்றுள்ளனர்.

ஒருவாறு தம்புள்ள வீதிக்கு வந்த அவர் முச்சக்கர வண்டியில் வைத்தியசாலைக்கு சென்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

## வீடு தீப்பிடித்ததில் யுவதி உடல் கருகி பலி

(கொழும்பு)

ஆலையடிவேம்பு, வாச்சிக்குடா பிரதேசத்தில் வீடு ஒன்று தீப்பிடித்து எரிந்ததில் யுவதி ஒருவர் தீயில் கருகி உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதாக அக்கரைப்பற்று பொலிசார் தெரிவித்தனர.

இதில் வாச்சிக்குடா தலைவர் வீதியைச் சேர்ந்த 22 வயதுடைய தங்கராசா திவ்வியா என்பவரே உயிரிழந்துள்ளார்.


இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

இச் சம்பவத்தில் உயிரிழந்தவர் வழமையாக காலை 9 மணிக்குப் பின்னர் நித்திரையில் இருந்து எழுவதாகவும் நேற்று முன்தினம் இரவு தனது அறைக்குச் சென்று அறையில் கதவை உட்பகுதியால் பூட்டிவிட்டு யுவதி உறக்கத்தில் ஆழ்ந்துள்ளார்.

இந்நிலையில் வீட்டின் அறையில் நித்திரையில் இருந்துள்ள நிலையில் காலை 9மணியளவில் வீட்டின் அறை தீப்பற்றி எரிவதை கண்ட தாயார் சத்தமிட்டதை யடுத்து அயலவர்கள் வந்து தீயை தண்ணீர் ஊற்றி கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர்.

இந்நிலையில் அறையின் கட்டிலில் நித்திரையில் இருந்த யுவதி தீயில் எரிந்து கருகியதுடன் அவ் அறையில் உள்ள அலுமாரி மற்றும் தளபாடங்கள உடுபபுக்கள் உட்பட அறையில் இருந்த பொருட்கள் யாவும் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளதுடன் வீட்டின் கூரையின் ஒருபகுதி தீப்பற்றி எரிந்துள்ளது. (அ-2)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### தம்மையன்றி வேறொன்றும் காணார்

மாண்டார் மனத்தானை மண்விண்ணு மொன்றாகி
நீண்டானை நெஞ்சமே நீநினைப்பாய்– வேண்டாமை
வேண்டுவோர் வீடு பெறுவாரே வையத்தை
ஆண்டாலு மென்னா மறி

அப்படி யுள்ளதென் றன்பாகச் சொல்லியே
அப்பன்செல் லப்ப னருள்தந்தான்– இப்பார்
இருள்கடிந் துள்ளத் தெழுந்தவெல் லென்றான்
அருள்சேர் மாதவத்தோ னன்று

## நல்ல கண்ணோட்டத்துடன் எல்லாவற்றையும் அணுகுவோம்

இன்று நமக்குத் தரப்படும் பைபிள் பகுதியில் "திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம. அவற்றை அழிப்பதற்கல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன். விண்ணும் மண்ணும் ஒழிந்து போகுமுன் திருச்சட்டம் யாவும் நிறைவேறும்" என இயேசு கூறும்பகுதி தொடர்கின்றது

இன்று நாம் வாழும் பகுதிகளில் எத்தனையோ சட்டச் சீர்திருத்தங்களை நாம பார்த்திருக்கின்றோம். ஆயினும் கொலைகளின் எண்ணிக்கை குறைந்தபாடில்லையே. பல சட்டக்கல்லூரிகள், வழக்கு அறிஞர்கள், பொலிஸார். ஆயினும் கற்பழிப்பு எண்ணிக்கை அதிகமாகத் தானே உள்ளன. நவீன வசதிகள், கமராக்கள், தொடர்பு சாதனங்களின்

### பரமபிதா காட்டிய பாதை

வளர்ச்சிகள், குற்றங்கள் குறைந்த பாடில்லையே. ஆகவே சட்டத்தைத் திருத்தி அல்லது அதிகமாக்கி, குற்றத்தை குறைக்கவோ, மனிதனின் வாழ்க்கையை கூட்டவோ முடியாது என்பது இங்கு தெளிவாகிறது.

திட்டம்போட்டு திருடும் கூட்டம் திருடிக்கொண்டே இருக்கும். திருடனாகப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது.

ஆகவே உள்ளுக்குள் ஊற்றெடுக்கும் எண்ணக்கருவை கலைக்கச் சொல்கிறார இயேசு. அடுத்தவனை மதிக்காதவன், ஏற்றுக்கொள்ளாதவன், வெறுப்பவன், கோபப்படுகிறான், கொலை செய்கிறான். பெண்ணைப் பொருளாகப் பார்ப்பவன், கற்பழிக்கிறான். சுய நலமுள்ளவனும், சோம்பேறியும் களவு செய்கிறான். ஒவ்வொருவரும் தனக்குள் சென்று, அயலானுக்கு எதிரான மனப்பாங்கு இருந்தால், அதை அடையாளம் கண்டு, அடியோடு அகற்றி னால், சட்டங்கள் அவசியமில்லை. மனிதர் நாம் நிம்மதியில் வாழலாம்.

இயேசு தொடர்ந்து கூறும்போது, நான் உங்களுக்குச் சொல்கிறேன் ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கனவே அப்பெண்ணோடு விபசாரம் செய்தாயிற்று என்கிறார்.

ஆகவே கற்பு களவு போவது விபசாரத்தில் மட்டுமல்ல. கற்பு பறி போவது வன்முறை கலாசாரத்தில் மட்டுமல்ல. கற்பை இழப்பது பெண் மட்டுமல்ல, ஆணும்தான். கற்பை இழப்பது தொலைக்காட்சிப் பெட்டியும் இணையததளமும் அல்ல. கற்பு களங்கம் அடைவது குறுந்தகட்டில் அல்ல.

கற்பு என்பது இறைவனுக்கும் எனக்கும், எனக்கும் என் அயலானுக்கும் இடையே உள்ள, இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட உறவு முறை.

இந்த உறவு களங்கப்படுவது செயலில் என்பதைவிட சிந்தனையில் அதிகமாக, ஆபத்தான அழிவை உண்டாக்குகிறது என்பது இயேசுவின் புதிய விளக்கம்.

பார்க்கும் பொருளும் ஆளும் இடமும் பார்க்கின்ற விதமும் கற்பு என்னும புனிதமான உறவை களங்கப்படுத்தி விடுகின்றன.

யதார்த்தமான நிகழ்வும் செயலும் சொல்லும் கற்பு என்னும் இப் புனிதமான உறவில் விரிசல் ஏற்படுத்தி விடுகின்றன. சாதாரண நிகழ்வைத் நாம் தவறான கண்ணோட்டத்துடன் பார்க்கும் போதும் விமர்சனம் செய்யும் போதும் தாக்கப்படுவது புனிதமான உறவில் வாழும்கற்புநிறைந்த இதயங்கள் அல்லவா.



ஆகவே நல்ல கண்ணோட்டத்துடன் எதையும் பார்ப்போம். நடக்கும் நிகழ்ச்சியை நல்ல மனநிலையில் காண்போம்.

இயேசு யூத மரபில் பிறந்து வளர்ந்தவர் என்பது எமக்குத் தெரியும். எனவே, அவருடைய ஆன்மீகம் யூத முறையில் அமைந்திருந்தது என்பதை நாம் ஐயமற ஏற்கலாம். என்றாலும், இயேசு யூத சமய நெறிகளைச் சீர்திருத்துவதையும் தன் பணியின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார் என்பதை பைபிளில் உள்ள நற்செய்தி நூல்கள் தெளிவுபடுத்துகின்றன. யூத சமய மரபு சில வேளைகளில் சட்ட நுணுக்கங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து விட்டு, சட்டத்தின் உண்மைப் பொருளை மறந்துபோனதுண்டு.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

இதை இயேசு கண்டிக்கிறார். அது போலவே, யூத சமய நெறிகளை விளக்கியுரைத்த மறைநூல் அறிஞரும் பரிசேயரும் அவற்றின் ஆழ்ந்த பொருளை மறந்துவிட்டிருந்தனர்.

எனவே இயேசு தம் சீடரின் நெறி மறை நூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் நெறியைவிடச் சிறநதிருக்க வேண்டும் எனக் கோரினார்.

நீங்கள் உண்டாலும் குடித்தாலும் எதைச்செய்தாலும், எல்லாவற்றையும் கடவுளுடைய மாட்சிக்காகவே செய்யுங்கள் எனக்கூறும் பைபிள் வரிகளுக்கு அர்த்தம் கொடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய போட்டி

கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையிலான விளையாட்டுப்போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் ஆண்களுக் கான காற்பந்தாட்டப் போட்டிகள் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

எனவே பதிவு பெற்ற இளைஞர் கழக அணிகள் குறித்த நேரத்தில் வருகை தந்து போட்டிகளில் பங்குபற்றுமாறு கரவெட்டி பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் மனோறாஜ் கேட்டுள்ளார். (க-23)

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

கருவம்பானை பகுதியில் புதிய சவாரி திடல் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.

தமிழர்களின் வீர விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டு சவாரித் திடல் குறித்த பிரதேசத்தில் இல்லாத குறை இதன் மூலம் நிறைவேற்றப்படவுள்ளது. இளவாலை பகுதி இளைஞர்களின் முயற்சியின் மூலம கருவம்பானைப் பகுதி அரச காணியொன்றில் இது அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இப் புதிய சவாரி திடலில் அளவெட்டி விவசாய சம்மேளனம் மற்றும் யாழ்.மாவட்ட மாட்டு வண்டி சவாரி சங்கம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சவாரிப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இப் போட்டிகளுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. சவாரியில் பங்குபற்ற விரும்புபவர்கள் காலையில் கருவம்பானை சவாரித்திடலிற்கு வருகை தந்து பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

இப் புதிய திடல் மூலம் இவ் வருடத்திற்கான முதலாவது சவாரிப் போட்டி நடாத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-23)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/மூளாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் இ.லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஒக்ஸ்பாம் நிறுவன நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் கு.சோமராஜ் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக மூளாய் ஜே/171 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் த.றஞ்சன் கலந்துகொள்வர். (அ-2)

# விக்ரம்-இராஜன் ஞாபகார்த்த கிரிக்கெட்; யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி வெற்றி



கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம், யாழ்.மாவட்ட துடுப்பாட்ட அணிகளுக்குள் அழைக்கப்பட்ட 4 அணிகளுக்கிடையில் விக்ரம் - இராஜன் - கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்திய 30 பந்துபரிமாற்ற துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 111 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மேற்படி சுற்றுப்போட்டியின், ஆட்டமொன்றில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியினை எதிர்த்து ஸ்ரீ காமாட்சியம்பாள் விளையாட்டுக்கழகம் மோதியது.


நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி, 30 பந்துபரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் தேவ விதுரன் 78, என்.தசீந்தன் 36, எஸ்.விதுஸ் 34 தனஞ் ஜெயகுமரா 32, அச்சுதன் 30 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் காமாட்சியம்பாள் அணி சார்பாக எஸ்.தீபன் 2 (36) இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஸ்ரீ காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழகம் 25.1 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 128 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. சுஜன் 36, சுதர்சன் 27 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி சார்பாக எஸ்.றொமேஸ் 3.1 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 6 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 இலக்குகளையும் கைப்பற்றினார். (க-23)

# உலக கோப்பையை வென்று சாதனை வரிசையில் இணைவோம்

## டோனி நம்பிக்கை




உலக கோப்பையை வென்று மீண்டும் சாதனை வரிசையில் இணைவோம்என்று இந்திய அணித தலைவர் டோனி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

11 ஆவது உலக கோப்பை கிரிக்கெட் போட்டி 2015ஆம் ஆண்டு பெப்ரவரி 14ஆம் திகதி முதல் மார்ச் 29ஆம் திகதி வரை அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் நடைபெறுகிறது.

உலக கோப்பை திருவிழாவுக்கு தொடங்க சரியாக ஓராண்டு இருப்பதையொட்டி இந்திய அணித் தலைவர் டோனி, ஐ.சி.சி. இணையதளத்துக்கு பேட்டி அளித்துள்ளார்.

அவர் கூறுகையில், உலக கோப்பையை தக்க வைத்துக் கொளவதற்கான போட்டியில் களம் இறங்க இன்னும் ஓராண்டு மட்டுமே இருக்கிறது என்பதை நினைக்கும் போது சிலிர்ப்பாக உள்ளது.

மும்பையில் அந்த அதிசயத்தக்க இரவு வந்து (உலக கோப்பையை வென்ற நாள்) ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் ஓடோடி விட்டன.

அந்த இரவு மட்டுமின்றி, அந்த ஒட்டுமொத்த தொடரும், என்றுமே எங்களது வாழ்க்கையில் மறக்க முடியாதது. உலக கோப்பை வரலாற்றில், மேற்கிந்திய அணி மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய அணிகள் மட்டுமே உலக கோப்பையை அடுத்தடுத்து ருசித்த அணிகள் என்பதை நாங்கள் அறிவோம்.

அந்த சாதனைப்பட்டியலில் 3ஆவது அணியாக எங்களால் இடம் பிடிக்க முடியும். அதற்குரிய தகுதி எங்களிடம் இரு ப்பதாக நம்புகிறேன். உச்சகட்ட நெருக்கடிக்கு மத்தியில் விளையாடும் போது அதை திறம்பட சமாளிக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த வீரர்கள் எங்களிடம் இருக்கிறார்கள்.

2011ஆம் ஆண்டு உலக கோப்பை மற்றும் 2013ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்த ஐ.சி.சி. சம்பியன்ஸ் கோப்பை ஆகிய போட்டிகளில் இதை நாங்கள் நிரூபித்து காட்டியுள்ளோம். நியூ சிலாந்தில் நடந்த ஒரு நாள் தொடரில் நாங்கள் ஒரு ஆட்டத்தில் கூட வெல்லவில்லை.

ஆனால் இந்த தொடர் உலக கோப்பைக்கு தயாராவதற்கு பயனுள்ள அனுபவத்தை கொடுத்துள்ளது. 2011ஆம் ஆண்டு உலக கோப்பையை வென்ற போது ஒட்டுமொத்த தேசமும் மகிழ்ச்சிக்குள்ளானது என்றும் 2015ஆம் ஆண்டிலும் அதை மீண்டும் செய்ய விரும்புகிறோம் எனவும் கூறியுள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யா/சுங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட் கிழமை பிற்பகல் ஒருமணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சூநோபேட் உதயகுமார் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டு சிறப்பிக் கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வலிகாம வலய கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.கந்தசாமி, கௌரவ விருந்தினர்களாக வலி மேற்கு பிரதேச செயலக கிராம அலுவலர் து.சுபேஷ், வலிவடக்கு பிரதேச சபை பொது முகாமைத் துவ உதவியாளர் செ.ஜயச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப் பிக்கவுள்ளனர். (அ-2)

☯ ☯ ☯ ☯ ☯

(யாழ்ப்பாணம்)

யா/வேலணை மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரியின் பிரதான விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக இக் கல்லூரியின் பழைய மாணவர்களான முத்துசாமி சோமஸ்கந்தா, திருமதி வனஜா சோமஸ் கந்தா, சிறப்பு விருந்தினர்களாக கல்லூரி முன்னாள் ஆசிரியர் இராசையா இரகுபதி, தீவக வலய மாணவர் அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் சண்முகராசா பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப் பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வேலணை வர்த்தக வங்கி முகாமையாளர் விமலசிங்கம் மதியூகன், வேலணை கோட்டக் கல்வி அதிகாரி பொன்னம்பலம் சிவானந்தராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப் பிப்பார்கள். (அ-2)

☯ ☯ ☯ ☯ ☯

(யாழ்ப்பாணம்)

யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வல்லுநர் திறனாய்வு நாளை திங் கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் பாடசாலை அதிபர் ஸ்ரீ.சிவநாதன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினர்களாக சட்டத்தரணி ஞானலோஜினி சிவஞானம், நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் அ.இரவீந்திரதாசன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக பாடசாலையின் பழைய மாணவர்களான சு.விஜயகுமார், ஆ.சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-2)







கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வில் விருந்தினர் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரத்தினசீலன் அவர்கள் பாரியார், அதிபர் வே.ஞானகாந்தன் உட்பட்ட விருந்தினர்கள் வெற்றியீட்டிய இல்லத்திற்கு கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவத்துக்கு...

வருகின்றனர்.

காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படவேண்டுமென கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைத்ததற்கு அமைவாக வடக்கில், கடந்த 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான யுத்தகாலப் பகுதியில் காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை செய்யவென ஜனாதிபதியினால் விசேட ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற இந்த ஆணைக்குழுவின் விசாரணைகள் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் யாழ்.மாவட்டத்தில் நேற்று முன்தினம் கோப்பாய் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது. இதன் தொடர்ச்சியாக நேற்று சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

இதன்போது 44 பேர் இந்த ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்தனர். அதில் 25 பேருக்கு மேல் இராணுவத்திற்கு எதிராக தமது சாட்சியங்களை முன்வைத்தனர்.

இராணுவத்தினர் நடத்திய திடீர் சுற்றிவளைப்புகளின் போது பலர் கைதுசெய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டதாகவும், விசாரணைகளின் பின்பு விடுவிக்கப்படுவார்கள் என்ற வாக்குறுதிகள் அளிக்கப்பட்டபோதும் அவை நிறைவேற்றப்படவில்லையெனவும் காணாமற்போனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இதனைவிட யாழ்ப்பாணத்தில் அந்தக்காலப பகுதியில் இடம்பெற்ற வீதிச்சோதனை நடவடிக்கைகளின் போது பலர் கைதுசெய்யப்பட்டதாகவும் அவர்கள் எங்குகொண்டு செல்லப்பட்டனர் என்பது தெரியவில்லையெனவும் ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்தனர்.

கிளிநொச்சியில் கடந்த மாதம் ஆரம்பமான இந்த ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு நேற்று வரை சுமார் 250 பேர் வரை சாட்சியமளித்துள்ளனர். இதில் அதிகளவான சாட்சியங்கள் இராணுவத்திற்கு எதிராகவே முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் இன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இந்த ஆணைக்குழுவின் விசாரணைகள் இடம்பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## மூவாயிரம் இராணுவத்தினர்...

அதேவேளை எனது மகன்களை பிடிச்சவங்களைவிட்டுட்டு எங்களையேன் இத்தனை கேள்வி கேட்கிறியல் என்று ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் வயோதிபர் ஒருவர் ஆதங்கப்பட்டார். கடந்த 1996 ஆம் ஆண்டு நாவற்குழி பகுதியில் இடம்பெற்ற பாரிய சுற்றிவளைப்பின் போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டபின்பு காணாமல் போன தனது கணவனை மீட்டுத்தருமாறு குடும்பப்பெண் ஒருவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கண்ணீருடன் சாட்சியமளித்தார்.

கடந்த 1990 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரையான யுத்தகாலப்பகுதியில் காணாமல் போனவர்களை கண்டறியும் ஜனாதிபதியின் விசேட ஆணைக்குழுவின் விசாரணைகள் யாழ்ப்பாணத்தில் நேற்றுக்காலை சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் ஆரம்பமானது.

இதில் கடந்த 1996 ஆம் ஆண்டு சாவகச்சேரி நாவற்குழிப்பகுதியிலிருந்த இராணுவ முகாமிற்கு பொறுப்பாளராகயிருந்த கொமாண்டர் துமிந்த தலைமையிலான இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட தமது பிள்ளைகள் மற்றும் கணவன் ஆகியோர் காணாமல்போனதாக பலரால் சாட்சியமளிக்கப்பட்டது.

இதேவேளை மேற்படி ஆணைக்குழுவிற்கு சாட்சியம்ளித்த வயோதிபர் ஒருவர் கூறுகையில், மறவன்புலோவிலுள்ள தனது வீட்டிற்கு வந்த 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கடந்த 1996 ஆம் ஆண்டு தனது இரண்டு மகன்களையும் கொண்டு சென்றதாகவும். தனது மகன்களை கைது செய்ய வந்த ராணுவத்தினர் தமக்கு உரிய பதிலளிக்கும் மனநிலையிலிருந்திருக்கவில்லையெனவும் குறிப்பிட்டார்.

அதேவேளை எங்களிடம் பல கேள்விகளைக்கேட்கும் இந்த ஆணைக்குழு எமது பிள்ளைகளைக்கொண்டுபோய் வைச்சிருக்கிற இராணுவத்திடம் என்னத்த கேட்டது எனவும் கேள்வியெழுப்பினார்.

அத்தோடு கொமாண்டர் துமிந்த தலைமையில் சாவகச்சேரியில் அந்தக்காலப் பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்புகளின்போது பலர் தலையாட்டிகளைக்கொண்டு கைது செய்யப்பட்டதாகவும் இராணுவம் கைது செய்தவர்களில் பலர் எங்கு சென்றனரோ தெரியவில்லையெனவும் சாட்சியமளித்தனர்.

தலையாட்டிகளின் பின்புறமாக கத்தியினால் குத்தியபடி பலரை வேண்டுமென்றே அடையாளப்படுத்தி கைதுசெய்ததாகவும் பிள்ளைகளை பிடித்துக்கொண்டுசெல்லும் போது எதிர்ப்பு தெரிவித்ததால் தன்மீது இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டதாகவும் வயோதிபர் ஒருவர் ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்தார்.

இதேவேளை குடும்பபெண் ஒருவர் ஆணைக்குழுவிடம் சாட்சியமளிக்கும் போது, கடந்த 1996 ஆம் ஆண்டு நாவற்குழி கொமாண்டராகயிருந்த துமிந்த தலைமையில் பல முறை இராணுவத்தினரின் சுற்றிவளைப்பு இடம்பெற்றதாகவும். ஒருநாள் அவ்வாறான இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது குடும்பத்துடன் அழைத்து செல்லப்பட்டதாகவும். அதன்போது 175 பேரை இராணுவத்தினர் தடுத்துவைத்திருந்தனர் என்றும். இதன்பின்பு சாவகச்சேரி ஆலடியிருந்து 54 பேர் காங்கேசன்துறைக்கு ஏற்றி செல்லப்பட்டதாகவும் அதில் இளம் பெண் ஒருவரும் உள்ளடங்கியிருந்தாகவும் சாட்சிமளித்தார்.

எனவே தனது கணவன் உட்பட பலர் காணாமற்போக நாவற்குழி இராணுவக் கொமாண்டரே காரணம் என்றும் அந்தப் பெண் சாட்சியமளித்தார். இவ்வாறு சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் விசாரணைக்கு சமுகமளித்தவர்களில பலர் துமிந்தவிற்கு எதிராக சாட்சியமளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## 13ஐ முழுமையாக...

தேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாட்டில் 13-ம் அரசியலமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக உள்ள சில அரசியல் தலைவர்கள், கல்விமான்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களை அழைத்து சமூக நல்லிணக்க அமைச்சு நடத்தியுள்ள சந்திப்பு தொடர்பில எழுப்பிய கேள்வியின்போதே, அமைச்சர் வாசுதேவ இவ்வாறு தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவால் கொண்டுவரப்படவுள்ள தீர்மானம் பற்றியும் அதனால் இலங்கை எதிர்நோக்கக்கூடிய சூழ்நிலை குறித்தும் இந்த சந்திப்பு நடத்தப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

இப்போதுள்ள மனித உரிமைகள் பேரவையின் கட்டமைப்பின்படி, எந்தெந்த நாடுகள்-என்னென்ன வகையான நிலைப்பாடுகளை எடுக்கும் என்பது போன்ற விடயங்கள் குறித்தும் இலங்கை மீது ஏதாவது தடைகள் விதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படுமா?, இல்லாவிட்டால் இலங்கையை பணிக்கின்ற வெறும் தீர்மானமாக மட்டும் அது அமையுமா?, இல்லாவிட்டால் ஐ.நா ஊடாக தனியான ஒரு சிறப்பு பிரதிநிதி ஒருவரை நியமிக்கும் நிலை ஏற்படுமா? போன்ற நிலைமைகள் எல்லாம் இங்கு அலசி ஆராயப்பட்டன என்றார்.

அத்தோடு, இந்த சந்திப்பில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்விமான்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட தரப்பினர் 13-ம் அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பவர்கள் என்றும் அமைச்சர் கூறினார்.

அப்படியென்றால், 13-ம் அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டியது தானே. இப்படியான கோரிக்கைக்கு ஏன் அரசாங்கம் இன்னும் செவிசாய்க்கவில்லை என்றும் சமூக நல்லிணக்க அமைச்சரிடம் வினவப்பட்டது.

13 பிளஸ்: 13-ம் அரசியலமைப்புத் திருத்தத்திலும் பார்க்க கூடுதல் அதிகாரத்தை அரசியல்தீர்வுத் திட்டமாக முன்வைப்பதாக ஜனாதிபதி இந்தியத் தலைவர்களுக்கு முன்னர் வாக்குறுதி அளித்திருந்தார்

அரசாங்கம் இன்னும் அதற்கு தயாராக இல்லையே.. அரசாங்கம் என்றால் ஜனாதிபதி.. அவர்தான் இன்னும் அதற்குத் தயாராக இல்லை என்று பதிலளித்த அமைச்சரிடம் ஜனாதிபதி ஏன் தயாராக இல்லை என்று மீண்டும் வினவப்பட்டது.

அதற்கான முழுமையான காரணம் எனக்குத் தெரியாது. அவரது நிலைப்பாட்டின் படிதான் இந்த நிலைமை உள்ளது. இந்த 13-ம் அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி சில கருத்துக்களை கொண்டிருக்கிறார் என்று பதிலளித்தார் வாசுதேவ.

இருந்தாலும் குறைந்தபட்சம் மற்ற மாகாணசபைகளுக்கு உள்ள அதிகாரங்களையாவது வடக்கு மாகாணசபையிலும் கிழக்கு மாகாணசபையிலும் நடைமுறைப் படுத்த வேண்டும் என்று தம்மைப் போன்றவர்கள் தொடர்ந்தும் ஜனாதிபதியிடம் சுட்டிக் காட்டி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்தியா உள்ளிட்ட இலங்கையின் நட்பு நாடுகளை ஜெனீவாவில் இலங்கைக்கு சாதகமாக இணங்க வைக்க வேண்டியிருக்கிறது என்றும் குறித்த புத்திஜீவிகளின் கூட்டத்தில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதாகவும் வாசுதேவ தெரிவித்தார்.

அப்படியென்றால், இலங்கை தொடர்பில் கொண்டுவரப்படுகின்ற தீர்மானத்திற்கு எதிராக, அதாவது இலங்கைக்கு ஆதரவாக இந்தியா செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாடா இந்தக் கூட்டத்தில் பொதுவாக வெளிப்பட்டது என்றும் அமைச்சரிடம் கேட்கப்பட்டது.

இந்தியா என்ன நிலைப்பாட்டை எடுக்கும் என்று எங்களுக்கு இன்னும் தெரியாது. இந்தியா சிலவேளை அமெரிக்காவுக்கு ஆதரவாக- குறித்த தீர்மானத்தை ஆதரிக்கும்என்று சில ஊகங்கள் வந்தன என்றார் அமைச்சர்.

அதேநேரம் அமெரிக்காவிடம் இருந்து வரக்கூடிய தீர்மானத்தின் பாரதூரமான செறிவைக் குறைத்து இலங்கைக்கு சாதகமான நிலையை உருவாக்க இந்தியாவால்தான் முடியும் என்றும் சிலர் வாதிட்டதாகவும் தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் கூறினார். (செ-11)

## கடும் எதிர்...

தினம் நடைபெற்ற விசாரணையிலேயே காணாமல் போனோரின் உறவினர்கள் இவ்வாறு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

காணாமல் போனோரின் உறவுகள் குறித்த ஆணைக்குழுவில் சாட்சியமளித்ததன பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தினைச் சேர்ந்த சட்டத்தரணிகள் எமது விபரங்களினை திரட்டுவது ஏற்புடையது அல்ல எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் நேற்றைய தினம் நடைபெற்ற விசாரணையில் காணாமல் போன கணவன் தொடர்பில் சாட்சியமளித்த மனைவி கூறுகையில், எனது கணவர் காணாமல் போனமை தொடர்பில் கௌரவத்திற்குரிய தங்கள் ஆணைக்குழு முன்னிலையில் நான் சாட்சியம் அளிக்கும் போது கண் காணிப்பாளர்கள் பார்வையாளர்கள் இருப்பது குறித்து எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை .

எனினும்சாட்சியம் அளித்த பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டத் தரணிகளால் விபரங்கள் பெறப்படுவதற்கு நான கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கின்றேன்.

எனது கணவர்காணாமல்போனமை தொடர்பில் நான் ஆட்கொணர்வு மனு ஒன்றை தாக்கல் செய்ய உத்தேசித்திருப்பதால் எனது ஆட்கொணர்வு மனுவில் எதிர்மனுதாரராக பெயர் அல்லது பதவி குறிக்கப்படும் எவரையும் நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய எவருக்கும் எந்த விபரத்தையும் நான் கொடுக்காமலிருப்பதற்கு ஏற்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

குறிப்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தை சேர்ந்த சட்டத்தரணிகளுக்கு நான் விபரங்களை கொடுக்கத் தேவையில்லை என்ற நிலைமையினை உறுதி செய்து தருமாறு மிகவும் மன்றாட்டமாக வேண்டுகிறேன் என அவர் தெரிவித்தார். (செ-4)

## இராணுவம்...

அதனால் விடத்தல்தீவில் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்றைய தினம் இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவாக காலி, பொத்துவில், சிலாபம் போன்ற இடங்களிலும் போராட்டங்கள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (செ-6)

## சனல் 4இல்...

கொடுமை. மனிதகுலத்தின் கர்ப்பக்கிரகமான பெண்ணின் கருவறையான உடல் பகுதியில் துப்பாக்கிகளைக் கொண்டு நாசப்படுத்தும் அக்கிரமம் மிருகங்கள் கூட செய்யத் துணியாதது.

இந்தக் கொடிய சம்பவம் காணொளியாக சனல்-4 ல் விரைவில் வெளியாகக்கூடும்.

எனவே, இலங்கைத் தீவில் இலங்கை அரசு நடத்தியது போர்க்குற்றமல்ல, அப்பட்டமான இனப்படுகொலை என்ற உண்மையை உலக நாடுகள் உணர வேண்டும் என்று வைகோ தெரிவித்துள்ளார். (செ-11)


எமது ஆலோசனையின் மூலம் வெற்றி பெற்ற விசாக்களை ஆய்வு செய்தபின் எம்முடன் நீங்கள் இணைந்து கொள்ளலாம்

- இலங்கைத் தீவில் எமது ஆலோசனையில் மட்டும் கனடாவில் படிக்க உழைக்க 5 வருட விசா
- இத்தாலி உடன் பறக்க சட்ட ஆலோசனை
- செங்கென் நாடுகளிற்கு (பிரான்ஸ், ஜேர்மன், ஸ்பெயின்) உடன் பறக்க அரியவாய்ப்பு
- IELTS இல்லாமலே சைப்பிரஸ், நியூசிலாந்து படிக்க உழைக்கும் வாய்ப்பு

(அனைத்தும் நிபந்தனைகளிற்கு அமைவாக)

7 நாட்களும்(சனி, ஞாயிறு உட்பட)
காலை 8- 6 வரை திறந்திருக்கும்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
www.thisaivisa.com
(C-6518)


## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னுத்துரை செல்லம்மா
### (காரைநகர்)



காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும் மணற்காடு சிவகாமி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை செல்லம்மா 15.02.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான ஆறுமுகம் மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், அம்பலவாணர் இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் அமரர் பொன்னுத்துரை (பெற்றோல் சைட் பொன்னுத்துரை)யின் பாசமிகு மனைவியும் கிருஷ்ணமூர்த்தி, அமரர்களான சண்முகநாதன்(சத்தியமூர்த்தி), துரைராசா (துரையன்), சிவராசா (சிவம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானம்பிகை (பூமணி) சிவமனோரதி, அமரர் சிவயோகி (சாந்தி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மணற்காடு, சிவகாமி அம்மன் கோவிலில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் 16.02.2014 இன்று ஞாயிறு காலை 8 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணற்காடு, சிவகாமி அம்மன் கோவில் வீதி, காரைநகர். (சி-6524)

தகவல்: குடும்பத்தினர்.
0777040356

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி விற்பனைக்கு**

சந்தம்புளியடி காரைநகரில் 5 பரப்பு 3 குழி பரப்பளவுள்ள காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0773711379 0776685078 (5608)

**ஜோதிடர் வருகை**

இந்தியாவின் பிரபல ஜோதிடர் C.M. சாமி (Dip. in Astrology) யாழ். வருகை. ஜாதக விளக்கங்களுடன் மலையாள மாந்திரீக முறைப்படி தீர்வு காணல்.

தொடர்பு : என். பாலசுப்பிரமணியம், அம்மன் வீதி, தலங்காவில் பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலி. Tel : 0777684406 (5573)

**T-Shirt PRINTING 100/-** Front & Back

50 ரீசேட்டுக்கு மேல் 4 வர்ண பிறிண்டிங் றபர் Ink பிறிண்டிங்

Call : 077 4724075

**நிரந்தர தொழில்வாய்ப்புகள்**

வாழ்க்கை வருமானத்தை சமாளிக்க நிரந்தர தொழில்வாய்ப்பு கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/கோடியல்/பிஸ்கட்/சொக்லட்/கோழி இறைச்சி/காமென்ட்/PVC/கிளவுஸ்/புத்தகம்/தண்ணீர் போத்தல்/பெயின்ட்/பிளாஸ்டிக் மற்றும் பல தொழிற்சாலைகளில் * உற்பத்தி * லேபல் * தரம்பிரித்தல் பொதியில் பிரிவுக்கு 18-50 வயது ஆண் - பெண் தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில். நண்பர்கள் + குழுக்களாக ஒரே தொழிற்சாலைகளில் சம்பளம் 18000/- 25000/- 32000/- வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்புக்கள். தொடர்பு : 0775561883

**After O/Level's**

சர்வதேசதரம் வாய்ந்த டிப்ளோமா கற்கைநெறிகள்

நீங்கள் உயர்தரத்தில் "TECHNOLOGY" துறையினை தெரிவு செய்துள்ளீர்களா.....?

DiTEC INTERNATIONAL — Diploma in Information Technology

Duration : 3 months — Free Text Books — assured by edexcel

With an International Certification (Edexcel - UK)

Diploma in English — DiE INTERNATIONAL — assured by edexcel — Duration : 3 months — Free Text Books

FREE DVD with Role-play Videos — Pendrive FREE

உங்கள் உயர்தர ஆங்கில கல்வியில்

சித்தி பெறவும், பல்கலைக்கழக வாய்ப்பை ஆங்கிலக் கல்வியால் நழுவ விடாது சர்வதேச சான்றிதழுடன் வெற்றிபெற்று முன்னேறவும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட "ஆங்கில கற்கைநெறி"

DiSE — Diploma in Software Engineering; DiCA — Diploma in Computerized Accounting; DiBM — Diploma in Business Management; DiWE — Diploma in Web Engineering (assured by edexcel INTERNATIONAL)

புதிய பிரிவுகள் 2014.02.18 காலை 9:00 மணி

07755 888 95

The Sri Lanka's Largest IT, Business & English Education Network

ESOFT COMPUTER STUDIES — 01, Kanagapuram Road, Kilinochchi

ESOFT METRO CAMPUS — Sri Lanka's Largest IT Education Network

Tel : 021 228 5444 | Hotline: 077 55 888 95 (C-6519)


## எங்கள் நிலங்களை...

நிலங்களுக்குச் செல்லவிடு! போன்ற கோஷங்கள், மற்றும் பதாகைகளை தாங்கியவாறு இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போர்க்காலத்தில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்று! எங்கள் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்யாதே!, எங்கள் இடத்தை எங்களிடம் தா! காணாமல் போன உறவு கள் எங்கே? உள் ளிட்ட ஐந்து அம்ச கோரிக்கைகளையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன்வைத்தனர்.

இதேவேளை நேற்றைய தினம் யாழில் இடம்பெற்ற இந்த போராட்டத்தில் தேசிய மீனவர்கள் ஒத்துழைப்பு இயக்கத்தின் அங்கத்தவர்கள், வடமாகாண விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வட மாகாண சபை உறுப்பினர்களான சோ. சுகிர்தன், பா.கஜதீபன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)


மின்சார வசதியில்லாத பிரதேசங்களில் வாழும் கல்வி கற்கும்

**மாணவர்களிற்கான தீர்வு**

சூரிய மின்கலத்துடன் மின்குமிழ், மின்கலம் மற்றும் தேவையான உதிரிகளுடன்

ரூ. 8500/- (5604)

Solar Panel with battery and light (10W Panel, 7A UPS battery, Charge Controller, 9 W LED Bulb) Rs. 8500

தொடர்புகளிற்கு : 0779688330

**இந்திய யாத்திரை**

நாள்கள் 12, யாத்திரீகர் 10,

ஆரம்பம்: 01.03.2014 முடிவு: 13.03.2014

தரிசிக்கும் ஆலயங்கள்:

சென்னை, திருப்பதி, திருச்சி, மதுரை, தஞ்சாவூர், கும்பகோணம், பிரம்மாகோவில், 9 நவக்கிரக ஆலயங்கள் பஞ்சபூதத்திருத்தலங்கள், பொற்கோவில், இராமேஸ்வரம், மேல்மருவத்தூர் உட்பட 40இற்குக் குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம். சகல செலவுகளும் அடங்கலாக கட்டண விவரம் கேட்டு அறிந்து பதிவுசெய்க.

59C 3/3, செட்டியார் தெரு, சிற்றி சொப்பிங் கொம்பிளக்ஸ், கொழும்பு-11.

மேலதிக விவரங்களுக்கு: கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் 0777 680 102

**GERMAN LANGUAGE ACADEMY**
**(ஜேர்மன் கல்லூரி)**

ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் இலகுவான வழியில், ஜேர்மனியில் வசித்து வந்த ஆசிரியரால் ஜேர்மன் தூதரகம் நடாத்தும் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு பல வருடங்கள் எமது நிறுவனத்தின் ஊடாக பல மாணவர்களை முதற் தடவையிலேயே சித்தி அடையச் செய்த ஒரேயொரு நிறுவனம் ஜேர்மன் கல்லூரி.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

* அவதானிப்பு :

பரீட்சைக்கு தோற்றி சித்தியடையாத மாணவர்கட்கு எமது கல்லூரியின் ஊடாக சிறந்த சலுகை காத்திருக்கின்றது. அதாவது சித்தி பெற்ற பின்பு பணத்தை செலுத்திக் கொள்ளலாம்.

German Language Academy

யாழ் ரெக், கண்டி வீதி, சாவகச்சேரி. (5584)

பலாலி வீதி, யாழ்ப்பாணம். Tel :0779707321

**புதிய ஆண்டில் சிங்கர் தரும் விசேட சலுகைகள்**

* மடிக்கணனிகளுக்கு 3 வருட இலவச உத்தரவாதம் மற்றும் வட்டி இன்றிய இலகுதவணைக் கொடுப்பனவு முறைகள்
* தொலைக்காட்சிப்பெட்டிகளுக்கு மாற்றுமுறை விலைக்கழிவுடன் கூடிய வட்டியின்றிய இலகுதவணைக் கொடுப்பனவு முறை.
* Smart தொலைக்காட்சிப்பெட்டிகளுக்கு Blu Ray DVD Player இலவசம்
* சலவை இயந்திரங்களுக்கு வட்டி இன்றிய இலகு தவணைக் கொடுப்பனவுமுறை மற்றும் மாற்றுமுறை விலைக்கழிவு (4 வருட உத்தரவாதம்)
* குளிர்சாதன பெட்டிகளுக்கு pureit water Filter இலவசம் (10 வருட உத்தரவாதம்)
* Air Conditioner களுக்கு (inverter type அடங்கலாக) மாற்றுமுறை விலைக்கழிவு அல்லது 15% விசேட விலைக்கழிவு, மேலும் 6 மாத வட்டி இன்றிய இலகு தவணை கொடுப்பனவு.
* Sofa Set களுக்கு 20% வரை விலைக்கழிவு, மேலும் விசேட சலுகைகள்
* நீர்ப் பம்பிகளுக்கு 5 வருட உத்தரவாதத்துடன் விசேட இலகுதவணை கொடுப்பனவு முறை, மேலும் விசேட விலைக்கழிவுகள்

SINGER SAMSUNG lenovo FOR THOSE WHO DO HITACHI Inspire the Next SISIL Whirlpool GRUNDIG (C-6506)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 021 222 5408 | சுன்னாகம் 021 224 0555 | மானிப்பாய் 021 225 5343 | சங்கானை 021 225 1100 | சாவகச்சேரி 021 227 0197 | கொடிகாமம் 0776433888 | நெல்லியடி 021 226 4937 | பருத்தித்துறை 021 226 3411 | கிளிநொச்சி 021 228 0199 | முல்லைத்தீவு 021 229 0180

**யாழில் கொழும்பு பிறிண்டேர்ஸ்**

போட்டோக்கொப்பி இருபக்கம் 2/=

அச்சுத்துறையில் பல நியாயவிலைகளை அறிமுகப்படுத்திய நாம் மீண்டும் ஒரு நியாயவிலையை அறிமுகப்படுத்துகிறோம்.

ஒரே விடயத்தில் கூடியளவு பிரதிகள் எடுப்பவர்களுக்கு விலைக்கழிவு வழங்கப்படும்.

கலர் பிறிண்ட் 10/=

(C-6460)

666 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 0771974875


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org